
அன்னை கஸ்தூரிபா



ஸ்ரீ. R. S. ருக்மிணி,
B. A.

பதிப்பாசிரியர்
பி. ஸ்ரீ.

தினமணி
வெளியீடு: 8
அணா 12

தினமணி வெளியீடு : 8 பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

அன்னை கஸ்தூரிபா

ஸ்ரீமதி ஆர். எஸ். ருக்மிணி, பி. ஏ.

முன்னுரை

ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்



"இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை"

தினமணி காரியாலயம்
100, மவுண்டு ரோடு
சென்னை
1944

[விலை அணா 12

தினமணி வெளியீடு

இலக்கிய ஆலோசனையாளர்கள்

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்,
ஆழ்வார்பேட்டை, சென்னை.

திரு. கே. சந்திரசேகரன்,
மயிலாப்பூர், சென்னை.

திரு. ஏ. என். சிவராமன்,
"தினமணி" ஆசிரியர்.

திரு. கே. சுவாமிநாதன்,
ஆங்கிலப் பேராசிரியர்,
ப்ரெஸிடென்ஸி காலேஜ், சென்னை.

திரு. டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி,
நுங்கம்பாக்கம், சென்னை.

திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்,
சரித்திரப் பேராசிரியர்,
சென்னை யூனிவெர்ஸிடி.

திரு. ஸி. என். முத்துரங்க முதலியார்,
பேட்டை, செங்கற்பட்டு ஜில்லா.

திரு. ஏ.வி. மெய்யப்ப செட்டியார்,
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், பிரகதி பிக்சர்ஸ்,
சென்னை.

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை,
தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர்,
சென்னை யூனிவெர்ஸிடி.

பொருள் அடக்கம்

முன்னுரை

சீதை, சாவித்திரி போன்ற பதிவிரதா சிரோமணிகளைத் தெய்வமாகத் தொழும் நாடு நமது நாடு. ஒவ்வொரு இந்தியப் பெண்ணும் சீதை சாவித்திரி போல் ஒழுக வேணும் என்பது நமது நாட்டுக்கு உரிய ஒரு தனிப் பண்பாடு. எனினும், உள்ளுக்குள்ளே ஒரு சந்தேகம், ஒரு அவநம்பிக்கை. அவர்களை எல்லாராலும் பின்பற்ற இயலுமா? கவிகளின் கற்பனை - உலகிலே உதித்த லக்ஷியப் பெண்களல்லவா? ராமாயணம், பாரதம் போன்ற இதிஹாஸ, காவியங்களின் மூலம் இலக்கிய வீரர்கள் சிருஷ்டித்துள்ள அபூர்வ சிருஷ்டிகளை உலகிலே நடைமுறையில் நேருக்கு நேராகக் காண்பது எப்படி? இத்தகைய சந்தேகங்கள் தான் உயர்ந்த லக்ஷியங்களை நினைவில் அன்றிச் செயலிலே கொண்டுவர முடியாதபடி செய்துவிடுகின்றன.

நிற்க. பாரத நாட்டுக்கென்றே கவீந்திரர்கள் காட்டிக் கொடுத்த — துவாபர திரேதாயுகங்கள் தந்த — லக்ஷியப் பொக்கிஷத்தை இந்தக் கலியுகமும் பராதீனமும் கொடுக்கும் என்று யார்தான் நம்ப முடியும்? ஆனால், அஹிம்ஸா வீரரான மகாத்மாவையும் அன்னை கஸ்தூரிபா வையும் கலியுகப் பிரஜைகள் என்று தான் சொல்ல முடியுமா? ஸ்ரீராமனைப் பின்பற்றி வனம் புகுந்த அன்னை சீதையை இன்றும் பார்க்கிறோமோ என்று வியக்கும்படி, அன்னை கஸ்தூரிபா தம் ஆருயிர்க் காதலரைப் பின்பற்றி ஆகாக்கான் அரண்மனை புகுந்தார் என்பது உலகப் பிரசித்தமான செய்தி.

அன்னையுடன் தினசரி நெருங்கிப் பழகினவருக்கும் கூட அன்னையின் அத்தகைய பெருமையையும் அருமையான பண்பாடுகளையும் அறிந்து கொள்வது ஸாத்தியமில்லை. காரணங்கள் பல. முக்கியமாக, அன்னையின் தன்

ளட்க்கமும், உலகமெங்கும் ஜாஜ்வல்யமாகப் பிரகாசிக்கும் மகாத்மாவின் மாட்சியும் மறைத்துவிட்டன அன்னையின் மேம்பாடுகளை நாம் அப்படியே உணர்ந்து கொள்ளாதபடி!

இத்தகைய அன்னை மறைந்துவிட்டார் ஆகாக்கான் சிறையிலேயே. மறைந்ததும், கோயில் கொண்டுவிட்டார் பலகோடி இந்திய மக்களின் இதயத்திலே, ஜாதி மத நிற பேதங்களில்லாமலே. இதற்கு இந்த நூலை எழுதி உதவிய கிறிஸ்தவ சகோதரியும் ஒரு சிறிய சாட்சி.

ஸ்ரீ ருக்மிணி, அன்னையின் சரித்திரத்தையும் குணாதிசயத்தையும் தமிழ் மக்கள் அனைவரும் படித்துப் பயன் பெறும்படி தொகுத்து அழகிய தமிழ் நடையிலே வெளியிட்டிருக்கிறாள். அன்னை கஸ்தூரிபாவைப் பற்றிச் சிற்சில புஸ்தகங்கள் ஏற்கெனவே வெளிவந்திருக்கின்றன. எனினும், இத்துறையில் இச் சகோதரி எழுதிய இச்சிறு புஸ்தகம் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் விசேஷமான தொண்டாகும். இவள், அன்னையின் சரித்திரத்திலும் குண சித்திரத்திலும் உள்ள சில ஆழ்ந்த உண்மைகளைக் கண்டு பிடித்து வெளியிட்டிருப்பது இச்சிறு நூலின் சிறப்பியல்பு.

அன்னையுடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் ருக்மிணிக்கு இல்லை யென்றாலும், தன் உள்ளத்திலே அன்னையின் மீது பொங்கிய பக்தி சிரத்தையினாலே, அவருடைய குணாதிசயத்தையும் மனோபாவத்தையும் வாழ்க்கையிலே மறைந்துள்ள தியாக தத்துவத்தையும் கண்டுகொள்வது இவருக்குச் சாத்தியமாகிறது. இந்த ஆசிரியை பி. ஏ., பரிசைஷயில் சிறப்பாகத் தேர்ந்து பங்களூரில் பள்ளிக்கூட ஆசிரியராகக் கொஞ்ச காலம் வேலை பார்த்தாள். இப்போது எம். ஏ.யில் தத்துவ சாஸ்திர மாணவியாகப் பயின்று வருகிறாள். இவ்வளவு இளமையிலே, சிறந்த இலக்கிய நோக்கும் பரந்த தேசிய நோக்கும் உடையவளாய் இந்நூல் எழுதத் துணிந்தது, தேச சேவையிலும் சமுதாய சேவையிலும் இந்த ஆசிரிய மாணவிக்குள்ள காதலைக் காட்டுகிறது.

கஸ்தூரிபா சிறையிலே உயிர் துறந்த வரலாற்றைப் பத்திரிகைகளில் படித்ததும் இவள் உள்ளம் உருகிப் போயிற்று. உடனே மகாத்மாவின் சுயசரித்திரத்தைப் படிக்கத் தொடங்கினாள். கஸ்தூரிபாவின் வரலாறுகளையும் ஆராயத் தொடங்கினார். அத்தகைய முயற்சிகளின் ஒரு பயன் இச்சிறு நூல்.

இன்று, ஸேவா கிராமத்திலே கஸ்தூரிபா ஞாபகார்த்த நிதியை மகாத்மாவுக்கு அளிக்கும் வைபவ தினம். இந்தத் தொகையில் சுமார் 9 லக்ஷம் அளித்த பெருமை தமிழ் நாட்டைச் சேர்ந்தது. இந்தப் புனித நன்னாளிலே ருக்மிணியின் இப் புனிதச் சிறு பணியும், தமிழ்த் தாய்க்கு அர்ப்பணமாகும்படி 'தினமணி வெளியீடு'களில் ஒன்றாக வெளியிடப்படுகிறது. இது தமிழர்களுக்கெல்லாம் உவப்பாகும் என்பது என் நம்பிக்கை.

'மேரு'
மயிலை
2—10—'44.

எஸ். அம்புஜம்மாள்

தினமணி வெளியீடு : 7 | பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

தில்லைக் கோவிந்தன்

எழுதியவர் : திரு. அ. மாதவைய்யா

தமிழ் நாவல் எழுதுவோருக்கு வழிகாட்டிகள் என விளங்கியவர்கள் ஸ்ரீ ராஜம் ஐயரும், அ. மாதவையாவும். குசிகர் குட்டிக் கதைகளையும், பத்மாவதி சரித்திரத்தையும் படித்தவர்கள் ஸ்ரீ மாதவையாவை மறக்கமுடியுமா? அவர் பெரும்பாலும் தமிழிலே எழுதினவராயினும், தில்லைக் கோவிந்தன் என்ற ஒரு வகை நாவல் ஆங்கிலத்திலே மட்டும் வெளிவந்து தமிழில் மொழி பெயர்க்கப் பெறாதுநின்றுவிட்டது. இந்தப் பொருள் பொதிந்த நூலை ஸ்ரீ வி. நாராயணன், எம்.ஏ., எம்.எல்., நல்ல தமிழ் நடையில் மொழி பெயர்த்திருக்கிறார். தேவையானவர்கள் சீக்கிரம் பெயரைப் பதிவு செய்து கொள்ளத் தினமணி காரியாலயத்திற்கு எழுதவும்.



அன்னை கஸ்தூரிபா

(கடைசியில் நோயுற்றிருந்தபோது எடுத்தபடம்)

அன்னை கஸ்தூரிபா

1. இளமைப் பருவம்

பிறப்பு

குஜராத்திலே போர்பந்தர் என்னும் பட்டணத்தில் கோகுல்தாஸ் மாகன்ஜி என்பவருக்கும், விரஜ் குங்வர்பாயி அம்மையாருக்கும் சிமந்த புத்திரியாக 1869-ம் வருஷத்தில் கஸ்தூரிபா அவதரித்தார். அன்னை கஸ்தூரிபா மகாத்மா காந்திக்கு மூன்று மாதத்துக்குச் சிறியவர் என்பது இவருடைய ஒரே சகோதரன் ஸ்ரீ மாதவதாஸ் கோகுல்தாஸின் அபிப்பிராயம். ஆனால், மகாத்மா காந்தியின் மூத்த சகோதரராகிய லக்ஷ்மிதாஸ் காந்தியின் குறிப்பேடுகளின்படி, கஸ்தூரி அன்னை 1869-ம் வருஷம் ஏப்ரல் மாதம் பிறந்ததாகத் தெரிகிறது. அப்படியானால் இவர் மகாத்மா காந்தியை விட ஆறு மாதத்திற்குப் பெரியவர்.

இளமை

கஸ்தூரிபா அம்மையார் புத்தி சாதுரியமுள்ள அழகிய குழந்தையாகவே தோன்றினர். சிறு பிள்ளைப் பிராயத்திலே இவர் தமது பெற்றோருக்குச் செல்லப் பிள்ளை. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் உயர்தரக் கல்வி அவசியம் என்பதை உணராத அந்தக் காலத்தில் கஸ்தூரிபா பிறந்ததினலே பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கும் பாக்கியம் பெறவில்லை. இவருக்கு விவாகமானபொழுது எழுத வாசிக்கத் தெரியாது. பிள்ளைப் பருவத்திலே மன எழுச்சியும், நினைத்ததைச் சாதிக்கும் குணமும் உடையவராக இருந்தார்.

விவாகம்

போர்பந்தரிலே வைசியர் குலப் பிரமுகரான காம் சந்த் காந்தி என்பவருக்கு 1869-ம் வருஷம் அக்டோபர்

மாதம் 2-ந் தேதி, இன்று உலகமெல்லாம் போற்றும் மகாத்மாவாக விளங்குகின்ற மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி அவதரித்தார். மகாத்மாவின் தந்தையான கரம்சந்த் காந்தியும் கஸ்தூரிபாவின் தந்தையான கோகுல்தாஸ் மணிக்கஞ்சியும் நெருங்கிய நண்பர்கள். இந்த நட்பை விவாகத்தின் மூலமாக உறுதிப்படுத்த வேண்டுமென்று இருவரும் நிர்மானித்து விட்டனர். கஸ்தூரிபாவுக்கும் மகாத்மா காந்திக்கும் அவர்களுடைய பதின்மூன்றுவது வயதிலே விவாகமாயிற்று.

இரண்டு சிறுவர்கள் நடத்திய இல்லற வாழ்க்கை

மகாத்மா காந்தியும், அன்னை கஸ்தூரிபாவும் இல்லற வாழ்க்கையில் பிரவேசித்த பொழுது அவர்கள் பதின்மூன்று வயதுச் சிறுவர்கள். அந்தச் சிறுவர்கள் நடத்திய இல்லற வாழ்க்கையைப்பற்றி மகாத்மா காந்தி தம்முடைய சுய சரிதத்திலே வெகு ரசமாக எழுதுகிறார்:

"எனக்கு விவாகமான காலத்திலே ஒரு தம்பிடி அல்லது காலணு (என்ன விலையென்று இப்பொழுது எனக்குச் சரியாக ஞாபகம் இல்லை) விலையிலே சிறு பிரசுரங்கள் வெளியாவதுண்டு. 'இளம் தம்பதிகளின் காதல் வாழ்க்கை', 'சிக்கன வாழ்க்கை', "சிசு விவாகம்,' என்றிவை போன்ற பல விஷயங்கள் அந்தப் புஸ்தகங்களில் எழுதியிருக்கும். அகப்பட்ட போதெல்லாம் நான் அந்தப் புஸ்தகங்களை வெகு ஆவலாக ஆதியோடு அந்தமாய் வாசித்து முடிப்பேன். எனக்குப் பிடிக்காதவைகளை யெல்லாம் உடனே மறந்து விடுவது என் வழக்கம். எனக்குப் பிடித்தவைகளை யெல்லாம் வெகு பொறுமையாக அனுபவத்திலே கொண்டு வருவேன்.

"ஜீவிய கால முழுவதிலும் புருஷன் மனைவியிடம் உண்மையாக இருக்க வேண்டுமென்று அந்தப்

புஸ்தகங்கள் போதித்தன. அந்தப் போதனை என் உள்ளத்தை விட்டகலாதபடி பதிந்துவிட்டது. மேலும் சத்தியத்தின் பேரில் தனிப்பட்டையான ஓர் ஆசை என் உள்ளத்தில் இயற்கையாகவே ஊறிக் கிடந்தது. ஆகையால், என் மனைவியிடம் உண்மை தவறி நடப்பேனோ இல்லையோ என்ற கேள்விக்கு இடமேயில்லை. மேலும், அந்தச் சிறு பிராயத்திலே அவளுக்கு உண்மைக் கேடாய் நடந்துவிடும்படி என் ஜீவியத்தில் என்ன நிகழ்ந்து விடக்கூடும்? ஒன்றுமே இராது.

"உண்மையாய் இருக்கவேண்டும் என்ற விஷயத்திற்குப் பிரதிகூலமான ஒரு சிந்தனையும் இருந்தது. 'உண்மையாக இருப்பேன்' என்று நான் என் மனைவிக்கு உடன்படிக்கை செய்தால், அவளும் அப்படியே 'உண்மையாக இருப்பேன்' என்று எனக்கும் உடன்படிக்கை செய்ய வேண்டும்—என்று எனக்குள்ளே சொல்லிக்கொண்டேன். இந்தச் சிந்தனையால் எனக்குப் பொறாமை உண்டாயிற்று. புருஷனுக்கு உண்மையாய் இருக்க வேண்டியது மனைவியின் கடமை. அந்தக் கடமையை நான் என் உரிமையாக வெகு எளிதில் மாற்றிக் கொண்டேன். அந்தப்படியே எனக்கு உண்மையாக இருக்கும்படி அவளைக் கட்டாயப்படுத்தினேன். அப்படியே அவளை எனக்கு உண்மையாய் இருக்கச் செய்வதிலே எனக்குள்ள உரிமையை விடாப்பிடியாகக் காக்க வேண்டுமென்று நினைத்தேன்.

"என் மனைவியின் கற்பைப் பற்றிச் சந்தேகப்பட ஒரு முகாந்தரமும் இல்லை. பொறாமை ஒருக்காலும் காரணங்கள் தேடித் திரிவதில்லையே? என் மனைவியின் போக்கு வரத்தையும், நடத்தைகளையும் வெகு உஷாராகக் கவனிக்கத் தொடங்கினேன். என்னிடம் அனுமதி வாங்காமல் எங்குமே போகக்கூடாதென்று கட்டளையிட்டேன். இதனால் எங்களுக்குள்ளே மனக்கசப்பும் சண்டை சச்சரவும் ஏற்பட்டன.

"இப்படிப்பட்ட கட்டுக் காவல்கள் உண்மையாகவே ஒரு சிறைச்சாலைதான். இந்தக் கண்டிப்புகளையெல்லாம் சகித்துக் கொண்டிருக்கும் பெண்ணா கஸ்தூரிபா? அவள் தனக்கு இஷ்டமான இடங்களுக்கெல்லாம், இஷ்ட மான நேரத்திலே போய் வரத் தீர்மானித்து விட்டாள். என் அடக்கு முறைகள் அதிகரிக்கவே அவளுடைய சுதந்திரமும் அதிகமாக வளர்ந்தோங்கியது. அதனாலே என் கோபதாபங்களும் அதிகமாயின. கலியாணம் பண்ணிக்கொண்ட சிறு பிள்ளைகளான நாங்கள் இருவரும் ஒருவரோடொருவர் பேசாத நாட்களும் அதிகரித்தன.

"என்னுடைய அடக்கு முறைகளை மீறிய விஷயத்தில் கஸ்தூரிபா நிரபராதிதான் என்று நினைக் கிறேன். கோவிலுக்குப் போகக் கூடாது, தோழிகளைப் பார்க்க வெளியே போகக் கூடாது என்றெல்லாம் கட்டளையிட்டால் சூதுவாதில்லாத எந்தப் பெண்தான் சகித்துக் கொண்டிருப்பாள்? அதைச் செய்யக் கூடாது, இதைச் செய்யக் கூடாது; என்று கட்டுப்படுத்த எனக்கிருந்த உரிமை அவளுக்குமில்லையா? இதெல்லாம் எனக்கு இன்றைக்குத்தான் நன்றாய்த் தெரிகிறது. ஆனால், அந்தக் காலத்திலோ கணவனுக்குள்ள அதிகாரத்திற்குப் பங்கம் வராதபடி காக்க வேண்டு மென்று நினைத்திருந்தேன்.

"இப்படியெல்லாம் சொன்னதினாலே, எங்கள் இல் வாழ்க்கை கலப்பற்ற கசப்பு வாழ்க்கையாக இருந்த தென்று நினைத்துவிட வேண்டாம். என்னுடைய கண்டிப்புக்கெல்லாம் அன்புதான் அஸ்திவாரம். என் மனைவியை மற்றவர்களுக்கெல்லாம் முன் மாதிரியாகச் செய்து விட வேண்டுமென்று விரும்பினேன். அவள் மனத்தூய்மையோடு, வாழவேண்டும்; நான் படிக் கிறவைகளை அவள் படிக்க வேண்டும்; என்னுடைய சிந்தனைகளிலும் வாழ்க்கைப் போக்கிலும் அவள் என்னோடு இரண்டறக் கலக்க வேண்டும்; இதுவே என் ஆவல்.

"அவளுக்கும் இதே விதமான ஆவல் இருந்ததோ என்னவோ? எனக்குத் தெரியாது. அவள் ஒரு பேதை. சுயேச்சையான மனப்பான்மையுடையவள். குன்றுத் முயற்சியுடையவள். ஆனால், என்னளவிலே அவள் பேசாமடந்தை. என் படிப்பு அவளையும் படிக்கத் தூண்டியதோ இல்லையோ என்பது எனக்கு ஞாபகம் இல்லை. ஆகையால், என் ஆவல் எல்லாம் ஒரு தலையாகவே இருந்தது என்று நினைக்கிறேன். என் ஆசையெல்லாம் ஒரே ஒரு ஸ்திரியின்பேரில் ஊன்றி நின்றது. அந்த ஆசை எங்களிருவருக்குள்ளேயும் அந்யோந்யமாக ஏற்பட்டிருக்க வேண்டுமென்று விரும்பினேன். முதலிலே அந்யோந்யமான ஆசை ஏற்படாதிருந்த போதிலும் எங்கள் வாழ்க்கையெல்லாம் கலப்பற்ற துயர வாழ்க்கையாக மாறிவிடவில்லை. ஏனென்றால், ஒரு கக்ஷியில் காதல் வெகு தீவிரமாக இருந்தது.

"எனக்கு அவளிடத்திலே மட்டுமிதமில்லாத அன்பு இருந்தது. பள்ளிக்கூடத்தில் படிக்கும் நேரங்களில்கூட அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பேன். எப்போது பொழுது சாயுமோ, எப்போது இரவு நேரம் வருமோ, எப்போது அவளைப் பார்க்கலாமோ என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்குவேன். அவளைப் பிரிந்திருப்பதை எனக்குச் சகிக்க முடியவில்லை. இரவிலே வெட்டிப் பேச்சும் வம்பளப்புமாகப் பொழுது போக்கி விடுவேன். இப்படியெல்லாம் கங்கு கரையில்லாத காதல் கொண்டிருந்தேன்; என்றாலும், கடமையின் பேரில் அதைவிடப் பெரிய காதல் அந்தக் காலத்திலேயே ஏற்பட்டிராவிட்டால், நான் நோய்வாய்ப்பட்டாவது, அகால மரணமடைந்தாவது மிகவும் சீர்கேடான வாழ்க்கை நிலைக்கு வந்திருப்பேன். எனக்கென்று குறித்திருந்த கடமைகளையெல்லாம் நான் பொழுது விடிவதற்கு முன்னே செய்து முடிக்க வேண்டும். எவரிடத்திலும் பொய் சொல்ல என்னாலே முடியாது. இந்தக் குணந்தான் என்னைப் படுகுழியில் விழாமல் தப்புவித்தது.

"கஸ்தூரிபாவுக்கு எழுதப் படிக்கத் தெரியாதென்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அவளுக்குக் கல்வி கற்று கொடுக்க வேண்டுமென்று எனக்கு வெகு ஆசை. காமக் கலப்புடைய என் காதல் அவளுக்குப் பாடம் கற்றுக் கொடுக்க நேரம் தரவில்லை. எப்பொழுதும் அவளுடைய இஷ்டத்திற்கு விரோதமாகவே பாடம் கற்றுக் கொடுக்கும்படி இருந்தது. அதுவும், இரவு நேரத்திலே தான் கற்றுக் கொடுக்க நேரம் கிடைக்கும். எங்கள் பெரியவர்கள் முன்னிலையிலே நாங்கள் ஒருவரையொருவர் சந்திக்கவும் துணியவில்லை. அப்படியிருக்கப் பேசத் துணிவோமா? அந்தக் காலத்திலே காட்டியாவாடிலே, பயனற்ற காட்டுமிராண்டித்தனமான, 'பர்தா' ஒழுக்கம் இருந்தது. அது இன்றைக்கும் ஒரு தினிசிலே இருக்கத் தான் செய்கிறது. இப்படியே பல இடையூறுகள் ஏற்பட்டிருந்தன. அவளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க முடியாதபடி. இளமைப் பருவத்திலே கஸ்தூரிபாவுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதற்குச் செய்த முயற்சிகளெல்லாம் கைகூடாமற் போயின. நான் காம உறக்கத்தைப் புறம்பே எறிந்து விழிப்புற்றபோது வாழ்க்கையில் ஏற்பட்ட பல பிரச்னைகளில் வெகு தீவிரமாக ஈடுபட நேர்ந்ததினால், அப்பொழுதும் அவளுக்குக் கல்வி கற்பிக்க ஓய்வு கிடைக்கவில்லை. ஆசிரியர்களை அமர்த்தி அவளுக்குக் கல்வி கற்பிக்கவும் தவறினேன். இவற்றின் விளைவாக, கஸ்தூரிபா மிகவும் கஷ்டத்தோடு சாதாரணக் கடிதங்கள் எழுதவும், எளியநடையிலுள்ள குஜராத்திப் புஸ்தகங்களை வாசிக்கவுந்தான் முடிந்தது. எனக்கு அவளிடத்திலே இருந்த அன்பு காமக் கலப்பற்றதாக இருந்திருந்தால், இன்றைக்கு அவள் கற்ற பண்டிதையாய் இருந்திருப்பாள் என்பதில் சற்றும் சந்தேகம் இல்லை. அப்படிப் பட்ட நிலையில் இருந்திருந்தேனாைல் அவளுக்குப் படிப்பிலே ஏற்பட்டிருந்த வெறுப்பை முற்றிலும் வென்றிருப்பேன். தூய்மையான அன்பிற்கு அசாத்தியமானது எதுவுமே இல்லையென்று எனக்கு நன்றாய்த் தெரியும்.

"சிசு விவாகமென்ற கொடிய ஹிந்து வழக்கத்தோடு சம்பந்தப்பட்ட இன்னொரு வழக்கமும் உண்டு. பிந்திய வழக்கம் முந்திய வழக்கத்தின் தீமைகளை ஒருவாறு குறைக்கும் இயல்புடையது எனலாம். இளம் தம்பதிகளை நெடுங்காலம் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கப் பெற்றோர் விடுவதில்லை. சிறு பிள்ளைப் பருவத்து மனைவி ஒரு வருஷத்தில் பாதிக்குமேல் 'தன் பிறந்தகத்திலே தங்கி விடுகிறாள். எங்கள் விஷயத்திலேயும் அப்படித்தான். எங்களுக்குக் கலியாணமான தினத்திலிருந்து ஐந்து வருஷங்கள் மட்டும் (13-வது வயதிலிருந்து 18-வது வயது மட்டும்) நாங்கள் ஆக மொத்தம் மூன்று வருஷங்கள் கூட ஒன்றாய்ச் சேர்ந்து வாழ்ந்தறியோம். எப்போதாவது ஐந்தாறு மாதங்களாகக் கூடி வாழ நேரிட்டால் என் மாமனார் வீட்டிலிருந்து என் மனைவிக்கு அழைப்புப் பத்திரம் வந்து விடும். அந்தக் காலத்திலே அந்த அழைப்புப் பத்திரங்கள் எனக்குக் கொஞ்சமேனும் பிடிக்கவில்லை. என்றாலும் அவை எங்களைக் காத்து ரக்ஷித்தன. என்னுடைய பதினெட்டாவது வயதிலே நான் இங்கிலாந்திற்குச் சென்றேன். இது எங்களுக்கு ஆரோக்கியமான ஒரு பிரிவாகவே இருந்தது."

சுய சரிதத்திலே வாசிக்கிற இந்த வரலாறுகள் கஸ்தூரிபாவை நமக்கு முன்னே பிரத்தியக்ஷமாகக் கொண்டு வந்து நிறுத்துகின்றன. உலகத்திற்கெல்லாம் குருவாக இருக்கும் மகாத்மா காந்தி இந்த ஸ்தானத்துக்கு வர, முதல் முதலிலே என்ன செய்தார் என்று தெரிகிறது. அவருடைய முதல் சிஷ்யை கஸ்தூரிபா. இவரை வைத்துக் கொண்டு அவர் தம்முடைய ஆராய்ச்சிகளை ஆரம்பித்தார். உலகத்திலே அவர் பரிக்ஷித்துப் பார்க்கவேண்டியவைகளையெல்லாம் இவ்விடத்திலேயே பரிக்ஷித்துப் பார்த்தார். தம்முடைய அதிகாரத்தையெல்லாம் இவரிடத்திலே செலுத்தினார். இந்த ஆராய்ச்சிகளுக்கெல்லாம் அவருக்கு உதவியாக இருந்த நூல்கள் பழங்காலத்துச் சிந்தனைப் போக்கிலே வெளியான தம்பிடிப் புஸ்தகங்கள்.

அளவு கடந்த அன்பிற்கும், காதலுக்கும் பொறாமை யுண்டு. கடவுளும், தம் அடியார்கள் தம்மை யன்றி மற்றொன்றையும் காதலிக்கலாகாது என்று விரும்புகிறார். அன்பு மயமான கடவுளுக்கு இருக்கும் இந்த லக்ஷணம், அவருடைய அடியார்களுக்கும் இல்லாமல் போவதில்லை. மகாத்மா காந்தியின் இளம் பிராயத்துக் காதலிலே நம்மைத் தொட்டசைக்கிற ஒரு விஷயம் இருக்கிறது. அத்தனை பெரிய காதலரான அவரும் தம் மனைவியாரைப் புண்படுத்தாமல் இருக்கவில்லை. தாம் கையாண்ட கண்டிப்புகளும் அடக்குமுறைகளும் தம் மனைவியைச் சீர்திருத்தி உத்தம பத்தினியாக மாற்றிவிடுமென்று நினைத்தார்.

பதிபக்தியும் பதி சேவையுமே வடிவெடுத்து நின்றவர் கஸ்தூரிபா. இவர் தமது கணவருடைய செய்கைகளின் உட்கருத்தை அறிந்து கொண்டார். அவைகளிலே நல்லவைகளை ஏற்றுக்கொண்டு அல்லவைகளைக் கழித்துத் தள்ளினார். தம்முடைய ஆழங் காணமுடியாத காதல் நிலையிலே நின்று கொண்டு, கணவருடைய செய்கைகளிலே தர்மமானவைகளுக்கு உடன்பட்டு அதர்மமானவைகளுக்குக் கடைசிமட்டும் உடன்படாமலே நின்றார்.

உத்தம பத்தினியின் லக்ஷணங்களைத் தமது மனைவிக்குக் கற்றுக் கொடுக்க நினைத்தார் சிறுவரான மோகனதாஸ் காந்தி. உபாத்தியாயர் வெகு சீக்கிரம் மாணாக்கராய் விட்டார். மாணாக்கி உபாத்தினியாகி விட்டார். நவீன காலப் பண்புப் பார்வையிலே கஸ்தூரிபா எழுதப் படிக்கத் தெரியாதவராகத் தோன்றலாம். என்றாலும் கீழ் நாட்டுக்குரிய பண்பும், ஆத்மிக ஒளியும் உடையவராய் இருந்தார். தம்முடைய வாழ்க்கையிலே தமக்கெனக் குறித்திருந்த நிலை இன்னதென்றும், தாம் செய்ய வேண்டியவை இன்னதென்றும், அன்னையாருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. 'நவீன காலத்துப் பெண்களைப் போல நாமும் படித்தோமில்லையே' என்று இவர் எவ்வளவாகக்

கவலைப்பட்டாரோ, எதற்காகத் துக்கப்பட்டாரோ? நமக்குத் தெரியாது. என்றாலும், இந்தக் கல்வி யில்லாக் குறை, குறித்திருந்த கடமைகளைச் செய்வதற்குத் தடையாக இருக்கவில்லை என்பது மட்டும் இவரோடு பழகியவர்கள் கண்ட விஷயம்.

பெண்களிடத்திலே சாதாரணமாகக் காணப்படும் பல விதமான பலவீனங்கள் கல்விப் பயிற்சியில்லாத அன்னையாரிடத்தில் காணப்படவில்லை என்பது ஆச்சரியந்தான். அந்தரங்கத்திலே புருஷனைப் பற்றிய சந்தேகம், பொறாமை, நிலையின்றித் திரியும் மனப்போக்கு, அது வேணும், இது வேணும், அது இல்லை, இது இல்லை என்று எண்ணி வருந்தும் மனப்பான்மை இவரிடத்திலே சற்றும் இருக்கவில்லை. பலவீனங்கள் ஆண்களை விடப் பெண்களிடத்தில் அதிகமாகக் காணப்படுவது ஸகஜம். இப்படிப்பட்ட பலவீனங்களினால், கண்ட கண்டபடி தமது மனத்தைத் திரிய விடாமல் தடுக்கக்கூடிய பல ஸத் கருமங்களிலே ஈடுபட அறிந்திருந்தார் நமது அன்னையார்.

தூய அன்பை அஸ்திவாரமாகக் கொண்ட தம்பதிகளின் வாழ்க்கை ஒருபொழுதும் சந்தோஷமற்றதாகாது; பயனற்றுப் போகாது. அந்த அன்பின் விளைவாக ஏற்படுகிற கஷ்டங்களும் வருத்தங்களும் வாழ்க்கையைக் கசப்பாக்காமல், ஆத்ம ஐக்கியத்தை உண்டு பண்ணவே உதவுகின்றன. ஆகையால், அன்னை கஸ்தூரிபா தம் கணவருடைய அடக்குமுறைகளினாலே மனச் சலிப்பு அடைந்தார் என்று நாம் ஒருபொழுதும் எண்ணக் கூடாது. தமது நாயகருடைய எல்லாச் செய்கைகளையும் மௌனமாகப் பார்த்துக்கொண்டு, அவரை இஷ்டப்படி விட்டுவிடும் மனப்போக்கும் அம்மையாரிடம் இருக்கவில்லை. தமது நாயகருடைய எல்லாச் செய்கைகளிலும் அவருடைய மனம் ஈடுபட்டிருந்தது. என்றாலும் தப்பான ஒரு காரியம் நடக்கும் என்று தெரிந்தால் உடனே தமது நாயகரை எச்சரிக்கத் தயங்கமாட்டார்.

மகாத்மா காந்தி ஹைஸ்கூலில் படித்துக்கொண்டிருந்த பொழுது அவருக்கு ஒருகெட்ட சிநேகிதன் ஏற்பட்டான். அவன் அவருக்குப் பல கெட்ட பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுத்தான். இதைப் பற்றி அவரை அவ்வுடைய தாயாரும் தமையனாரும் எச்சரித்தபோது கஸ்தூரிபாவும் எச்சரித்தார். இவ்விஷயமாக மகாத்மா காந்தி பேசும் பொழுது "புருஷனுக்குப் புத்திசொல்ல மனைவிக்கு என்ன அதிகாரம் என்றது கணவன் என்ற நிலையில் நின்று பெருமை கொண்ட என் உள்ளம்" என்கிறார். கல்வியறிவில்லாத ஒரு சிறுமியாயிருந்தபோதிலும், சேர்க்கைத் தோஷத்தினால் தம் கணவருக்கு நேரிடக்கூடிய தீமையை முன்னதாகவே அறிந்து சொல்லும் திறமையுடையவராக இருந்தார் என்பது அன்னையாருடைய சூக்ஷ்ம புத்தியை ஸ்பஷ்டமாக விளக்குகிறது. தமது நாயகருக்கு நன்மையானது எது, தீமையானது எது என்று அறிந்து கொள்ளும் அறிவோடு நின்றுவிடவில்லை கஸ்தூரிபா. தமது நாயகருக்கு நேரிடக்கூடிய அபாயங்களைப் பற்றி முன் ஜாக்கிரதையாக இருக்கப் பழகி யிருந்தார் அந்தச் சிறு பிராயத்திலேயே.

மனைவியின் கற்பொழுக்கத்தைப் பற்றிச் சந்தேகப் படும்படியாக அந்தப் பொல்லாத சிநேகிதன் காந்தியடிகளுக்குப் போதனை செய்தான் என்றும், அதற்கு இசைந்து அவரும் தமது தர்ம பத்தினியின் பேரிலே சந்தேகம் கொண்டார் என்றும் சுயசரிதையிலே வாசிக்கிறோம். இளமையிலே அன்னை கஸ்தூரிபாவுக்கு ஏற்பட்ட ஒருபெரிய சோதனை இது. "சந்தேகத்தினாலே என் மனைவிக்குச் செய்த கொடுமைகளை எண்ணும் போதெல்லாம் நானே என்னை மன்னித்துக்கொள்ள முடியாத நிலைமையிலிருக்கிறேன். இந்த மாதிரியான கொடுமைகளைச் சகிக்க இந்தியப் பெண்களைத்தவிர வேறு யாராலும் முடியாது. அதனாலேதான் இந்தியப் பெண்கள் பொறுமையின் வடிவமென்று நான் எப்போதும் சொல்லுகிறேன். ஒரு பாவமும் செய்தறியாத ஒரு வேலைக்காரன்மேல் சந்தேகப்பட்டால், அவன் வேலையை ராஜிநாமாச் செய்து

விடுவான். அப்படியே ஒரு மகனும் தன் தகப்பன் வீட்டை விட்டு வெளியேறுவான். ஒரு நண்பன் நட்பை ஒழித்துப் பிரிந்து போவான். மனைவிக்குத் தன் நாயகன் மேல் சந்தேகம் ஏற்பட்டால் மௌனமாகச் சகித்துக் கொண்டிருப்பாள். ஆனால் கணவனுக்கு மனைவிமேல் சந்தேகம் ஏற்பட்டாலோ, அவள் அடியோடு நாசமாக வேண்டியதுதான். அவளுக்குப் புகலிடம் ஏது? ஒரு ஹிந்து மனைவி விவாக ரத்துக்காக நியாய ஸ்தலத்தைத் தேடமாட்டாள். சட்டங்களினாலே அவளுக்குப் பரிகாரம் ஏற்படாது. அன்று இப்படிப்பட்ட நிலைமைக்கு என் மனைவியைக் கொண்டு வந்ததற்காக இன்றும் நான் வெகுவாகத் துக்கப்படுகிறேன். எனக்கு மன்னிப்பே கிடையாது" என்று எழுதுகிறார் காந்தியடிகள்.

"அஹிம்சை என்பதன் பரிபூரண ஞானோதயம் எனக்கு ஏற்பட்டபோதுதான் இந்தச் சந்தேகப் பேய் என்னை விட்டு அகன்றது. அப்பொழுதுதான் பிரம்மசர்ய நிலையின் மாட்சிமையான தரிசனம் எனக்குக் கிடைத்தது. மனைவி கணவனுக்கு அடிமை அல்லவென்றும், அவள் அவனுக்குத் தோழியும், துணைவியும், சுக துக்கங்களிலே சரிசமானமான பங்காளியுமாக இருக்கிறாள் என்றும் அப்பொழுதுதான் உணர்ந்தேன். மனைவியின் கற்பொழுக்கங்களைப் பற்றிச் சந்தேக விபரீதங்கள் நிறைந்த அந்தகாரமான அந்த நாட்களையும் என் மதியீனத்தையும் கொடூரங்களையும் நான் நினைக்கும்போதெல்லாம் எனக்கே என்பேரில் வெறுப்புத் தட்டுகிறது. என் பொல்லாத நண்பர்களிடத்தில் குருட்டுத்தனமாக நம்பிக்கை வைத்தேனே என்று துக்கப்படுகிறேன்" என்றும் எழுதுகிறார்.

அன்னை கஸ்தூரிபாவின் பொறுமையே பொறுமை! பாரததேசத்துப் பெண்ணுலகத்துக்குப் பொறுமையைப் போதிக்கும் பூமாதேவி போன்றவர். மகாத்மா காந்தியின் ஜீவியம், விநோதமான சம்பவ அலைகள் ஓயாமல் மோதிக் கொண்டிருக்கும் மகா சமுத்திரம். இந்தக் கடலிலே

அவருக்குத் துணைவியர்க்க் கப்பலோட்டிச் செல்வது லேசான காரியமா? ஜீவிய காலமெல்லாம் அளவற்ற தைரியத்தையும் பொறுமையையும் கையாடி யிரா விட்டால் அன்னை கஸ்தூரிபா ஒருபொழுதும் அந்தக் கடலிலே சஞ்சரித்திருக்க முடியாது என்பது திண்ணம்.

2. அன்னை

மகாத்மாவின் தந்தையின் மரணம்

அன்னை கஸ்தூரிபாவுக்கு விவாகமான மூன்றுவது வருஷத்திலே ஒரு குழந்தைக்குத் தாயாகும் காலம் நெருங்கியது. அப்பொழுது மகாத்மா காந்தி பள்ளிக்கூடத்திலே படித்துக்கொண்டிருந்தார். அச்சமயத்திலே அவருடைய தந்தை வியாதியாயிருந்தார். படிப்பு, பெற்ருேர் பக்தி முதலிய கடமைகளை நன்கு உணர்ந்தவராக இருந்தாலும், தமது காம வுணர்ச்சியை அடக்கத் திறனில்லாதவராக இருந்தர் காந்தி. சுயசரிதையில் அவர் "என் தகப்பனருக்குக் கால் பிடித்துக்கொண்டிருக்கும்போது கூட என் மனம் படுக்கையறையைச் சுற்றி வட்டமிடும்" என்று வருத்தத்தோடும் வெட்கத்தோடும் கூறுகிருர். தகப்பனர் இறந்த தினத்தில், இரவிலே, தந்தைக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தபின் ஆவலாகத் தன் படுக்கையறைக்குச் சென்ருர். அங்கே அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த பேதை மனைவியை எழுப்பினர். இவரை எழுப்பியபின் ஐந்து, ஆறு நிமிஷங்கள் செல்லவே, தந்தை இறந்துவிட்டதாகச் செய்தி வந்தது. கடைசி நேரத்தில் தந்தையைப் புறக்கணித்துச் சிற்றின்பத்தைப் பின்பற்றிச் சென்ற தம் மனநிலையை நொந்துகொண்டு, தமது சுயசரிதையில் பின்வருமாறு எழுதுகிருர்:—

"நான் என் தகப்பனருடைய அறைக்கு ஓடினேன். மிருகப் பிராயமான இந்தக் காம உணர்ச்சி என்னைக்

கபோதியாக்கி யிராவிட்டால் என் தந்தையாருடைய் க்கடைசி நேரத்தில் அவரை விட்டுப் பிரிந்து இப்படி மன வேதனைப்பட நேர்ந்திராதே. அவருக்குக் கால் பிடித்துக் கொண்டிருந்திருப்பேனே. அவர் என் மடியிலேயே இறக்கும் பாக்கியம் பெற்றிருப்பேனே. ஆனால், அதற்குக் கொடுத்து வைத்தவர் என் சிற்றப்பா தான். கடைசி நேரத்துப் பணிவிடைகள் செய்யும் பாக்கியம் அவருக்குத்தான் கிடைத்தது."

முதல் குழந்தையின் பிறப்பும் இறப்பும்

விழித்திருந்து தந்தைக்கு உதவி சேய்யவேண்டிய கடைசிநேரத்தில், கூட இருந்து செய்யவேண்டியவை க்களைச் செய்யாதபடி தம்மைத் தடுத்த காம இச்சையை நினைத்து மிகவும் மனமுடைந்தார் காந்தியடிகள். தகப்பனார் இறந்த சில தினங்களுக்குப் பிறகு கஸ்தூரிபாவுக்குக் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை மூன்று நாலு நாட்கள் இருந்தபின் இறந்தது.

ஒரு பெண்ணுடைய பிற்கால ஸந்தோஷத்திற்கும், ஸ்வதந்திரத்திற்கும், வாழ்க்கைப் போராட்டத்தில் எதிர்த்து நிற்கும் தைரியத்திற்கும் காரணமாய் இருப்பது ஒரு குழந்தையே. மேலும் ஹிந்து சமூகக் கட்டுப் பாட்டின்படி ஒரு பெண்ணுக்குச் சமூகத்திலே பதவியையும் மதிப்பையும் கொடுப்பது குழந்தைதான். மலடி குடும்ப வாழ்க்கைக்கு ஆகாதவள் என்று நினைக்கும் மனப் பான்மையுடையது ஹிந்து சமூகம். தன் புக்ககத்திலே செல்வாக்கும் உரிமையும் கொடுப்பது குழந்தைதான். இப்படிப்பட்ட மனோகதியுடைய பெண்ணுலகத்திலே தோன்றியவர்தானே கஸ்தூரிபா. தலைச்சன் இறந்ததைப் பற்றி எவ்வளவாகத் துக்கப்பட்டிருப்பார்? மாமனார் இறந்ததும், அதையடுத்துத் தம் தலைச்சன் இறந்ததும் அவருக்குச சொல்ல வொண்ணாத துக்கத்தை விளைத் திருக்கும் என்பதற்குச் சந்தேகமுண்டா?

இளம் பிராயத்திலே ஆண்களைவிடப் பெண்கள் சீக் கிரமாக வளருகிறார்கள். மகாத்மா காந்திக்கும் பதினாறு

வயதுதான். அந்தப் பருவத்திலே இந்தச் சம்பவங்களினால் அவருக்கு ஏற்பட்ட துயரத்தைவிட் அதிகமான துயரம் ஏற்பட்டிராதா பதினாறு வயதான கஸ்தூரிபாவுக்கு? ஆனால், மகாத்மாகாந்தி சத்திய சோதனையிலே தம்முடைய துயரத்தையும் மன நிலையையும் பற்றிச் சொல்லுகிறாரே யல்லாமல் தாயுலகத்திற் கெல்லாம் முன்மாதிரியாக விளங்கும் அன்னை கஸ்தூரிபாவுக்கு அக்காலத்தில் ஏற்பட்ட துயரத்தைச் சித்திரித்துக் காட்டவேயில்லை.

இரண்டாவது குழந்தையின் பிறப்பு

1888-ம் வருஷம் மகாத்மா காந்தி மெட்ரிகுலேஷன் பரிக்ஷை தேறினதும், சட்டம் படிப்பதற்காக இங்கிலாந்திற்குச் செல்லவேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் நடந்தேறின. அன்னை கஸ்தூரிபாவின் வாழ்க்கையை நடத்திய பரமன், தன் அடியாள் நாயகனைப் பிரிந்து தனியே இருக்க நேரிடுமே என்று இரங்கி, அந்தப் பிரிவு ஏற்படுவதற்குக் கொஞ்சம் முன்னதாகவே ஒரு குழந்தையை அருளினார். கஸ்தூரிபா குழந்தையோடு ராஜ்கோட்டிலே மாமனார் வீட்டில் தங்கியிருந்தார். இந்த மூன்று வருஷத்துப் பிரிவு அன்னையாருக்குத் துயரத்தை விளைக்காமல் இருக்கவில்லை. பதினெட்டு வயது; இளம் பருவம்; உலகத்தில் மற்ற அநேகர் மணம் புரிந்து இல்லற இன்பங்களை அனுபவிக்க நினைக்கும் தருணம். பரஸ்பரம் ஒருவரை யொருவர் தெரிந்து கொண்டு வாழ வேண்டிய காலம். அப்படிப்பட்ட நிலையிலே பிரிவு நேர்ந்ததென்றால் யார்தான் சகிப்பார்கள்?

மாமனார் வீட்டில் வேலை அதிகம். மாமிக்குக் கீழ்ப்படிந்து வேலை செய்ய வேண்டும். இவரிடத்திலே அன்பு பாராட்டிய மாமியும் விரைவிலே காலமாகி விட்டார். இப்பொழுது எல்லாக் காரியத்தையும் இவர்தான் தம் ஓரகத்தியோடு சேர்ந்து கவனிக்க வேண்டியதாயிற்று.

மகாத்மா இங்கிலாந்திலிருந்து திரும்பி வருதல்

1891-ம் வருஷம் மகாத்மா காந்தி பார்-அட்-லாவாக இந்தியாவுக்குத் திரும்பினார். திரும்பி வந்தபோது தங்களுக்கிடையே இருந்த உறவைப் பற்றி மகாத்மா காந்தி எழுதுகிறதாவது :—"என் மனைவிக்கும், எனக்கும் இருந்த உறவு நான் விரும்பினவண்ணமே இருக்கவில்லை. மூன்று வருஷகாலம் பிரிந்து இங்கிலாந்திலே வாழ்ந்த போதிலும் என் பொறாமை என்னை விட்டு அகலவில்லை. அற்பச் சிறு விஷயங்களிலும் அவள் பேரிலே எனக்கிருந்த சந்தேகங்கள் வளர்ந்தன. ஆகையால் என் உள்ளத்திலே மிகவும் அருமையாகப் போற்றி வந்த ஆசைகளெல்லாம் நிறைவேறாமலே இருந்து விட்டன. என் மனைவிக்கு எழுத வாசிக்கக் கற்று கொடுக்க வேண்டும் என்றும், அவளுடைய படிப்பு விஷயத்தில் உதவி புரிய வேண்டும் என்றும் நான் தீர்மானித்திருந்தேன். ஆனால், காம இச்சைகள் குறுக்கிட்டன. என்னிடத்திலிருந்த குறைவுகளினாலே அவள் கஷ்டப்பட நேர்ந்தது. ஒரு முறை அவளை அவளுடைய தாய் வீட்டுக்கு அனுப்பினேன். அங்கே அவள் வாழ்க்கையை மிகவும் கசப்பாக்கிய பிறகுதான் அவளைத் திரும்ப ஏற்றுக் கொள்ள இசைந்தேன். இப்படி நான் செய்ததெல்லாம் மிகப்பெரிய தப்பிதம் என்று பிற்காலத்திலேதான் உணர்ந்தேன்."

அச்சமயத்தில் அன்னையாரின் மன நிலை

மூன்று வருஷத்துப் பிரிவுக்குப் பிறகு தமது நாயகர் வருகிறாரென்ற செய்தியைக் கேட்டபோது கஸ்தூரிபா எவ்வளவு ஆவலோடு அந்தச் சந்திப்பை எதிர்பார்த்திருப்பார்? முன்னே தம் விஷயமாகக் கொண்டிருந்த சந்தேகமும் பொறாமையும். மூன்று வருஷகாலத்திற்குள்ளே மறைந்து போயிருக்குமென்றும், புதிய அன்போடு தம்மை ஏற்றுக் கொள்வாரென்றும் இவர் நினைத்திருக்கலாம். ஆனால் அவர் திரும்பி வந்தபோதே

இவர் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்கவில்லை. மேற் கண்டபடி மகாத்மா காந்தியின் செய்கையும் ஒழுக்கமும் இவருக்குப் பெருந் துயரத்தையே விளைத்தன.

இப்படியெல்லாம் அவர் துன்பப்படுத்தினாலும், கஸ்தூரிபா அஞ்சவில்லை. சத்தியத்தைத் தவிர மற்றொரு தர்மம் இல்லை. சத்தியமே என்றைக்கும் ஜயம் பெறும் என்று மகாத்மா காந்தி தம்முடைய ஜீவியத்தின் பிற்பகுதியிலே உலகமெங்கும் கொட்டி முழக்கிய உண்மையை அன்னை அந்த இளம்பிராயத்திலேயே உண்மையாகத் தம் அனுபவத்தில் சாதித்தார். அந்தக் காலத்திலே இவர் தமது தைரியத்தைக் கைசோர விட்டிருந்தால், அவருடைய இல்லற இன்பத்திற்கு எவ்வளவு மகத்தான நஷ்டம் ஏற்பட்டிருக்கும்! தியாக சௌந்தரியமும், மௌனமாகத் துயரத்தைச் சகிக்கும் குணமுமே விவாகம் செய்து கொள்ளும் இந்தியப் பெண்கள் அனைவருக்கும் மகத்தான லக்ஷணமாக இருத்தல் வேண்டும் என்பதைக் கஸ்தூரிபா அந்தக் காலத்திலிருந்தே தமது ஜீவிய திருஷ்டாந்தத்தினால் பாரத தேசமெங்கும் விளம்பரம் செய்தார். அநியாயமாகப் பழிபாவங்களைச் சுமத்துகிறபோதும், கொடுமையாக நடத்துகிறபோதும், கணவன் மீதுள்ள அன்பை இழந்து மனங் கசந்து வாழ்க்கையை விறுக்கிக் கொள்வதுதான் சாதாரண ஜனங்களுடைய இயல்பு. ஆனால், அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே ஜயக் கொடி நாட்டி ஜீவியத்தைப் பயன்படச் செய்யவேண்டுமானால், மகா தைரியத்தோடு நிறை காக்க வேண்டும்.

> சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்? மகளிர்
> நிறைகாக்கும் காப்பே தலை

என்ற திருக்குறளின் உண்மையை நன்றாய் உணர்ந்தவர் நமது அன்னை.

சகிக்கும் குணந்தான் அன்பின் லக்ஷணம். தாம் நிரபராதி என்றும் தமது நாயகரைத் தவிர வேறு தெய்வம் தொழுவதில்லையென்றும் அன்னையார் நன்றாய்

உணர்ந்திருந்ததினாலே, அறியாமையினால் தமது நாயகர் செய்த கொடுமைகளையெல்லாம் 'முறு முறு'க்காமல் சகித்தார். அன்பினாலே ஏற்படுகிற சோதனைகள் ஆண்களை விடப் பெண்களுக்கு அதிகம். பெண்மை-வாழ்வெல்லாம் அன்பையே அடிப்படையாகக் கொண்டது என்பதற்குச் சந்தேகமேயில்லை.

ஆணுக்கு உடம்பிலே பலம் உண்டு, சரீர மானஸிகப் பிரகாரமாகச் சோர்வின்றி உழைக்கத் திறன் உண்டு. விஷயங்களை விரைவில் கிரகிக்க மூளை உண்டு; என்றாலும் பெண்ணுக்கு உள்ள ஆழமான அன்பு அவனிடத்திலே கிடையாது. பெண்ணைப் போன்ற உண்மையான ஒழுக்கம் அவனுக்கு இல்லை. சுக துக்கங்களைச் சகிப்பதிலே அவன் பெண்ணுக்கு இணை ஆகமாட்டான். பெண்ணினுடைய பக்திக்கு இணையாகாது, ஆணுடைய பக்தி. சரீரப் பிரகாரமாகவும் மானஸிகப் பிரகாரமாகவும் ஏற்படும் சோதனைகளை ஒரு பெண் சகிக்கிறவிதமாக அவனால் சகிக்கவே முடியாது.

பெண்கள் தங்கள் கற்புக்கோ கண்ணியத்திற்கோ பங்கம் நேரிட்டால் அதை நிலைநாட்ட எந்தக் கஷ்டமான காரியத்தையும் செய்யத் தயங்க மாட்டார்கள். எந்தப் பரீக்ஷைக்கும் உடன்படுவார்கள். சற்றுமே அசையாமல் ஸத்தியத்திலே ஊன்றி நின்று தங்கள் காதலர் மீதுள்ள பிரேமையை வெளியிடுவார்கள். இப்படிப் பட்ட அரிய குணங்களோடு ஜன சமூகக் கட்டுமானத்திற்கு அஸ்திவாரக் கற்களாக அமைந்த பாரத தேசத்து வனிதா மணிகளிலே மகுடம் போல விளங்குபவர் அன்னை கஸ்தூரிபா.

---

3. காந்தி முதல் முறையாகத் தென் ஆப்பிரிக்கா சென்றது

தாதா அப்துல்லாவின் அழைப்பு

மகாத்மா காந்தி இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்ததும் ராஜ்கோட்டிலே வக்கில் உத்தியோகம் பண்ண முயன்றார். அங்கே தமக்குப் போதுமான வருமானம் அகப்படவில்லை யென்று கண்டபோது தமது குடும்பத்தை ராஜ்கோட்டிலேயே விட்டுவிட்டுப் பம்பாய்க்குச் சென்றார்.

அங்கே சில மாதங்கள் மட்டும் வக்கில் உத்தியோகத்திலே வருமானம் பெற முயன்றார். அதுவும் பலிக்கவில்லை. கடைசியாகச் சலிப்புற்று ராஜ்கோட்டுக்கு வந்து, இனி என்ன செய்வது என்று தயங்கியிருந்தார். அப்பொழுது, அவருடைய தமையனார் வர்த்தக மன்னரான தாதா அப்துல்லாவின் கம்பெனியிலே பங்காளியான கரீம் ஜவேரி என்பவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அந்தக் கம்பெனியிலிருந்து மகாத்மாவின் தமையனாருக்கு வந்த கடிதத்திலே, "எங்கள் வியாபாரம் தென் ஆப்பிரிக்காவிலும் நடக்கிறது. எங்கள் கம்பெனி மிகப் பெரியது. அங்கே உள்ள நீதிஸ்தலத்திலே எங்களுக்குச் செல்லாக வேண்டிய 40,000 பவுனுக்காக நாங்கள் ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறோம். இந்த வழக்கை நடத்துவதற்காகத் தேர்ந்த வக்கில்களையும் பாரிஸ்டர்களையும் நியமித்திருக்கிறோம். தங்களுடைய தம்பியாரை ஆப்பிரிக்காவுக்கு அனுப்பக் கூடுமானால், அவர் எங்களுக்கும் உதவியாக இருப்பார். அவருக்கும் நன்மையாக இருக்கும். நாங்களே எங்கள் வழக்கை வக்கில்களுக்குச் சொல்வதற்குப் பதிலாகத் தங்கள் தம்பியார் எங்கள் பிரதிநிதியாக வழக்கை நன்றாக விளக்கிக் காட்ட முடியும். அதோடு உலகத்திலே புதிய நாடுகளையும் பார்க்கச் சந்தர்ப்பமும் வாய்க்கும். புதிய மனிதர்களோடு அறிமுகமாகிப் பழகத் தருணமும் ஏற்படும்," என்று எழுதியிருந்தது. மகாத்மா இந்த வர்த்தகக் கம்பெனிக்கு உதவி புரிவதற்காக 1893-ம் வருஷம் தென் ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார்.

ஆப்பிரிக்காவுக்குச் சென்றபோது காந்திஜியின் மன நிலை

இங்கிலாந்துக்குப் போனபோது தாயைவிட்டுப் பிரிகிறோமே என்ற துயரந்தான் இருந்தது மகாத்மா காந்திக்கு. ஆனால், தென் ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்ட பொழுது தமக்கு இருந்த உணர்ச்சிகளைத் தமது சுய சரிதையில் பின் வருமாறு எழுதுகிறார் :—

" என் தாயாரும் பூத உடலைத் துறந்து விண்ணுலகம் சேர்ந்துவிட்டாள். எனக்கும் அன்னிய நாடுகளுக்குப் பிரயாணம் பண்ணுவதிலே பரிசயமும், முன்னிலும் அதிக லோகானுபவமும் ஏற்பட்டிருந்தது. அடிக்கடி ராஜ்கோட்டுக்கும் பம்பாய்க்கும் பிரயாணம் பண்ணுவது வழக்கமாகிவிட்டது. ஆகையால், தென் ஆப்பிரிக்கா வுக்குப் போகும்போது, குடும்பத்தாரை விட்டுப் பிரி கிறோமே என்ற கவலை இங்கிலாந்துக்குப் போகிற போது ஏற்பட்ட அளவு ஏற்படவில்லை.

" என்றாலும், என் மனைவியை விட்டுப் பிரிவதுதான் மகா வேதனையாக இருந்தது. கற்றுக்கொள்ளவேண்டிய சீர்திருத்தங்கள் எல்லாம் பரிபூர்ணப்பட வேண்டு மானால் இன்னும் கொஞ்ச காலம் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து வாழவேண்டும் என்று நினைத்தோம். ஆனாலும், தென் ஆப்பிரிக்காவுக்குப் போக எனக்கு அதிக ஆசையாக இருந்தது. அதனாலே, அவளை விட்டுப் பிரிவதைச் சற்றே சகித்துக் கொள்ள முடிந்தது. " நாம் திரும்பவும் ஒரு வருஷத்திற்குள்ளே கட்டாயம் சந்திப்போம்" என்று அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு ராஜ்கோட்டை விட்டுப் பம்பாய்க்குப் புறப்பட்டேன்."

அச்சமயத்தில் கஸ்தூரிபாவின் நிலைமை

ஸதிபதிகள் ஒன்றாக வாழும் நாட்கள் அதிகரிக்குந் தோறும் ஒருவரை ஒருவர் யதார்த்தமான மனப் பண்பிலே அறிந்து கொள்ளும் அறிவும் வளர்ந்து

வருகிறது. இந்தப் பிரிவு ஏற்பட்டபோது கஸ்தூரிபாவுக்கு வயது இருபத்து நாலு. பெண்மைக் குணங்கள் கமழத் தொடங்கும் பருவத்திலே அன்னையார் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டார். கணவனை விட்டுப் பிரிய நேரிடும் எந்தப் பெண்ணுக்கும் பிரிவாற்றுமையைச் சகிக்கச் சிறந்த மருந்து, மக்களே. குழந்தைகள் தாய் தந்தையரைச் சேர்த்துக் கட்டி வைக்கும் அன்புக் கயிறல்லவா? உத்தம ஸ்திரீக்கு நாயகரை விட்டுப் பிரிவதே துயரம். அதிலும், அதிகமாகத் துயரப்படுகிறவள் மக்களைப் பெற்ற தாயல்லவா? ஆகையால், மகாத்மா காந்தி இரண்டு குழந்தைகளோடு அன்னையாரையும் மாமனார் வீட்டிலே விட்டுப் போனதினால் ஏற்பட்ட துயரத்தைத் தாய்மார்களே உரைக்கக் கூடியவர்கள்.

நாயகர் வரவிற்காக நாட்களை எண்ணி யெண்ணிக் காத்திருந்தார் கஸ்தூரிபா. 'நாம் திரும்பவும் ஒரு வருஷத்திற்குள்ளே கட்டாயம் சந்திப்போம்' என்று சொல்லிவிட்டுப் போனவர் தென் ஆப்பிரிக்காவிலே நேட்டாலில் மூன்று வருஷம் தங்கிவிட்டார். ஒரு வருஷம் மட்டும் நாளெண்ணிக் காத்திருந்த அன்னையாருக்குப் பின்னும் இரண்டு வருஷப் பிரிவு எப்படி இருந்திருக்கும் என்பதை வாசகர்கள் நினைத்துப் பார்க்கலாம்.

4. தென் ஆப்பிரிக்காவில் இல்லறம்

மூன்றுவது வருஷம் மகாத்மா காந்தி மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் தமது சகோதரரின் மகனையும் அழைத்துக் கொண்டு தென் ஆப்பிரிக்காவுக்குப் போகக் கப்பல் ஏறினர். மகாத்மா காந்தி தம் மனைவி மக்களோடு செய்த முதல் கப்பல் பிரயாணம் இதுதான்.

வெள்ளையர்களின் உபத்திரவம்

காந்தி-குடும்பத்தார் ஏறிவந்த கப்பல் டர்பன் துறை முகத்தை அடுத்ததும் அங்குள்ள வெள்ளையர்கள்

அவருக்குத் துன்பம் செய்யக் காத்துக்கொண்டிருந்தனர். வைத்திய சோதனை என்று காரணம் காட்டிக் கப்பலை நான்கு நாட்கள் துறைமுகத்தை அடுக்காதபடி நிறுத்தி விட ஏற்பாடு செய்தார்கள். சர்க்காரின் கட்டளைப்படி ஐந்தாவது நாள் கப்பல் துறைமுகத்தை அடுத்து நின்ற போது கப்பலில் இருந்த பிரயாணிகள் கரையில் இறங்கினார்கள்.

ஆப்பிரிக்கா அரசாங்கத்தில் காபினெட் மெம்பரான மிஸ்டர் ஹாலி எஸ்கோம்பே என்பவர் வெள்ளையர்களாலே மகாத்மா காந்திக்கு அபாயம் ஏற்படலாம் என்று மாலுமித் தலைவனுக்குச் செய்தி அனுப்பியதோடு, காந்தியை மட்டும் சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு நகருக்குள்ளே போகவிட வேண்டும் என்றும் ஏற்பாடு செய்திருந்தார். தாதா அப்துல்லாக் கம்பெனியாரின் வக்கிலான மிஸ்டர் லாஃப்டன் என்பவர் மகாத்மா திருடனைப் போல நகருக்குள்ளே பிரவேசிக்கக் கூடாதென்றும், தாமே தமது பொறுப்பில் அவரை நகருக்குள் அழைத்துச் செல்வதாகவும் கப்பல் தலைவனுக்குத் தெரிவித்தார்.

கஸ்தூரிபாவும் பிள்ளைகளும், கப்பல்-துறைக்கு இரண்டு மைல் தூரத்திலிருந்த மிஸ்டர் ரஸ்தோம்ஜி வீட்டுக்கு முன்னதாகவே போய்விட்டார்கள். மனைவியும் மக்களும் போன சற்று நேரத்துக்கெல்லாம் மிஸ்டர் லாஃப்டன் காந்தியை அழைத்துக்கொண்டு கரையில் இறங்கினார். சில வெள்ளை இளைஞர்கள் காந்தியைத் தெரிந்துகொண்டு விட்டார்கள். உடனே "காந்தி! காந்தி!" என்று கூச்சலிட்டார்கள். அதைக் கேட்டதும் பல வெள்ளையர்கள் மூர்க்க வெறிகொண்டு கூடிவிட்டார்கள். அபாயம் நேரிடும் என்று அறிந்து மிஸ்டர் லாஃப்டன் ஒரு ரிக்ஷாக் காரனைக் கூப்பிட்டு அதிலே ஏறிக் கொள்ளும்படி காந்தியை வேண்டிக்கொண்டார். ஆனால், அந்த வெள்ளையர்கள் அவரை வண்டியில் ஏறவிடவில்லை. ரிக்ஷாக் காரனைப் பயமுறுத்தி ஓட்டிவிட்டார்கள். காந்தியும் அவருடைய நண்பரும் கால்நடையாகச் சிறிது தூரம்

சென்றார்கள். கோபாவேசங் கொண்ட அந்த வெள்ளையர்கள் அவ்விருவரையும் நடந்து செல்லவும் விடவில்லை. அவர்கள், மிஸ்டர் லாஃப்டனைக் காந்தியை விட்டுப் பிரித்து அப்புறமாகக் கொண்டு போனார்கள். இதற்குப் பின் அந்த வெள்ளையர்கள் மகாத்மாவுக்குச் செய்த அவமரியாதைகள் அனந்தம்.

ஆப்பிரிக்காக் கண்டத்தில் குடும்ப சகிதமாக இறங்கின போது கஸ்தூரிபாவுக்கு நேரிட்ட முதலாவது பயங்கர சம்பவம் இதுதான். அவருடைய ஜீவியத்திலே ஏற்பட இருந்த பயங்கரமான அநேகம் பரிக்ஷைகளிலே இதுதான் முதலாவது. சொல்ல முடியாத துயரங்களின் மத்தியிலே சரித்திர நிகழ்ச்சியான வீர தீரச் சம்பவங்கள் நிறைந்த வாழ்க்கைப் போக்குடைய ஒருவரோடு கஸ்தூரிபாவின் வாழ்க்கையையும் இசைத்து வைத்திருந்தது ஒருவராலும் உணர முடியாத ஈசுவர ஸங்கல்பம்.

தென் ஆப்பிரிக்காவில் பாரிஸ்டர் மனைவி

இப்படிப்பட்ட சம்பவங்களிலே முதலாவது சம்பவம் 1897-ம் வருஷம் ஜனவரி மாதம் ஆப்பிரிக்காக் கண்டத்திலே கால் வைத்தபோது நடந்தது. இரண்டாவது நாள் வெள்ளையர்களின் ஆக்ரோஷம் அடங்கிவிட்டது. முதல் நாள் சம்பவத்திற்குப் பிறகு வாலிப பாரிஸ்டர் மோகன் தாஸ் காம்சந்த் காந்தி தம்முடைய உத்தியோகத்தில் இறங்கிவிட்டார். காந்திஜி வக்கில் உத்தியோகத்திலே செல்வாக்குடையவராக விளங்கினதினால், பணமுடை இல்லாமலே வாழ முடிந்தது. ஐரோப்பிய முறையிலே அமைந்திருந்த நல்ல பங்களாவில் காந்திஜி தமது குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார். நடை உடை பாவனைகள் விஷயமாகத் தொடங்கி யிருந்த நாகரிகங்களெல்லாம் அங்கேயும் தொடர்ச்சியாக அனுஷ்டிக்கப் பெற்று வந்தன.

இது முதல் கஸ்தூரிபா ஒன்பது வருஷகாலம் பாரிஸ்டர் காந்தியின் மனைவியாக வாழ்ந்து வந்தார்.

அவை சந்தோஷமும் சமாதானமுமான வருஷங்கள். அவருடைய வாழ்க்கையிலே விசேஷமான மாறுதல்கள் ஏற்பட்ட வருஷங்கள். வீரதீரமான செய்கைகள் நிறைந்த வருஷங்கள். உலக முழுவதும் காந்தி தம்பதிகளின் புகழ் பரவும்படியான சம்பவங்கள் நிறைந்த வருஷங்கள். 1903-ம் வருஷத்திலே மகாத்மா காந்தி டிரான்ஸ்வாலில் உள்ள ஸுப்ரீம் கோர்ட்டின் அட்டோர்னியாகத் தமது பெயரைப் பதிவு செய்துகொண்டார். அங்கே டிரான்ஸ்வால் பிரிட்டிஷ் இந்திய ஸங்கத்தை ஸ்தாபித்தார். 'இந்தியன் ஒபினியன்' என்னும் வாரப் பத்திரிகையை நடத்தத் தொடங்கினார். அவர் நெடுங்காலமாக மனோராஜ்யம் பண்ணிக் கொண்டிருந்த 'ஃபீனிக்ஸ் ஸெட்டில்மென்டை' 1904-ம் வருஷம் ஸ்தாபித்தார். ஆப்பிரிக்காவிலிருந்தபோதுதான் உலகப் பிரக்யாதி பெற்ற 'ஸத்திய சோதனை'—ஜீவியத்தை ஆரம்பித்தார். வாழ்க்கையிலே புதுப் புது ஸத்தியங்களைப் பரிக்ஷை செய்து பார்ப்பதில் மகாத்மா காந்திக்குச் சமானமானவர்களே இது மட்டும் தோன்றியதில்லை யெனலாம். புதுப் புது ஸத்தியங்களைச் சோதனை செய்து அவற்றைத் தினசரி ஒழுக்கத்திலே கொண்டுவருகிற மகான்கள் கஷ்ட நிஷ்டூரமான அனுஷ்டானங்களுக்கும் மகத்தான தியாகங்களுக்கும் தங்களை ஆளாக்கிக் கொள்வதிலே ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் பார்க்கமாட்டார்கள். உயிரே போவதாக இருந்தாலும் ஸத்தியமென்று தங்களுக்குத் தெளிவானவற்றைப் பின்பற்றத் தொடங்கி விடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய வாழ்க்கையிலே நேரிடுகிறவைகளுக்கெல்லாம் தங்களோடு சம்பந்தப் பட்டவர்களையும் பங்காளிகளாக்கி விடுவார்கள். இத்தகைய ஒருவருக்கு மனைவியாக, துணைவியாக, சாதாரண மனிதர்களால் தாங்கமுடியாத 'ஸத்திய சோதனை'க் கருவியாக வாழ்ந்தவர் கஸ்தூரிபா காந்தி.

இல்லறத்திலே முதலாவது ஸத்தியாக்ரஹம்

மகாத்மா காந்தியின் சுய சரித்திரமான 'ஸத்திய சோதனை' யிலே பின்வருமாறு வாசிக்கிறோம் :—

"நான் டர்பன் நகரில் வக்கில் உத்தியோகம் பார்த்து வந்தபோது ஆபிஸ் குமாஸ்தாக்கள் பல தருணங்களில் என் வீட்டிலேயே தங்கவேண்டியதாக இருந்தது. அவர்களில் சிலர் இந்துக்கள்; வேறு சிலர் கிறிஸ்தவர்கள். அவர்களை மாகாண வரிசையிலே குறிப்பிடுவதானால், குஜராத்திகள் சிலர்; தமிழர்கள் சிலர். அவர்களை என் சொந்த உறவினர்களாகவே நான் கருதிவந்தேன். மற்றப்படி நடத்தினதாகவே எனக்கு ஞாபகமில்லை. அவர்களை என் குடும்பத்தின் அங்கத்தினர்களாகவே பாவித்து நடத்தி வந்தேன். நான் அவர்களை இப்படி நடத்துகிற விஷயத்திலே என் மனைவி குறுக்கிடும் போதெல்லாம் எனக்கும் அவளுக்கும் மனஸ்தாபம் வந்து விடும். குமஸ்தாக்களிலே ஒருவர் கிறிஸ்தவர். அவருடைய பெற்றோர் ஹரிஜனத்தார்.

"வீடு மேலைநாட்டார் முறையிலே கட்டியிருந்தது. வீட்டில் உள்ள அறைகளிலே அசுத்த நீர்ப் போக்கிற்கான மதகு, சாக்கடை வசதிகளொன்றுமே இருக்கவில்லை. மலஜலநீர் கழிப்பதற்கு ஒவ்வொரு அறையிலும் பிங்கான் சட்டிகள் வைத்திருந்தன. இந்தச் சட்டிகளைக் கழுவ, ஒரு வேலைக்காரியையோ தோட்டியையோ அமர்த்துவதைப் பார்க்கிலும், நானாவது என் மனைவியாவது அதைச் செய்து விடுவதே நல்லதென்று தீர்மானித்துவிட்டோம். வீட்டிலே வித்தியாசமில்லாமல் பழகின குமஸ்தாக்கள், தாங்களே தங்கள் அறையிலுள்ள சட்டிகளைக் கழுவிக் கொள்ளத் தயங்கமாட்டார்கள். அந்தக் கிறிஸதவக் குமாஸ்தாவோ வீட்டுக்குப் புதியவர். அதனாலே, அவருடைய படுக்கை அறைக் காரியங்களை நாங்களே கவனிக்க வேண்டியதாக

இருந்தது. என் மனைவி மற்றக் குமஸ்தாக்களுடைய அறைகளில் இருந்த சட்டிகளை யெல்லாம் சுத்தம் செய்தாள். பஞ்சம வகுப்பினரென்று அவள் நினைத்து வந்த அக்குமாஸ்தா உபயோகித்த மலஜலச் சட்டியைக் கழுவுதல் என்பது அவ்ளுடைய பொறுமைக்கு ஒரு எல்லையாகிவிட்டது. அதனாலே எங்களுக்குள்ளே சண்டை மூண்டது. அந்தச் சட்டிகளை நான் கழுவுவதும் அவளுக்கு இஷ்டமில்லை; அவளும் அதைச் செய்ய விரும்பவில்லை. கண்ணிரண்டும் கோபத்தால் சிவக்க, முத்துக் கண்ணீர் கபோலங்கள் வழியாகப் பெருக்கெடுத்தோட, அவள் சட்டிகளை எடுத்துக்கொண்டு படிக்கட்டுகள் வழியாக இறங்கி வருகையில் சினந்த பார்வையோடு என்னைக் கடிந்துகொண்ட காட்சி இன்றைக்கும் என் கண்ணெதிரே நிற்கிறது. நானோ அன்பு மிக்க கொடுமையான கணவன். அவளுடைய குருவின் ஸ்தானத்திலே இருப்பதாகவே என்னைப் பற்றி நினைத்துக் கொண்டேன். ஆகையால், அவள்பேரிலே எனக்கிருந்த குருட்டுத்தனமான அன்பினாலே தொந்தரவு செய்து அவளை வருத்தத் தொடங்கினேன்.

“அவள் சட்டிகளை எடுத்துக்கொண்டு வருவதினால் மட்டும் திருப்தி யடைந்துவிடவில்லை. அவள் அந்தக் காரியத்தைச் சந்தோஷமாகச் செய்யவேண்டும் என்று நினைத்தேன். ஆகையால் என் குரலை உயர்த்தி, ‘இப்படிப்பட்ட அனர்த்தங்களை யெல்லாம் நான் என் வீட்டிலே சகித்துக்கொண்டிருக்க முடியாது,’ என்று கத்தினேன். என் சொற்கள் அம்புபோல அவள் மனத்தில் தைத்தன.

“அவளும் திரும்பிக் கத்தினாள்:—‘உங்கள் வீட்டை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்; நான் போகிறேன்’ நான் என்னை மறந்துவிட்டேன். திக்கற்ற அந்த ஸ்திரீயின் கையைப் பிடித்துப் படிக்கட்டுகளுக்கு எதிரே இருந்த வெளிவாசல் பக்கமாகத் ‘தறதற’ என்று இழுத்துக் கொண்டு போனேன். அவளை வெளியே தள்ளிவிட வேண்டுமென்ற எண்ணத்தோடு வெளிவாசல் கதவைத்

திறக்கப் போனேன். அவளுடைய கன்னங்கள் வழியாகக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. "உங்களுக்கு அறிவு இல்லையா? வெட்கமில்லையா? நீங்கள் இப்படி உங்களையே மறந்துவிடலாமா? நான் எங்கே போவது? எனக்குப் புகலிடம் தர இந்த ஊரிலே என் பெற்றோர் இருக்கிறார்களா? என் உறவினர்கள்தான் இருக்கிறார்களா? உங்களுடைய மனைவி என்பதினாலே நீங்கள் கொடுக்கும் அடியும் உதையும் நான் இப்படியெல்லாம் பட்டுச் சகித்துக்கொண்டிருக்க வேண்டுமா? புண்ணியமுண்டு; நல்ல படியாக நடந்துகொள்ளுங்கள். வாசல் கதவை மூடுங்கள். இப்படிப்பட்ட காட்சியை வெளியிலே யாராவது பார்த்து விடப் போகிறார்கள்,' என்று கத்தினாள்.

"நான் பார்வைக்கு வெகு தைரியமாகத்தான் இருந்தேன். ஆனாலும், உண்மையாகவே என் செய்கையை நினைத்து வெட்கப்பட்டேன். கதவை மூடினேன். என் மனைவி என்னைவிட்டுப் பிரிய முடியாதென்றால், நானும் அவளை விட்டுப் பிரியமுடியாது. எங்களுக்குள்ளே எத்தனையோ முறை சண்டை சச்சரவுகள் வந்ததுண்டு. அவற்றின் முடிவு எப்பொழுதும் சமாதானமாகவே இருக்கும். நிகரற்ற பொறுமையினாலும் எதையும் சகித்துக்கொள்ளும் குணத்தினாலும் முடிவிலே ஜயம் பெற்றவளாக நிற்பவள் என் மனைவிதான்."

இந்தச் சம்பவத்தை ஒட்டி மகாத்மா காந்தி தமது சுயசரித்திரத்திலே சொல்லிக்கொண்டு போகிறவைகளைச் சற்றே நிதானமாகச் சிந்தனை செய்யும்போது நம்முன்னே உதயமாகி நிற்கிற அன்னை கஸ்தூரிபாவின் குணலங்காரத்தை ஒரு முறை பார்க்கலாம்.

இப்படிப்பட்ட சண்டை சச்சரவுகள் எத்தனையோ குடும்பங்களில் தினந்தோறும் நேரிடுகின்றன. ஸர்வ சாதாரணமான இப்படிப்பட்ட ஒரு காரியம், இன்று நாம் எல்லோரும் அவதாரமாகக் கொண்டாடுகிற மகாத்மாவின் ஜீவியத்திலேயும் காணப்படுகிறதே என்பதுதான்

நமக்கு ஏற்படும் வியப்பிற்குக் காரணம். எப்போதும் போலவே மனைவிமேல் அதிகாரம் செலுத்துகிற அதே கணவரைத்தான் ஆப்பிரிக்காவிலே பாரிஸ்டரான மிஸ்டர் எம். கே. காந்தியிடமும் பார்க்கிறோம். என்றாலும், இந்தச் சண்டைக்கு அவரைத் தூண்டிவிட்ட காரணத்தைப் பார்ப்போமானால், எல்லாரையும் போலவே பெண்டாட்டியுடன் சண்டை போடுகிறவர்தான் மகாத்மா காந்தி என்று ஒருபோதும் சொல்லத் துணியமாட்டோம். ஜாதி வேற்றுமையைத் தம்முடைய வீட்டைவிட்டு ஓட்டவேண்டும்; எல்லோரையும் சகோதரராகக் கருதி அன்பு பாராட்ட வேண்டும்; பலவகையான தொழில்களிலே சிலவற்றை இழிவானவை என்று ஒதுக்கிவைக்கலாகாது; அத் தொழில் செய்கிறவர்கள் ஒருபோதும் தாழ்ந்தவர்களாக மாட்டார்கள்; அவர்கள் மேலும் மேலும்—நாமாகவே தாழ்த்திய அந்த — இழிதொழில் செய்வதற்கென்றே பிறந்தவர்கள் என்று எண்ணலாகாது; அப்படி நம்மை எண்ணத் தூண்டுகிற எந்தத் தொழிலையும் நாமே செய்யக் கூடிய தன்மை ஏற்படவேண்டும்; இந்த அப்பியாஸங்கள் எல்லாம், உண்மையாகவே ஜாதி வேற்றுமையற்ற மனப் பான்மையோடு உலகத்திற்கு உதவி செய்யப் புறப்படும் ஒவ்வொருவனுக்கும் மிகவும் அவசியம் என்று நினைத்திருந்தார் காந்தி என்பது வெகு ஸ்பஷ்டமாக விளங்குகிறதல்லவா? இப்படிப்பட்ட மகத்தான ஸத்திய சோதனை செய்கிறபோதுதான் கஸ்தூரிபா குறுக்கிட்டார்.

எழுத்து வாஸனையில்லாதவர் அன்னை கஸ்தூரிபா. இவருக்கு எப்படித் தெரியும் இவ்வளவு மகத்தான ஸத்தியம், அசுத்தமான சட்டிகளைச் சந்தோஷமாகக் கழுவ உடன்படும் மனப்பான்மையிலே இருக்கிறதென்று? இவர் செய்ய மறுத்தபோது, மகாத்மாவின் செய்கைக்குக் காரணம் என்ன என்பதுதான் விளங்கவில்லை. பகுத்தறிவுக்குப் பொருத்தமான காரணம் ஏதாவது உண்டா என்றுதான் இவருடைய கோபக் குறியும் கண்ணீரும் கடிந்துகொண்ட வார்த்தைகளும் குறிப்பிட்டன. அடியும் மிதியும் இந்தக் கேள்விக்குப்

பதிலாகிவிடுமா? இல்லை. உத்தம மனைவிக்குரிய, விசேஷமாக இந்து மனைவிக்குரிய, கீழ்ப்படிதல் என்னும் குணத்தை முதலிலே வெளியிட்டார். அதே ஸமயத்தில், தம்மளவிலே தாமறிந்த ஸத்தியத்தின்படி அவர் செய்வது தவறு என்று கண்டபோது, அதைச் செய்யாதபடி தடுக்கும் உரிமை தமக்கிருந்தபடியால், அந்த உரிமையை இவரும் நிறைவேற்ற முயன்றார். தாம் செய்தது தப்பிதம் என்று உணர்ந்து மன்னிப்புக் கேட்கவில்லை. தம்முள்ளத்திலே இருந்த உணர்ச்சியை உத்தண்டமாக வெளியிட்டார்: "உங்களுடைய மனைவி என்பதினாலே நான் நீங்கள் கொடுக்கும் அடியும் உதையும் பட்டு இப்படியெல்லாம் சகித்துக்கொண்டு இருக்கவேண்டுமா?" என்று வெகு தைரியமாகக் கேட்டார். அன்னை கஸ்தூரிபா எந்தவிதமான பாவமும் செய்யவில்லை. இந்து சமயாசார ஒழுக்கத்தின்படி, பாரம்பரிய வழக்கத்தின்படி, வளர்ந்த எந்த உத்தமப் பெண்ணும் மறுக்கக்கூடிய காரியத்தைத்தானே அன்னை கஸ்தூரிபாவும் செய்ய முடியாதென்றார். இப்படிப்பட்ட மனைவிக்குக் காந்திஜி தம்முடைய ஒழுக்கத்திற்கு ஏதுவான காரணங்களைத் தெளிவாக மனத்திலே படும்படிச் சொல்லியிருக்கவேண்டுமல்லவா? காரணங்களைச் சொல்லப் பொறுமையில்லாமல் வீணே கோபத்துக்கு ஆளானார் மகாத்மா காந்தி. அதை உணர்த்திக் காண்பிக்கும் பொருட்டே, "புண்ணியமுண்டு; நல்லபடியாக நடந்து கொள்ளுங்கள்" என்றார் அன்னை கஸ்தூரிபா. இந்த வார்த்தைகளே போதுமானவையாக இருந்தன மகாத்மா காந்தி தம்முடைய செய்கையை நினைத்துத் துக்கப்படுவதற்கு. அவர் தம்முடைய தப்பிதத்தை உணர்ந்து மனஸ்தாபப் பட்டபோது, காரணத்தைச் சொல்லும் பொறுமையும் ஏற்பட்டது. அன்னையும் தமது கணவர் கண்டமகத்தான ஸத்தியத்தைக் கண்டார்; கண்டபோது வெகு ஸந்தோஷமாக அப்படிப்பட்ட தொண்டாற்ற இசைந்தார்.

இதற்குமேல் இந்தச் சம்பவத்தை ஒட்டி மகாத்மா தம்முடைய சுயசரிதையிலே எழுதுவது வெகு ரஸமானது.

"இன்று நான் அந்த நிகழ்ச்சியைப் பற்றி, பற்றுதலற்ற முறையிலே ஓரளவு கூற முடிகிறது. நான் என் அதிர்ஷ்ட வசத்திலுலே தப்பிப் பிழைத்து, ஏதோ ஒரு காலத்தைச் சார்ந்த ஏதோ ஒரு பழங் கதைபோல அதைச் சொல்ல முடிகிறது. இப்பொழுது நான் கண் மூடித்தனமாக மோகவெறி கொள்ளும் கணவனன்று. நான் என்மனைவிக்குக் குருவாகவும் இல்லை. முன்னே நான் கஸ்தூரிபாவிடம் வெறுப்பாக நடந்துகொண்டதுபோலவே, இன்று அவள், தனக்கு இஷ்டமிருந்தால், என்னிடம் வெறுப்பாக நடந்து கொள்ளலாம். இன்று நாங்கள் இருவரும் உற்ற இடத்தில் உதவும் நண்பர்கள். ஒருவரை ஒருவர் காமப் பொருளாகக் கருதவில்லை. நான் வியாதியாக இருந்த காலமெல்லாம் எவ்விதமான பிரதியுபகாரத்தையும் கருதாமல், உண்மையான செவிலித் தாயாக இருந்து, எனக்கு எல்லாப் பணிவிடைகளும் செய்து வந்தாள்.

"இந்தச் சம்பவம் 1898-ம் வருஷம் நிகழ்ந்தது. அந்தக் காலத்தில் எனக்குப் பிரம்மசரியத்தைப் பற்றிய பூரண அறிவில்லை. 'மனைவி கணவனின் காமப் பொருள்; கணவனுடைய சுக துக்கங்களுக்குப் பங்காளியாகவும், தோழனுகவும் துணைவியாகவும் இருப்பவள் அன்று; கணவனுடைய சொல்லுக்கு அடங்கி நடக்க வேண்டியவள்,' என்றெல்லாம் நான் அந்தக் காலத்திலே நினைத்திருந்தேன். 1900-ம் வருஷத்திலே தான் இப்படிப்பட்ட அபிப்பிராயங்கள் எல்லாம் ஒரே அடியாக மாறுதலடையத் தலைப்பட்டன. 1906-ம் வருஷம் இந்த விஷயத்தைப் பற்றிய ஸத்தியம் வெகு தெளிவாக எனக்கு முன்னே வடிவெடுத்து நின்றது...........வரவர எனக்குள்ளே இருந்த மாம்ஸ இச்சைகள் மறைந்து போகவே, என் இல்லற வாழ்க்கையிலும் சாந்தம் மிகுந்தது; இனிமையும் ஸந்தோஷமும் நிறைந்தது. இல்லற வாழ்க்கைப் போக்கும் மாறிக்கொண்டே இருந்தது."

சுய சரிதையில் இந்தப் பகுதியை வாசிக்கும்பொழுது, மகாத்மா காந்தி, தாம் கற்ற மகத்தான ஸத்தியங்களை

யெல்லாம் 'கஸ்தூரிபா' என்ற பள்ளிக்கூடத்திலேதான் படித்தார் என்பதை நாம் மறந்து விடலாகாது. இப்பொழுது சொன்ன சம்பவத்திலே, அன்னை கஸ்தூரிபா தம்மை ஹிம்ஸித்த கணவருக்கு அஹிம்ஸைப் பாடத்தைக் கற்றுக் கொடுத்தார். "நான் எங்கே போவது? கதவை மூடுங்கள்! இப்படிப்பட்ட காட்சியை யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்."—கண்டவர்கள் இகழும்படியான காரியத்தைக் கொண்டவன் செய்தாலும், அந்தக் கொண்டவனை யல்லாமல் வேறு புகலிடம் அறியாத குலப் பெண்கள்தான் பரிபாவங்களைச் செய்யும் கணவரைப் பிறர் பார்த்து இழிவாக நினைந்துவிடலாகாதே என்று கவலைப்படுவார்கள். கஸ்தூரிபா காந்தி, தம்மை வெளியே பிடித்துத் தள்ளி அவமானப்படுத்த நினைத்த கணவரின் மானத்தைக் காக்க விரும்பினார். இதிலே அவர் எவ்வளவாக அஹிம்ஸா தர்மத்தை அந்த இள வயதிலேயே உணர்ந்திருந்தார் என்பது தெளிவாகிறது.

இந்த அஹிம்ஸா தர்மம் மகாத்மா காந்தியின் உள்ளத்திலே வேரூன்றி வெகு விரைவாக வளர்ந்தோங்கும்படி நீர் வார்த்தவர் அன்னை கஸ்தூரிபா.

கஸ்தூரிபாவின் மனோ தைரியம்

கஸ்தூரிபா பல தடவைகளில் வியாதியாகி மரணத்தையே எட்டிப் பார்த்துவிட நேர்ந்தது. ஆப்பிரிக்காவில் இருந்தபோது, அப்படி அவர் வியாதியான மூன்று வரலாறுகளை மகாத்மா காந்தி தமது சுயசரித்திரத்தில் கூறியிருக்கிறார்.

"அவள், தன் ஜீவிய காலத்திலே மூன்று தடவை நோயுற்று மரணத்திலிருந்து தப்பிப் பிழைத்தாள். அவள் சௌக்கியமடையும்படிச் செய்த மருந்துகள் வீட்டிலேயே தயாரித்துக் கொடுத்தவை. அவள் முதல் தடவையாக வியாதியானபோது, தென் ஆப்பிரிக்காவிலே ஸத்யாக்ரஹ இயக்கம் தொடங்கும் காலம். அந்த இயக்கம் ஆரம்பமாகி விட்டதென்றே சொல்லலாம்.

அவளுக்கு ஓயாத இரத்தப் பெருக்கு இருந்தது. அப்பொழுது ஒரு வைத்திய நண்பர் சஸ்திரவைத்தியம் செய்து கொள்வதே நல்லது என்று யோசனை சொன்னார். அவள் முதலிலே தயங்கினாள். முடிவிலே ஆபரேஷன் செய்து கொள்வதற்கு இசைந்தாள். அவள் ரொம்ப இளைத்துப் போயிருந்ததினாலே 'க்லோரபாம்' மயக்க மருந்து கொடுக்காமல் ஆபரேஷன் செய்ய வேண்டியதாயிற்று. ஆபரேஷன் வெற்றியாகவே முடிந்தது. என்றாலும் அவள் சொல்லமுடியாத வேதனையைச் சகிக்க நேர்ந்தது. ஆபரேஷன் நடந்த காலத்திலே மகா அற்புதமான தைரியத்தையே வெளியிட்டாள். ஆபரேஷன் செய்த டாக்டரும் ஆபரேஷனுக்கப்புறம் செவிலித்தாயாக இருந்த டாக்டரின் மனைவியும் ஒரே சிரத்தையாகக் கவனித்தார்கள். இந்த ஆபரேஷன் டர்பன் நகரிலிருந்தபோது நடந்தது. ஜோஹானெஸ்பர்க்கிலே நான் என் அலுவல்களைக் கவனிக்கப்போகலாம் என்றும், நோயாளியைப் பற்றிச் சற்றுமே கவலைப்படத் தேவையில்லையென்றும் டாக்டர் கூறினார்.

"சில நாட்களுக்குப்பின், எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதிலே, கஸ்தூரிபா மிகவும் சுகக்கேடாக இருப்பதாகவும், படுக்கையிலே எழுந்து உட்காரக்கூட முடியவில்லையென்றும், ஒருதடவை உணர்விழந்து விட்டதாகவும் அந்தக் கடிதத்திலே கண்டிருந்தது. என்னுவடைய உத்தரவில்லாமல் என் மனைவிக்கு மாமிசமோ சாராய மருந்துகளோ கொடுக்கத் தமக்கு அதிகாரமில்லை என்று அந்த டாக்டருக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் அவர் என் மனைவிக்கு மாட்டு இறைச்சி ஸூப் கொடுக்கலாமா என்று ஜோஹானெஸ்பர்க்குக்கு டெலிஃபோன் பண்ணிக் கேட்டார். இந்த விஷயத்தில் நான் பதில் சொல்ல முடியாதென்றும், இந்த விஷயமாக அபிப்பிராயம் சொல்லக்கூடிய நிலைமையிலே என் மனைவியிருந்தால், அவளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்றும், அவள் தன் இஷ்டப்படி செய்யலாமென்றும் பதில் அளித்தேன். 'இப்படப்பட்ட விஷயங்களில் நான் நோயாளிகளைக்

கலந்து ஆலோசிக்க முடியாது. தாங்களே நேரில் வர வேண்டும். எனக்கு இஷ்டமான ஆகாரம் கொடுக்கத் தாங்கள் சம்மதியாவிட்டால் தங்களுடைய மனைவியின் உயிருக்கு நான் பொறுப்பாயிருக்க முடியாது' என்று அவர் திரும்பவும் 'ஃபோன்' பண்ணினார்.

"அன்றைக்கே டர்பன் நகருக்கு ரயிலேறி விட்டேன். டாக்டரைப் பார்த்தபோது, அவர் என்னிடம் 'நான் தங்களுக்கு ஃபோன் பண்ணின அதே நேரத்தில் மிஸஸ். காந்திக்கு மாட்டு இறைச்சி ஸூப் கொடுத்து விட்டேன்!' என்று அமைதியாகச் சொன்னார்.

"'டாக்டர், இது பெரிய நம்பிக்கைத் துரோகம் என்று தான் சொல்லுவேன்,' என்றேன்.

"'நோயாளிக்கு மருந்தும் பத்தியமும் கொடுப்பதில் எவ்வித நம்பிக்கைத் துரோகமும் இல்லை. நோயாளியைக் காக்கும் பொருட்டு, நோயாளியையாவது அவர்களுடைய உறவினர்களையாவது வஞ்சிப்பது ஒரு சிறந்த குணம் என்றே வைத்தியர்களாகிய நாங்கள் கருதுகிறோம்,' என்று மன உறுதியோடு டாக்டர் பதில் சொன்னார்.

"எனக்கு இது பெரிய மன வேதனையாக இருந்தது; என்றாலும் அமைதியாக இருந்தேன். அந்த டாக்டர் மிகவும் நல்லவர். எனக்கு உற்ற நண்பர். நான் என்றைக்கும் கடமைப் பட்டிருக்கும்படி எங்களுக்குப் பல வகையிலே உதவி புரிந்தவர். என்றாலும் அவருடைய வைத்திய நீதி சாஸ்திரத்தை ஒப்புக்கொள்ள நான் தயாராக இல்லை.

"'டாக்டர், இப்பொழுது தாங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று என்னிடம் சொல்ல வேண்டும். என் மனைவிக்கு ஆட்டிறைச்சியும் மாட்டிறைச்சியும் கொடுக்கச் சம்மதிக்கமாட்டேன். அதனாலே அவளுக்கு மரணம் நேர்ந்தாலும் நேரட்டும். அவளுக்கு இஷ்டம் இருந்தால்தான் அவைகளைக் கொடுக்கலாம்.'"

"'உமக்கு இஷ்டமானபடி நீர் வேதாந்தம் பேசிக் கொண்டு இருக்கலாம். உம்முடைய மனைவி என்னிடம் வைத்தியம்செய்து கொள்ளுகிறமட்டும் எனக்கிஷ்டமானதை யெல்லாம் அவளுக்குக் கொடுக்கும் உரிமை எனக்கு வேண்டும். இப்படிச் செய்வது உமக்கு இஷ்டமில்லாவிட்டால் இங்கேயிருந்து அவளை அழைத்துக் கொண்டு போங்கள் என்றுதான் நான் துக்கத்தோடு சொல்ல நேரிடும். நான் வைத்தியம் செய்யும் நோயாளி என் வீட்டில் இறப்பது எனக்கு இஷ்டம் இல்லை.'"

"'உடனே அவளை இங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறீர்?'

"'இங்கிருந்து அவளை அப்புறப்படுத்த வேண்டுமென்று எப்போது சொன்னேன்? என் இஷ்டப்படி வைத்தியம் செய்ய விட்டுவிட வேண்டுமென்று தானே கேட்டேன்? நீர் அப்படிச் செய்தால் நானும் என் மனைவியும் எங்களாலியன்ற உதவிகளை யெல்லாம் செய்வோம். நீரும் அவளைப்பற்றி எவ்விதக் கவலையுமில்லாமல் திரும்பிப் போகலாம். உமக்கு இந்த அற்ப விஷயம் விளங்காவிட்டால் உமது மனைவியை என் வீட்டிலிருந்து அப்புறப் படுத்தும்படி கேட்டுக் கொள்ள நீர்தானே என்னை வற்புறுத்துகிறீர்?'

"என் பிள்ளைகளிலே ஒருவன் அப்போது என் பக்கத்திலே நின்றான். அவன் என் அபிப்பிராயத்திற்கு முற்றிலும் உடன்பட்டவனாகித் தன் தாயாருக்கு மாட்டிறைச்சி ஸூப்பு ஒருபோதும் கொடுக்கக் கூடாதென்று சொன்னான். இவ்விஷயத்தைப்பற்றி நான் கஸ்தூரிபாவிடம் நேரிலே பேசினேன். இவ்விஷயமாக ஆலோசனை கேட்பதற்குக் கூட முடியாதபடி அவள் அவ்வளவு பலவீனமாக இருந்தாள். எனக்கும் வைத்தியருக்கும் நடந்த வாக்கு வாதத்தை ஆதியோடந்தமாக அவளிடம் சொன்னேன். அவள் மன உறுதியோடு பதிலளித்தாள்: நான் ஒருபோதும் மாட்டிறைச்சி ஸூப் சாப்பிட மாட்டேன். இவ்வுலகத்திலே மனுஷ்ய ஜன்மம் எடுப்பது அருமை

9—3

யிலும் அருமை. இப்படிப்பட்ட அருவருப்பான பொருள்களால் என் உடம்பைத் திட்டுப் படுத்திக் கொள்வதைப் பார்க்கிலும் உங்கள் கையிலேயே சாவதுதான் சிறந்தது,' என்று சொல்லிவிட்டாள். நான் வைத்தியர் கக்ஷியை ஒட்டிப் பரிந்து பேசினேன். எல்லா விஷயத்திலும் என்னை அவள் பின்பற்றத்தான் வேண்டும் என்ற கட்டுப்பாடொன்றுமில்லை என்றேன். எங்கள் உறவினர்களிலும் நண்பர்களிலும், மருந்தென்று மாமிசத்தையும் திராக்ஷை ரஸத்தையும் உட்கொள்ள அருவருக்காதவர்களைத் திருஷ்டாந்தமாகக் கூறினேன். 'மாட்டேன், என்னை இப்போதே இங்கிருந்து கொண்டுபோய் விடுங்கள்,' என்று ஒரே பிடிவாதமாகச் சொல்லிவிட்டாள்.

"எனக்குச் சொல்ல முடியாத ஸந்தோஷம். அவளை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போகத் தீர்மானித்தேன். எனக்கு இது விஷயமாக முதலிலே கொஞ்சம் கலவரமாகவே இருந்தது. என் மனைவியின் தீர்மானத்தை நான் டாக்டரிடம் சொன்னேன். அவர் வெகு கோபத்தோடு 'நீர் இவ்வளவு உணர்வற்ற வன்னெஞ்சரா?' என்று கத்தினர்.

"அப்பொழுது மழை தூற்றிக் கொண்டிருந்தது. ரயில் ஸ்டேஷனும் தொலையிலே தான் இருந்தது. 'ஃபீனிக்ஸுக்குப் போக டர்பன் ரயில் வண்டியிலே தான் பிரயாணம் பண்ணவேண்டும். ஃபீனிக்ஸிலிருந்து நாங்கள் குடியிருந்த ஸெட்டில்மெய்டுக்கு ரஸ்தா மார்க்கமாக இரண்டரை மைல் வண்டியேறிச் செல்ல வேண்டும். அன்றைக்கு மிகப் பெரிய அபாயங்களிலே துணிந்து இறங்கிவிட்டேன். கடவுளை நம்பிக்கொண்டு என் வேலையில் முனைந்து விட்டேன்...

"கஸ்தூர்பாவை உத்ஸாகப்படுத்தித் தேற்றும் அவசியமே ஏற்படவில்லை. அதற்கு மாறாக அவள், 'எனக்கு ஒன்றும் நேரிடாது; கவலைப்பட வேண்டாம் என்று என்னை வழியிலே அடிக்கடி தேற்றிவந்தாள்.'

"பல நாட்களாகச் சரியான போஷிப்பு இல்லாததினால் அவள் எலும்பும் தோலுமாய் ரொம்ப மெலிந்திருந்தாள். அந்த ஸ்டேஷன் பிலாட்ஃபாரம் மிகப் பெரியது. ரிக்ஷாவை உள்ளே கொண்டுபோக முடியாது. ரயிலேறுவதற்கு முன்னே கொஞ்ச தூரம் நடந்து போகத்தான் வேண்டும். ஆகையால், நான் அவளை ரயில் வண்டி மட்டும் கைகளிலே தூக்கிக்கொண்டு போனேன். ஃபீனிக்ஸிலிருந்து ஸெட்டில்மெண்டுக்கு அவளை ஏணையில் வைத்துத் தூக்கிக்கொண்டு போனோம். வீடு சேர்ந்ததும் 'ஹைட்ரோபதி' ஜல சிகிச்சை என்னும் வைத்திய முறையினால் அவள் கொஞ்சம் கொஞ்சமாகப் பலமடைந்து வந்தாள்.

"நாங்கள் 'ஃபீனிக்ஸு'க்கு வந்து இரண்டு, மூன்று நாட்களாயிருக்கலாம்; அப்போது ஒரு சாமியார் எங்கள் வீட்டுக்கு வந்தார். டாக்டருடைய யோசனையை மன உறுதியோடு நாங்கள் புறக்கணித்து விட்டதைப்பற்றிக் கேள்விப்பட்டார். அவர் மிகவும் அனுதாபத்தோடு மாமிசம் சாப்பிடலாமென்று எங்களிடம் பேசத் தொடங்கினார். மாமிசம் சாப்பிடுகிற விஷயத்திலே சாஸ்திர ஸம்பந்தமான தடைகள் ஒன்றுமில்லை என்றார். நம்முடைய கொள்கைக்கு ஆதாரமாக ஸ்மிருதியிலிருந்து மேற்கோள்களை எடுத்துக் காட்டினார். அவர் காட்டிய சூத்திரங்கள் ஸ்மிருதியிலே செருகல்கள் என்று எனக்கு நன்றாய்த் தெரியும். இந்த விஷயமொன்றும் கஸ்தூரிபாவுக்குத் தெரியாவிட்டாலும், அவளுடைய விசுவாஸத்தை அசைக்க முடியவில்லை. அவளுக்குச் சாஸ்திர விவகாரமொன்றும் தெரியாது. முன்னோர் அனுஷ்டித்த பாரம்பரிய மதக் கொள்கைகளே போதுமானவை அவள் அந்தச் சாமியாரைப் பார்த்து, 'ஸ்வாமி நீர் என்ன சொன்ன போதிலும் மாட்டிறைச்சி ஸூப் சாப்பிட்டுச் சுகமடைவதை நான் ஒருபோதும் ஒப்ப மாட்டேன். இந்த விஷயமாக நீர் என்னை இனிமேல் தொந்தரவு பண்ண வேண்டாம். இதைப்பற்றி என் கணவரிடத்திலேயும், பிள்ளைகளிடத்திலேயும்

உமக்கு இஷ்டமானால் தர்க்கம் பண்ணிக் கொண்டிரும். ஆனால், இவ்விஷயத்தில் என் மனம் என்னவோ ஒரே உறுதிதான்' என்று சொல்லிவிட்டாள்."

ஃபினிக்ஸ் ஸெட்டில்மெண்டில் மனைவி கஸ்தூரிபா

மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவிலே பாரிஸ்டர் உத்தியோகம் செய்து பணம் சம்பாதிப்பதிலேயே இருந்து விடவில்லை. தேசியப் பிரகாரமாகவும் ராஜீயப் பிரகாரமாகவும், ஜன ஸமூஹ ஸம்பந்தமாகவும், ஏழை எளியவர்களுக்காகப் பாடுபடும் விஷயமாகவும், புதிய புதிய அநுபவங்களை அடைந்ததோடு அவருடைய அபிப்பிராயங்களும், மனோபாவங்களும் சிந்தனைப் போக்கும் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருந்தன. அவருக்குள்ளே வேரூன்றி நின்ற கைங்கரிய சிந்தனை நாளுக்கு நாள வளர்ந்தோங்கி எல்லை அளவு கடந்து படரலாயிற்று. வீட்டிலே கைங்கரியம் செய்ய முதலாவது பழகினார். அந்தக் கைங்கரிய சிந்தனை தமது வீட்டுக்குள்ளே பரிபூரணமாக நிறைந்தபொழுது, கட்டில் மேஜை நாற்காலி முதலான பொருள்களுடன் வெகு ஆடம்பரமாக வாழ்ந்த வீட்டை விட்டுத் தமது முயற்சியால் தென் அப்பிரிக்காவிலே ஏற்படுத்திய ஃபினிக்ஸ் ஸெட்டில்மென்டு என்னும் ஆச்ரமத்திலே வந்து குடியேறி விட்டார். பிற்காலத்திலே இந்தியாவில் அவர் ஸ்தாபித்த ஸாபர்மதி, வார்தா ஆச்ரமங்களுக்கு முந்தியது ஃபினிக்ஸ் ஸெட்டில்மென்டு ஆச்ரமந்தான். அங்கே தான் ஆச்ரம வாழ்க்கைக்குத் தம்மை ஆயத்தப் படுத்திக் கொண்டார்; ஜன ஸமூஹ ஸேவை செய்யப் பழகினார்; தியாக சிந்தனையை வளர்த்தார்; ஸத்திய சோதனையின் ஆரம்பப் பரிசைகளெல்லாம் அங்கேதான் நடந்தேறின. ஆச்ரமத்திற்குத் தாயாக இருந்தவர் கஸ்தூரிபா. ஆச்ரமத்தின் குடும்ப ஸம்பந்தமான ஸகல காரியங்களையும் இவர்தான் கவனித்து வந்தார். மிகவும் பிரக்யாதி

பெற்ற ஸ்திரீ புருஷர்கள் அந்த ஆச்ரமத்திலே குடியேறினார்கள். மிஸ்டர் எச். எஸ். எல். போலக் என்பவருக்கு அங்கே தான் விவாகம் நடந்தேறியது. அவரும் அவருடைய மனைவியும் அந்த ஸெட்டில்மெண்டிலேயே வெகு காலம் வாழ்ந்து வந்தார்கள். கஸ்தூரிபா அங்கே இருந்த போது தமது கருத்துக்களை இங்கிலிஷில் ஏதோ ஒரு வகையில் வெளியிடப் பழகிக் கொண்டார். அங்கு அவருடைய வாழ்க்கை தியாக ஸௌந்தர்யத்திலும் பணிவு எளிமை அழகுகளிலும் வளரலாயிற்று.

உப்பும் மஸாலையும் தியாகம் செய்தல்

கஸ்தூரிபாவுக்குத் திரும்பவும் அதே இரத்தப் போக்கு-வியாதி நேரிட்டதைப் பற்றி மகாத்மா காந்தி சுய சரித்திரத்தில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

“ஆபரேஷனுக்குப் பிறகு சில நாட்கள் மட்டும் இரத்தப் போக்கு வியாதி ஒருவாறு நீங்கிவிட்டதாகத் தான் தோன்றியது. ஆனால் திரும்பவும் வந்துவிட்டது. அது இலேசாய்ப் போகிற வியாதியாகக் காணப்படவில்லை. எந்த மருந்தும் பலிக்கவில்லை என்று கண்டதும், மஸாலை ஸாமான்களையும் உப்பையும் விட்டு விடும்படி அவளைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். அதற்கு அவள் ஸம்மதிக்கவில்லை. ‘மஸாலையையும் உப்பையும் விட்டுவிட வேண்டுமென்று உங்களிடம் வைத்தியர் சொன்னால், உங்களாலேகூட விடமுடியாதே!’ என்று என்னிடம் வாது பேசினாள். எனக்கு அவள் பேச்சு ஒருபுறம் மனவேதனையாகவும், ஒருபுறம் மனமகிழ்ச்சியாகவும் இருந்தது. அவள் பேரில் எனக்கு உள்ள அன்பு எவ்வளவு என்று காட்ட இது தகுந்த ஸந்தர்ப்பம் என்று கருதினேன். ‘நீ சொல்வது முற்றிலும் தவறு. நான் வியாதியாக இருந்து, என்னிடம் வைத்தியர் இவைகளோடு மற்றவைகளை விட்டுவிடச் சொன்னாலும் மறு வார்த்தை பேசாமல் விட்டுவிடுவேன். இதோ

பார்! வைத்தியர்கள் எதுவுமே சொல்லாவிட்டாலும், நானகவே சொல்லுகிறேன்: இன்றிருந்து ஒருவருஷ மட்டும் நான் உப்பு மஸாலே ஸாமான்களைத் தொடுவதில்லை. நீ அவைகளை விட்டாலும் சரி, விடாவிட்டாலும் சரி, நான் இனிமேல் அவைகளைத் தொடமாட்டேன்,' என்றேன்.

"அவள் திடுக்கிட்டுப் போனாள். சொல்ல முடியாத துக்கம் வந்துவிட்டது. 'தயவு செய்து என்னை மன்னியுங்கள்! உங்கள் குணமறிந்தும் உங்களுக்கு இப்படிக் கோபமூட்டினேனே. நான் அந்தச் சாமான்களைத் தொடுவதில்லை என்று வாக்களிக்கிறேன். உங்களுக்குப் புண்ணியமுண்டு; நீங்கள் கூறின சபதத்தை அகற்றிவிடுங்கள். அதை என்னாலே சகிக்க முடியாது,' என்று கண்ணீரோடு சொன்னாள்.

"'நீ அந்தப் பொருள்களைச் சாப்பிடாமல் இருந்தால், உன் உடம்பிற்கு நல்லதுதான். எவ்வளவிற்கு அந்தச் சரக்குகளைத் தவிர்க்கிறாயோ அவ்வளவிற்கும் உனக்குச் சுகந்தான் கிடைக்கும் என்பதிலே எனக்குக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. ஆனால், நான் மட்டும் மனமறியச் செய்துவிட்ட ஸங்கல்பத்திலிருந்து பின்வாங்கவே முடியாது. இதனாலே எனக்கு நன்மைதான் ஏற்படப் போகிறது. இந்திரிய நிக்ரஹத்துக்கு மனிதனைத் தூண்டுகிற காரணம் எதுவாக இருந்தால் என்ன? அதனாலே அவனுக்கு நன்மைதான். என்னைத் தொந்தரவு பண்ணாமல் விட்டுவிடு. இது எனக்கு ஒரு பரிசையாகவும் உனக்கு உன் தீர்மானத்தை நிறைவேற்றும் அறத்தின் ஆற்றலாகவும் இருக்கட்டும் என்றேன். இவ்வளவு சொன்னபிறகு என்னை என் தீர்மானத்திலிருந்து திருப்பமுடியாதென்று உணர்ந்து கொண்டாள். 'நீங்கள் ரொம்பப் பிடிவாத குணமுள்ளவர்கள். யார் சொன்னாலும் கேட்கமாட்டீர்கள்,' என்றாள்; கண்ணீரால் தனக்கு ஆறுதல் தேடிக்கொண்டாள்."

இந்தச் சம்பவத்தை மகாத்மா ஒரு ஸத்யாக்கிரஹமாகவே கருதுகிறார். தமது வாழ்க்கையிலே இதை 'இனிமையான ஞாபகங்களில் ஒன்று' என்கிறார். "கஸ்தூரிபா உப்பு மஸாலை. ஸாமான்களை அறவே ஒழித்ததிலிருந்து, அவள் சீக்கிரம் சுகமடையத் தொடங்கினாள். இரத்தப் போக்கு முற்றிலும் அவளை விட்டு அகன்று போயிற்று. ஏற்கெனவே பாமர வைத்தியன் என்று பேரெடுத்திருந்த எனக்கு இதனால் இன்னும் பிரக்கியாதி ஏற்பட்டது," என்று சுய சரித்திரத்திலே சொல்லுகிறார்.

பிரம்மசரியத்திற்குத் தூண்டிய குழந்தையின் ஜனனம்

"கடைசிக் குழந்தையின் ஜன்னம் அதி தீவிரமான பரீக்ஷைகளுக்கு என்னைத் தூண்டிவிட்டது," என்று மகாத்மா காந்தி எழுதுகிறார். கஸ்தூரிபாவுக்குப் பிரஸவ வேதனை எதிர்பாராதபடி திடீர் என்று ஆரம்பித்து விட்டது. அந்த நேரத்திலே எந்த வைத்தியருடைய உதவியும் கிடைக்கவில்லை. மருத்துவ ஸ்திரீயை அழைத்துவர வெகு நேரமாகிவிட்டது. மருத்துவச்சி பக்கத்திலே இருந்தாலும் என் மனைவிக்கு விசேஷமான உதவியொன்றும் செய்திருக்க முடியாது. குழந்தையின் க்ஷேமகரமான ஜனனத்தை நானே நேரில் கவனிக்க வேண்டியதாக இருந்தது."

இந்தக் குழந்தை தான் தேவதாஸ் காந்தி. அவர் தாம் இப்பொழுது ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திராதிபர். அவருடைய ஜனனம் காந்தி தம்பதிகள் சரித்திரத்திலே ஒரு புதிய அத்தியாயத்திற்கு ஆரம்பமாக இருக்கிறது.

சில வருஷங்களாக மகாத்மாவின் செவிகளிலே உன்னதமான ஆத்மிக வாழ்க்கையைப் பற்றிய ஒரு பரம அழைப்பு தொனித்துக்கொண்டே இருந்தது. அந்த அழைப்பிற்கு இசைந்து அதன்படியே வாழ அவருடைய உள்ளம் நாடியது. முடிவிலே, என்ன வந்தாலும் வரட்டும்,

அந்தஅழைப்பிற்குக் கீழ்ப்படியத்தான் வேண்டும் என்று தீர்மானித்தார். வெள்ளையர்களுடைய ஆதிக்கத்திலிருந்து தம்முடைய தேசத்தாரை விடுதலை செய்யவும், விடுதலையடைந்த பிறகு தமது தேசத்தார் மூலமாக சர்வாதிகாரிகளுக்கும் வல்லரசுகளுக்கும் கீழே நெருக்குண்டு கிடக்கும் திராணியற்ற மனித ஸமூகங்களை விடுதலை செய்யவும், தம்மை முழுக்க அர்ப்பணம் செய்ய வேண்டுமானால், அந்தத்தெய்விக அழைப்பிற்குக் கீழ்ப்படிந்துதான் ஆகவேண்டுமென்பதை நன்ருக உணர்ந்தார். இந்திரிய நிக்ரஹம் செய்து காமாதி ஆசைகளை அடக்கினுலொழிய, பொதுஜன ஸேவையிலே ஒருமுகமான சிரத்தையோடு இறங்க முடியாதென்பதை 1906-ம் வருஷம் நன்ருக உணர்ந்துகொண்டார். அந்த வருஷத்திலே தான் பிரம்மசர்ய விரதத்தை ஜீவிய காலமெல்லாம் அநுஷ்டிப்பதாகத் துணிந்தார்; அதற்கு என்ன காரணம் என்று தமது சுய சரித்திரத்தில் பின் வருமாறு கூறுகிருர் :—

'இந்த விரதத்தை ஜீவிய காலமெல்லாம் அநுஷ்டித்தாலொழிய, மனுஷ்ய ஸமூக உத்தாரணத்திற்காகப் பாடுபட விரும்புகிற எந்த மனிதனும் முழு மனதோடு, முழு ஆத்மாவோடு, முழுப் பலத்தோடு உழைக்க முடியாது என்று வெகு தெளிவாக உணர்ந்து கொண்டேன். இல்லற வாழ்க்கை இன்பங்களிலே ஈடுபட்டு, மக்களைப் பெற்று வளர்ப்பதிலேயே நோக்கமாக இருந்துவிட்டால், நான் அப்போது செய்து வந்தவை போன்ற பல கைங்கரியங்களை ஜன ஸமூகத்திற்கு என்னுல் செய்ய முடியாமற் போயிருக்கும் என்பது எனக்கு வெகு தெளிவாயிற்று. ஸங்கிரகமாகச் சொன்னுல், மூவாசைக் கடலிலே அழுந்திய வண்ணமே ஒருவன் முக்தி இன்பத்தை நாடமுடியாதென்பது நிச்சயம்." 1900-த்திலிருந்து அவ்வப்போது அநுஷ்டித்து வந்த பிரம்மசர்ய விரதத்தை 1906-ம் வருஷத்திலிருந்து வாழ் நாளெல்லாம் அநுஷ்டிக்கத் தீர்மானித்து விட்டார் மகாத்மா காந்தி.

மகாத்மா காந்தி இந்தப் பிரம்மசர்ய விரதத்தை ஆரம்பித்த கதையைப் பின்வருமாறு தமது சுய சரிதையில் எழுதுகிறார் :—

" இந்தக் கதையில், நான் பிரம்மசர்ய விரதத்தைப் பற்றி வெகு தீவிரமாக யோசிக்கத் தொடங்கின காலத்தைக் குறிப்பிடும் பகுதிக்கு வந்துவிட்டோம். எனக்குக் கலியாணமான நாள் முதலாக, ஏகபத்நி விரதம் என்ற கொள்கை உடையவன். எனக்கு ஸத்யத்தின் பேரில் இருந்த மோஹத்திலே ஒரு அம்சமாக விளங்கியது மனைவிக்கு உண்மையாக இருப்பது என்பதும். என் மனைவி விஷயத்திலேயும் பிரம்மசர்ய விரதம் அநுஷ்டிக்கவேண்டும் என்பதைத் தென் ஆப்பிரிக்காவிலிருந்தபோது தான் உணரலானேன்."

இப்படி மகாத்மா தீர்மானம் செய்வதற்கு முதலிலே அவரைத் தூண்டியது, அதிகமாகக் குழந்தைகளைப் பெறலாகாது என்பதே. அவரே அப்படிச் சொல்லுகிறார். "அளவுக்கு மிஞ்சிப் பிள்ளைகளைப் பெறலாகாது என்பதை நான் உணர்ந்தபோது, சுயேச்சையாகப் புலனடக்கத்தைக் கையாளத் தொடங்கினேன். இந்த முயற்சியில் ஏற்பட்ட சங்கடங்களுக்கு முடிவே இல்லை. நானும் என் மனைவியும் தனித் தனி படுக்கையில் படுத்துறங்கத் தொடங்கினோம்."

பிரம்மசர்ய விரதத்தை அநுஷ்டிப்பதிலே, மகாத்மா காந்திக்குத் தம்முடைய காமத்தையும் ஜட இச்சைகளையும் அடக்க வேண்டியதாக இருந்தது. கஸ்தூரிபாவுக்கோ பெண்பாலருக்கு இயற்கையான இச்சைகள் இடையூறாக இருக்கவில்லை. " இந்த இச்சைகளுக்கு என் மனைவி என்னை ஒருபோதும் தூண்டினதில்லை என்று அவள் விஷயத்திலே பாரபக்ஷமில்லாமல் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இஷ்டமிருந்தால், பிரம்மசர்ய விரதத்தை அநுஷ்டிப்பது எனக்கு வெகு சுலபமானது தான். திடசித்தமின்மையும் காமப் பற்றுமே அந்த விரதத்தை

அவ்வளவு தைரியமாக ஏற்றுக்கொள்ள முடியாதபடி என்னைத் தடைசெய்தன."

இந்த விஷயத்திலே கஸ்தூரிபா அவரைவிடத் திட சித்தமுடையவராகவே காணப்பட்டார். மகாத்மா தமது காமத்தை அடக்கியாள்வதில் வெற்றி பெறுவதற்கு முந்தியே கஸ்தூரிபா அந்த இச்சை மீது ஜயக்கொடி நாட்டிவிட்டார். இவரும் மனுஷ்யப் பிறவி என்பதை நாம் மறந்து விடலாகாது. அந்த இச்சை மீது ஜயம் பெறுவதிலே இவருக்கும் தமது நிலைமைக்கு ஏற்ற அளவில் இடையூறுகள் ஏற்படவில்லை என்று நாம் நினைத்து விடலாகாது. எல்லாப் பெண்களுக்கும் இயல்பாக உள்ள காம இச்சைகளை இவர் இளம் பருவத்திலேயே மேற்கொள்ளப் பழகிவிட்டார். இச்சை - அடக்கத்தைக் கற்றுக்கொள்வதற்கு இவர் எந்தப் பாட புஸ்தகத்தையும் வாசிக்கவில்லை.

மகாத்மா காந்தி பிரம்மசர்ய விரதம் அநுஷ்டிக்க ஸங்கல்பம் செய்தபோது கஸ்தூரிபாவுக்கு 31 வயது. உலகத்திலே பல பெண்கள் இந்த வயதிலே கலியாணம் செய்து கொள்வதுமுண்டு. அந்தப் பருவம் மண வாழ்க்கையின் ஸுகபோகங்களை அநுபவிக்கப் பெரிதும் பிந்தியது அன்று. இந்தப் பருவத்திலே இவர் தமது இச்சையை அடக்கியிரா விட்டால், மகாத்மா காந்தி பிரம்மசர்ய விரதம் அநுஷ்டிப்பதாக ஸங்கல்பம் செய்துவிட்டுத் திண்டாடித் திக்குமுக்காடித் தோற்றுப் போயிருப்பார். ஆகையால், மகாத்மா காந்தி 1906-ம் வருஷத்தில் இவ்விஷயமாகத் தமது மனைவியோடு ஆலோசனை பண்ணினார். கஸ்தூரிபா காந்தி தமது நாயகருடைய பிரம்மசர்ய ஸங்கல்பத்திற்குத் தாம் முற்றிலும் உடன்படுவதாகக் கூறினார்.

தென் ஆப்பிரிக்காவிலே காந்தி தம்பதிகள் குடும்ப ஜீவியம் ஆரம்பித்த நாள் முதலாக அடிக்கடி அன்னை கஸ்தூரிபா அநேக தியாகங்கள் செய்ய நேர்ந்தது.

உலகத்திலே வாலிபப் பெண்கள் குடும்ப ஜீவியத்திலே எதிர்பார்க்கிற அநேக ஸுக போகங்களை அன்னை கஸ்தூரிபா ஒன்றின் பின் ஒன்றாகத் தியாகம் செய்தார். அன்னை கஸ்தூரிபாவைத் தியாக ஸௌந்தர்யத்தின் அவதாரமென்றே சொல்லவேண்டும். ஆடம்பரங்களும் வாழ்வின் இன்ப உல்லாஸங்களும் அன்னைக்குச் சிறு பிராயத்திலிருந்தே அவ்வளவு கவர்ச்சியாகத் தோன்றவில்லை. சரீர ஸம்பந்தமான இச்சைகளைத் தியாகம் பண்ணுவது மகாத்மாவை விட அன்னைக்கு வெகு சுலபமாகவே இருந்தது.

நாயகர் ஏதோ ஒரு விரத ஸங்கல்பத்தைப் பற்றிப் பேசினார்; அதை மறு வார்த்தை பேசாமல் தாழ்மையோடு மௌனமாக அங்கிகரித்துவிட்டார் அன்னை கஸ்தூரிபா என்று நாம் நினைக்கலாகாது. எந்தக் காரியத்திலும் அன்னைக்குப் பூர்ண சுதந்திரம் இருந்தது. அதிலும் விசேஷமாக, இப்படிப்பட்ட காரியங்களிலே தம் சித்தப்படி தான் தமது மனைவி நடக்கவேண்டுமென்று மகாத்மா காந்தி ஒருபோதும் வற்புறுத்தினதில்லை. தம்முடைய பகுத்தறிவிற்குத் தருமமென்று தோன்றியவைகளையே செய்வதற்கு ஒப்புக்கொண்டார் அன்னை கஸ்தூரிபா. இவர் ஒருபோதும் பசுவைப் போல் ஸாதுவாகவும், வாயில்லாப் பிராணியாகவும், கோழை நெஞ்சினராகவும், இருந்ததில்லை. தமக்கிஷ்டமில்லாதவைகளைத் தமது நாயகர் செய்யச் சொன்னால் முடியாதென்று சொல்ல அவர் தயங்கினதில்லை. கணவர் சொல்லி விட்டாரே என்பதற்காக ஏதேனும் ஒன்றைச் செய்து விடுகிற பேர்வழியுமல்லர் நமது அன்னை கஸ்தூரிபா.

கஸ்தூரிபாவிடம் காணப்பட்ட இந்தச் சுதந்திரத் தன்மையை நன்றாய் அறிந்தவர் மகாத்மா காந்தி. ஆகையால் குடும்ப ஸம்பந்தமான எந்தக் காரியங்களையும் தமது நாயகியோடு கலந்து ஆலோசியாமல் அவர் செய்ததேயில்லை. பிள்ளைகளுடைய படிப்பு விஷயமாகவும் அவர்களுடைய வளர்ப்பு விஷயமாகவும் அவர் தமது

மனைவியோடு கலந்து பேசிய பின்னரே முடிவு செய்வார். கஸ்தூரிபாவின் வாழ்க்கையிலே நாம் அடிக்கடி பார்க்கிற சிறந்த லக்ஷணம் அவருடைய சுதந்திர மனப்போக்குத் தான்.

தென் ஆப்பிரிக்காவிலே ஸத்யாக்ரஹம் தொடங்குதல்

இந்தப் பிரம்மசர்ய விரதம் ஆரம்பித்து இரண்டு மாதமாகவில்லை. தென் அப்பிரிக்காவிலே ஸத்யாக்ரஹம் ஆரம்பமாகும் சமயம். மகாத்மா காந்தி சட்டமறுப்புச் செய்வதற்காகச் சில பெண்களைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கினர். அவர்களிலே சிலர் அவருடைய உறவினர்கள். அந்த இயக்கத்தில் சேர்ந்த அநேகரை அவருக்கு வெகு நன்ருகத் தெரியும். காந்திஜி என்ன சொன்னலும் அவர்கள் மறுக்கமாட்டார்கள். என்ருலும், அவர்கள் எதையும் மனப்பூர்வமாகச் செய்யவேண்டும் 'என்பதுதான். மகாத்மாவின் விருப்பம். ஒரு நாள் இது விஷயமாக அவர் ஸத்யாக்ரஹ இயக்கத்திற்குத் தயாராக இருந்த பெண்களோடு பேசிக்கொண்டிருந்த பொழுது, கஸ்தூரிபா ஒரு ஜன்னலின் பக்கத்திலே நின்று அந்தச் சம்பாஷணை முழுவதையும் கேட்டுக்கொண்டிருந்தார். அங்கிருந்த பெண்கள் எல்லாரும் தண்டனைக் காலம் முடிவடையுமுன் சிறைச்சாலையை விட்டு வெளியேறுவதில்லை என்று வாக்களித்தார்கள்.

“இந்த விஷயத்தைப்பற்றி நீங்கள் ஏன் என்னிடம் சொல்லவில்லை? ஜெயிலுக்குப் போக முடியாதபடி தடைசெய்யக் கூடிய குணம் என்னிடத்திலே என்ன கண்டீர்கள்? சட்ட மறுப்புக்கு நான் மட்டும் தகுதியற்றவளா?” என்று கேட்டார், காந்திஜி வீட்டுக்கு வந்ததும், கஸ்தூரிபா அவரிடம். அதற்கு மகாத்மா காந்தி, “உனக்கு எவ்விதத் துன்பமும் செய்ய எனக்கு இஷ்டமில்லை என்று நன்ருய்த் தெரியுமே. எனக்கு உன்னிடத்திலே நம்பிக்கை உண்டா என்ற

கேள்விக்கே இடமில்லை. நீயும் மற்றவர்களோடு சிறைச் சாலைக்குப் போவதானால் அதுவே எனக்கு மிகப் பெரிய சந்தோஷம். என்றாலும் என்னைத் திருப்தி செய் வதற்காகச் சிறைக்குச் சென்றாய் என்று வரலாகாது. இந்த மாதிரியான விஷயங்களில், அவரவர்களே தங்க ளுடைய சக்தியையும் தைரியத்தையும் நம்பினவர்களாகத் துணிந்திறங்க வேண்டும். நீயும் சிறைச்சாலைக்குப் போக ஆயத்தமாக இருக்கிறாயா என்று நான் கேட்டிருந்தால், நான் கேட்டுக் கொண்டதற்காக நீ போக உடன்பட் டிருக்கக்கூடும். அப்படி எனக்காக ஜெயிலுக்குப் போக இறங்கிவிட்டு, நீதி ஸபையிலே நடுங்கவோ, சிறைச்சாலை யில் கஷ்டங்களைக் கண்டு அஞ்சவோ செய்தால், நான் ஒருபோதும் உன்னைக் குறைசொல்ல முடியாது. அப்படி ஏதாவது நடந்துவிட்டால் உன் செய்கை எனக்கு எப்படி யிருக்கும் என்று நினைத்துப்பார். அதன் பிறகு நான் எப்படி உன்னை என் வீட்டிலே ஏற்றுக்கொள்வது? எப்படி உலகத்தாரின் முகத்திலே விழிப்பது, தலை யெடுத்து நடப்பது? இப்படிப்பட்ட ஸந்தேகங்கள்தான் 'நீயும் ஜெயிலுக்குப் போகிறாயா?' என்று உன்னைக் கேட்காதபடி என்னைத் தடை செய்தது," என்றார்.

"ஜெயில் உபத்திரவங்களைச் சகிக்க மாட்டாமல் மன்னிப்புக் கேட்டு வெளியேறி விட்டால், நீங்கள் என் முகத்திலேயே விழிக்க வேண்டாம். நீங்கள் கஷ்டங்களைச் சகிக்கமுடியும் என்றால் என் பிள்ளைகளும் கஷ்டத்தைச் சகிக்கமுடியும். நானும் இந்தப் போராட்டத்திலே கட் டாயம் கலந்து கொள்ளத்தான் போகிறேன்' என்றார் கஸ்தூரிபா.

"அப்படியானால் நானும் உன்னைக் கட்டாயம் சேர்த் துக்கொள்ளத்தான் போகிறேன். ஆனாலும், நன்றாக யோசித்துப் பதில் சொல்லு என்றுதான் இன்னொரு முறை சொல்லுகிறேன்," என்று உள்ளத்திலே ஸந் தோஷம் பொங்கப் புன்னகை செய்து கொண்டே காந்திஜி பதில் அளித்தார்.

"யோசிக்க வேண்டிய தொன்றுமில்லை. நன்றாக யோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன்," என்றார் கஸ்தூரிபா.

இதன் பிறகு கஸ்தூரிபாவும் தென் அப்பிரிக்கா ஸத்தியாக்கிரஹ இயக்கத்தில் கலந்துகொண்டார். இவரே முன் நின்று பெண்களை அந்த இயக்கத்தில் நடத்தினார். தென் அப்பிரிக்காவிலே நடந்த ஸத்தியாக்கிரஹ சரித்திரப் போரிலே மறக்க முடியாத ஒரு ஸம்பவம். அது ஆறு வருஷகாலம் நீடித்தது. அந்த ஆறு வருஷங்களிலே அன்னை கஸ்தூரிபா மகாத்மா காந்தியோடு திரும்பத் திரும்பக் கைதியாகிச் சிறைச்சாலைக்குப் போக நேர்ந்தது. அப்பொழுதெல்லாம், இவர் தேசத்தொண்டு புரிவதிலே சளைக்காதவராகவும், அஞ்சாத வீரராகவும் விளங்கித் தாம் எப்படிப்பட்டவர் என்பதை உலகத்தாருக்கு வெளிப்படுத்தினார். நாயகருக்கு ஏற்ற மனைவி என்பதை நிலைநாட்டினார். இந்த இயக்கத்தின் ஆரம்பத்திலேயே பட்டாணியர், மகாத்மா காந்தி தமது நாட்டைக் காட்டிக் கொடுத்து விட்டார் என்று ஸந்தேகப்பட்டு அவரைக் குற்றுயிராகும்படி அடித்தார்கள். அதையும் கஸ்தூரிபா தமது கண்ணாலே பார்த்தவர். மிகவும் நெருக்கடியான நிலைமையிலே குற்றம் விசாரிக்கப்பட்டு அவர் தண்டனைக்கு ஆளானதையும் இவர் பார்த்திருக்கிறார். மகா துரோகி ஒருவனைக் கல்லெறிந்து கொல்வது போலத் தமது கணவரைப் பகைவர்கள் கொல்வதையும் இவர் அஞ்சா நெஞ்சுடன் பார்த்துச் சகித்திருக்கிறார். ஃபினிக்ஸ் ஸெட்டில்மெண்டிலே சில நண்பர்கள் இயக்கத்தின் நடுவில் பின்வாங்கி விட்டதற்காகப் பதினாலு நாள் காந்திஜி உபவாசமிருந்த போது கவலை - நெருப்பிலே நடந்தவர் நமது அன்னை கஸ்தூரிபா. இந்தத் தென் அப்பிரிக்கப் போராட்டத்திலே இருந்து வெற்றிமாலை அணிந்தவராக வெளிப்பட்டு வந்த காந்திஜியின் பொலிவைக் கண்டு சொல்லவொண்ணாத குதூகலமடைந்தவரும் நமது அன்னையே.

நகைப்பற்று அறுத்தல்

மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவை விட்டு இந்தியாவுக்குத் திரும்பிவிடத் தீர்மானித்தார். அவரை வழி அனுப்பி வைப்பதற்காக நடைபெற்ற வந்தனோபசாரக் கூட்டத்திலே அநேக நண்பர்களும், அவருடைய குணநிசயங்களிலே ஈடுபட்டவர்களும் விலைபெற்ற வெகுமதிகளைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். பொன்னிலும் வெள்ளியிலும் செய்த பல பொருள்கள் வந்து குவிந்தன. சுமார் ஐம்பத்திரண்டு பவுன் பெறுமான நெக்லெஸ் ஒன்றைக் கஸ்தூரிபாவுக்கு வெகுமதியாக அளித்தார்கள். அன்று மாலை மகாத்மா காந்தி வீட்டுக்கு வந்ததும், இந்த வெகுமதிகளை யெல்லாம் தம்முடைய சொந்தத்திற்கு உபயோகிக்கும் தகுதியையும் தகுதியின்மையையும்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். இரவெல்லாம் அவருக்குத் தூக்கமே வரவில்லை. தமது ஊழியத்தை மதித்து இந்த வெகுமதிகளைத் தென் ஆப்பிரிக்க நண்பர்கள் கொடுத்ததினாலே, அவற்றைச் சொந்தத்திற்கென்று உபயோகிப்பது சரியல்ல என்றே அவருக்குப்பட்டது. கைங்கரியம் செய்பவர்களுக்குக் கைங்கரியமே வெகுமதி என்பது அவருடைய ஸித்தாந்தம். மேலும், அவருடைய வீட்டில் எவ்வித நகை நட்டுக்களும் இருக்கவில்லை. அதோடு, நகை நட்டுக்களிலே பணத்தை வீண் செலவு செய்யலாகாது என்று அவர் மற்றவர்களுக்கு உபதேசம் பண்ணி வந்தார். ஆகையால், தமக்குக் கிடைத்த பொருள்களையெல்லாம் பொது நன்மைக்காகப் பொது நிதியாக்கி வைக்க வேண்டுமென்று விரும்பினார். என்றாலும், இந்த விஷயமாக வீட்டிலே உள்ள மற்றவர்களோடு கலந்து ஆலோசியாமல் செய்வது சரியல்ல என்றுபட்டது. ஏன் என்றால், கிடைத்த வெகுமதிகளிலே சில, மனைவிக்கென்று கொடுத்தவை. அவற்றை எல்லாம் பொது நிதியாக வைப்பது அவருடைய பிள்ளைகளுக்கு உடன்பாடாகவே இருந்தது. ஆனால், இந்த விஷயத்தில் கஸ்தூரிபாவும் உடன்பட வேண்டுமானால், அந்தச் செய்கை நியாயமானதென்று அவருக்கும் புலப்பட வேண்டுமே.

மகாத்மாஜி தமது மனைவியிடம் நகைகளைப் பொது நன்மைக்காகக் கொடுத்து விடச் சம்மதந்தானா என்று கேட்டபோது, முதலிலே கஸ்தூரிபா முடியாதென்று மறுத்தார். "உங்களுக்குத் தேவையில்லை; உங்கள் பிள்ளைகளுக்கும் தேவை இல்லை. நீங்கள் எப்படி எல்லாம் ஆட்டி வைக்கிறீர்களோ, அப்படியெல்லாம் பிள்ளைகள் ஆடுவார்கள். நான் அணிந்து கொள்வது உங்களுக்கு இஷ்டமில்லையென்றால் அணியமாட்டேன். ஆனால் என் 'நாட்டுப்பெண்'கள் காரியம் என்னவாகிறது என்கிறேன். அவர்களுக்கு நகைகள் வேண்டாமா? நாளைக்கு என்ன வரும் என்று யாருக்குத் தெரியும்? அவ்வளவு அன்போடு கொடுத்த வெகுமதிகளை இழக்க நான் உடன்படமாட்டேன்."

இந்தச் சம்பவத்தைப் பற்றிச் சுயசரித்திரத்தில் எழுதும்போது, மகாத்மா சொல்லுகிறார்:—

"நான் சாந்தமாகப் பதில் சொன்னேன்: 'பிள்ளைகள் இனி எப்பவோ கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறார்கள். நாம் அவர்களுக்குச் சின்ன வயதிலேயே கலியாணம் பண்ணிப் பார்க்கப் போகிறதில்லை. அவர்கள் பெரியவர்களாகிறபோது தங்கள் காரியங்களைத் தாங்களே பார்த்துக் கொள்வார்கள். அதுவுமில்லை; நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு நகைப் பைத்தியம் பிடித்த பெண்களைக் கலியாணம் பண்ணிவைக்கப் போகிறதுமில்லை. அப்படியே அந்தக் காலத்திலே அவர்களுக்கு நகைகள் போட வேண்டுமென்று ஏற்பட்டால் நான் இருக்கிறேன். அப்பொழுது நீ என்னிடம் கேள்' என்றேன்.

"'உங்களையா கேட்க முடியும்? இவ்வளவு நாள் இருந்தும், உங்களை இன்னார் என்று எனக்குத் தெரியாதா? என் நகைகளை ஒன்றில்லாமல் பாழடித்து என்னை வெறுங்கோலமாக்கி வைத்தீர்கள். நீங்கள் என்னை ஒரு போதும் அமைதியாக விடமாட்டீர்களே. என் நாட்டுப் பெண்களுக்கு நீங்களா நகை வாங்கிப் போடுகிறவர்கள்?

ரொம்ப நன்றாய் இருக்கிறது. இப்போதிருந்தே என் பிள்ளைகளை யெல்லாம் ஸந்யாஸிகளாக்கப் பார்க்கிற நீங்களா நகை வாங்கிப் போடுவீர்கள்? முடியாது, நான் என் நகையைத் தர முடியாது. என் நெக்லேஸைக் கேட்க உங்களுக்கு என்ன அதிகாரமிருக்கிறது?'

"'சரிதான். நான் ஒன்று கேட்கிறேன். நான் செய்த ஊழியத்திற்காகவா, அல்லது நீ செய்த ஊழியத்திற்காகவா அந்த நெக்லேஸை அளித்தார்கள்? அதைச் சொல்லு.'

"'நீங்கள் செய்த ஊழியமாகத்தான் இருக்கட்டுமே. நீங்கள் செய்த ஊழியமெல்லாம் நான் செய்த மாதிரித்தான். நான் உங்களுக்காக இராப்பகலாகப் பாடுபடவில்லையா? அது மட்டும் ஊழியமில்லையோ? நச்சுப் பிச்சு வேலைகளை யெல்லாம் என்மேலே சுமத்தி, அதையும் இதையும் செய்யும்படி நீங்கள் என்னைக் கட்டாயப்படுத்தவில்லையா? என்னை ரத்தக் கண்ணீர் விடும்படிச் செய்தீர்களே. நானுந்தான் அவர்களுக்காக இப்படி யெல்லாம் பாடுபட்டிருக்கிறேன்.'

"இதெல்லாம் என்னைக் குத்தாமல் குத்தின வார்த்தைகள். அவை என் உள்ளத்திலே ஊடுருவிப் பாய்ந்தன. என்றாலும், நான் அந்த நகைகளை யெல்லாம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றே தீர்மானித்தேன். அவள் அவைகளைக் கொடுத்து விடும்படி நான் எப்படியோ செய்துவிட்டேன். 1898-ம் வருஷத்திலும் 1901-ம் வருஷத்திலும் கிடைத்த நகைகளை யெல்லாம் நாங்கள் திருப்பிக் கொடுத்துவிட்டோம்."

இந்த நகைச் சண்டையிலே அன்னை கஸ்தூரிபாவைக் கவனித்துப் பாருங்கள். அன்னை தமக்கென்று அந்த நகைகளை வைத்துக் கொண்டதாக ஒப்புக் கொள்ளவில்லை. தமது 'நாட்டுப்பெண்'களுக்கென்று வைத்திருந்ததாகவே சொல்லுகிறார். அன்போடு மற்றவர்கள் கொடுக்கும் வெகுமதிகளைப் பெறுவதிலே தப்பிதம்

இருப்பதாக அவருடைய எளிய மனப்பான்மைக்குத் தோன்றவில்லை. அன்னைக்குள்ளே இருந்த பெருந்தன்மையையும் பரிசுத்தப் பெண்மையின் வாய்மொழியையும் தான் இந்தச் சம்பாஷணையிலே பார்க்கிறோம். காந்திஜி ஒரு மகாத்மா. கஸ்தூரிபாவோ அன்புமிக்க அன்னை. தமது 'நாட்டுப்பெண்'களுக்காக அந்த நகைகளை வைத்திருக்கப் போவதாகச் சொன்னதிலே அன்னையின் 'மானுஷீக மனோபாவ'த்தையே பார்க்கிறோம்.

நேர்மையான உணர்ச்சிகள் நிறைந்த எந்தப் பெண்ணும் தன் குழந்தைகள் மீது அன்பு நிறைந்திருப்பது இயல்பு. இதுவே பெண் தகைமையின் லக்ஷணம். அதோடு, மனைவி, வீட்டிலுள்ளவர்களிடத்திலும், நண்பர்களிடத்திலும், அதி தீவிரமான அன்பு பாராட்டி எப்பொழுதும் அவர்களுடைய க்ஷேமலாபங்களையே எண்ணுகிறவள். மற்றெந்த நிலைமையில் இருப்பதைப் பார்க்கிலும் கிரஹஸ்தாச்ரமத்திலே இருப்பதினால் அநேகருக்கு நன்மை செய்ய முடியும் என்ற ஒரே எண்ணம்தான் இந்தியப் பெண்மணிகளை இல்லறப் பற்றுக்கு ஆளாக்கி யிருக்கிறது. மனை என்னும் ஒளி மண்டலத்திலே தண்ணளியாகிற வெண்கொற்றக் குடைக்கீழ் அமர்ந்து ஆளும் பெண்மையின அரசு அல்லவோ வீட்டுத் தாய்? தன் கை நோக்கியிருக்கும் மக்களுக்காகவும் பிறருக்காகவும் அல்லும் பகலும் பாடுபடுவது அவளுக்குக் கிடைத்த பாக்கியம். அதுவே அவளுக்குப் பொன்னினும் அரியதெனத் தகும் உரிமை. அந்த உரிமையைக் காக்கவும் தம் கடமையைச் செலுத்தவும் அன்னை கஸ்தூரிபா முயன்றதில் எவ்விதத் தப்பிதமும் இல்லை. இதற்கு அன்னியமாக இவர் நடந்திருக்கவும் முடியாது. தம் பிள்ளைகளுக்காகவும் பேரப் பிள்ளைகளுக்காகவும் கவலைப்படுகிற ஒரு தாயைச் சுயநலப் பேர்வழி என்று ஒருபோதும் சொல்லவே முடியாது. இது பெண்களின் அமைப்பு-லக்ஷணம்.

இயற்கையிலே எங்கே வேண்டுமானாலும் பாருங்கள். தாய்மை வருங்காலத்துச் சந்ததிக்காகக் கவலைப்பட்டு

எத்தனை விதமான பாதுகாப்புக்களை யெல்லாம் செய்து வைத்துப் போகிறது என்று ஆராய்ந்து பாருங்கள். ஆகையால் அன்னை, "என் நாட்டுப்பெண்களுக்காக இந்த நகைகளை வைத்துக் கொள்ளப் போகிறேன்" என்று சொன்னபோது, பெண்களின் பொதுவான தர்மத்தையே சொல்லுகிறார். இந்த விஷயத்திலே இவர்கள் கள்ளங் கவடாகப் பேசவில்லை. தாம் சொன்னதை நன்றாக உள்ளத்தில் உணர்ந்தே சொன்னார். பாரதநாட்டுப் பெண்களுக்கே தமது ஸந்ததியின் நலத்தைக் கோருவது ஒரு தனி லக்ஷணம். இதைத்தான் திருவள்ளுவர்,

> ஈன்றபொழுதிற் பெரிது உவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய்

என்கிறார்.

5. இந்தியா விஜயம்

அஹமதாபாத் ஆச்ரமம்

மகாத்மா காந்தி தமது மனைவி மக்களோடு 1915-ம் வருஷம் ஜனவரி மாதம் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். காந்தி—குடும்பத்தாருக்குப் பிற்கால உறைவிடமும், மகாத்மாவுக்கும் அவருடைய கூட்டுழைப்பாளிகளுக்கும் 'ஸத்யசோதனை' செய்வதற்கமைந்த ஆராய்ச்சி சாலையுமான அஹமதாபாத் ஆச்ரமத்தை அதே வருஷத்தில் மே மாதம் ஸ்தாபித்தார். அந்த ஆச்ரமத்தின் அங்கத்தினர்களிலே தமது பெயரை முதல் முதலில் பதிவுசெய்து கொண்டவர் அன்னை கஸ்தூரிபா. தேசசேவைக்காக அந்த ஆச்ரமத்திலே முதலில் குடியேறினவர்கள் ஆணும் பெண்ணும் அடங்கலாக 25 பேர்தான் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஒரே சமையல் அறையிலே சமைத்துச் சாப்பிட்டு ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். ஆச்ரமவாஸிகளிலே இளையவர்களுக்கெல்லாம் அன்னை கஸ்தூரிபா குலதெய்வமாக விளங்கினதோடு, அவர்கள் அனைவருக்கும் பெற்ற தாயிலும் அன்பு

பாராட்டும் 'பா' அன்னை ஆகவே விளங்கினார். அதே வருஷத்தில் அந்த ஆச்ரமத்திலே வந்து தங்கின ஸ்ரீமதி ஸரோஜினிதேவி, தம்முடைய பார்வையிலே அன்னை கஸ்தூரிபா எந்தவிதமாகக் காணப்பட்டார் என்பதை வெகு அழகாக விவரிக்கிறார் :—

"தமது நாயகருடைய அபஜயங்களிலே, எளிமையும் கம்பீரமும் அஞ்சாத நெஞ்சமும் உடையவராகவும் அவருக்குப் பக்கத்துணையாகவும் நின்றது போலவே, ஜயவீரராக நின்ற நேரங்களிலும் அவருக்குப் பக்கத்திலே இவரும் எளிமையும் கம்பீரமும் கண்ணியமும் வாய்ந்த துணைவியாகவே விளங்கினார். நொந்து மெலிந்த வீரக் கை ஒன்றிலே தமது தேசத்துப் பெண்களின் கண்ணியத்தை விளங்கப்பண்ணும் சுடர் விளக்கை ஏந்தியவராகவும், மற்றொரு கையால் அன்னிய நாட்டுப் போர்ச் சேவகர்களின் முரட்டு உடைகளைத் தைப்பவராகவும் அன்னை கஸ்தூரிபா தோற்றமளிக்கும் காட்சியை என் மனக் கண்ணால் பார்க்கிறேன். தென் ஆப்பிரிக்கா—இயக்கத்தை நடத்திய மாபெரும் தலைவர்! கோக்கலே சொன்னபடி, களிமண்ணிலிருந்து மகா வீரர்களை வார்த்தெடுத்தவர் என்றெல்லாம் புகழத் தகுந்த மகாத்மா, தரையில் ஒரு திண்டுமீது சாய்ந்தபடியே அமர்ந்திருந்தார்; அவருக்குச் சற்றுச் சுகவீனம். கொட்டைகளும் பழங்களுமே அவருடைய அன்றாட அற்ப ஆகாரம். அவைகளை அவர் மெல்ல மென்று தின்றுகொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்திலே உட்கார்ந்து நானும் அவைகளைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அந்நேரத்தில், அவருடைய மனைவி, ஒரு தேசத்தின் சுதந்திரப் போராட்டத்திலே நூற்றுக்கணக்கான மாட்சிமை பெற்ற அரும்பாடுகளை அநுபவித்த ஸஹசரியாகப் பக்கத்திலே இருப்பதற்குப் பதிலாகக் குடும்ப ஸம்பந்தமாக நூற்றுக்கணக்கான அலுவல்களிலே ஈடுபடும் அடக்க ஒடுக்கமுள்ள இல்லக் கிழத்தியாக அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருப்பதே தமக்குப் போதுமென்று எண்ணியவர்போல விளங்கினார் அன்னை கஸ்தூரிபா."

ஆச்ரமக் குடும்பம்

அஹமதாபாத் ஆச்ரமத்திலே எல்லாக் காரியமும் செவ்வையாகத் தட்டுத் தடங்கலின்றி நடக்கவில்லை. ஆச்ரம ஸ்தாபனத்திற்கு அவசியமான பிரமாணங்களைத் திட்டம் பண்ணிச் சட்டங்கள் எழுதும்போது, ஹரிஜனங்களையும் ஆச்ரம வாஸிகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற பேச்செழுந்தது. அப்பொழுது மகாத்மாஜி, ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவர்களிலே யாராவது ஆச்ரம வாசியாக இருக்க விரும்பினால், அவன் மற்றப்படி எல்லா விஷயங்களிலும் தகுதியுள்ளவனாக இருந்தால், தாம் அவனை ஆச்ரமத்திலே சேர்த்துக் கொள்ளத் தீர்மானித்துவிட்டதாகத் தமது உடன்—உழைப்பாளிகளுக்கு வெகு தெளிவாகக் கூறினார். ஆச்ரமம் ஆரம்பித்துச் சில மாதங்கள் சென்றன. அப்பொழுது, மகாத்மா செய்த தீர்மானத்திற்குப் பரிக்ஷையும் வந்தது. ஹரிஜன வகுப்பைச் சார்ந்த ஒரு குடும்பத்தார் ஆச்ரம வாஸிகளாக வாழவேண்டும் என்று வந்துவிட்டார்கள். மகாத்மா காந்தி தமது கூட்டுழைப்பாளிகளில் சிலரோடு கலந்து யோசித்த பிறகு அவர்களை ஆச்ரமத்திலே சேர்த்துக் கொண்டார்.

அவ்வளவு தான். குழப்பம் ஆரம்பமாயிற்று. ஆச்ரமத்துக்காகப் பண உதவி செய்தவர்கள் மட்டுமல்ல, ஆச்ரம வாஸிகளிலே சிலர் கூட இந்த விஷயமாகக் கலவரமடையத் தொடங்கி விட்டார்கள். பண உதவி செய்தவர்கள், மேல்கொண்டு பண உதவி செய்ய முடியாதென்று மறுத்து விட்டார்கள். அது மட்டுமா? வெளியே உள்ள நண்பர்களும் ஆச்ரமத்தை பஹிஷ்காரம் பண்ணி விடவேண்டும் என்று பேசிக் கொண்டார்கள். பண விஷயமாக ஏற்பட்ட நெருக்கடியை மகாத்மா வெகு சீக்கிரம் சமாளித்துக் கொண்டார். ஆனால், ஆச்ரமத்திற்குள்ளே கிளம்பின புசலிலிருந்து தப்பி மீள்வது தான் அவருக்கு ரொம்பச் சிரமமாக இருந்தது. வெளியே இருந்து கிளம்பின புசலை விட உள்ளே இருந்து அடிக்கத்

தொடங்கின சூறுவளி வெகு கொடூரமாக இருந்தது. அதைச் சமாளிக்க அவருடைய பொறுமையையும் திறமைகளையும் பூரணமாகக் கையாள வேண்டியதாயிற்று. ஹரிஜனங்களையும் ஆச்ரம வாஸிகளாக அங்கிகாரம் பண்ணுவது கஸ்தூரிபாவுக்கும் ஆச்ரமத்திலே வாழ்ந்த சில பெண்களுக்கும் உடன்பாடாக இல்லை. அவர்களையும் ஆச்ரமத்திலே சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும்படிச் செய்வது வெகு சிரமமாக இருந்தது. ஜன ஸமூக பஹிஷ்காரத்தினாலே ஆச்ரம வாழ்க்கை மிகவும் நிர்ப்பந்தமான நிலைக்கு வந்துவிடும் என்று அவர்கள் நினைத்தார்கள். வரவர எல்லாம் சிக்கலாகிவிட்டது. கஸ்தூரிபாவைத் தம் அபிப்பிராயத்திற்கு உடன்படச் செய்ய இயலாதபோது மகாத்மா மனவேதனைப் பட்டார். ஆறாத் துயரத்தினாலே ஏழு நாட்கள் உண்ணா விரதமிருந்தார். அவர் சாப்பிடாமல் இருந்ததின் காரணம் கஸ்தூரிபாவைத் தவிர ஆச்ரம வாஸிகளில் யாருக்குமே புலப்படவில்லை. ஹரிஜனக் குடும்பத்தாருக்கு அளித்த மாறாத உறுதி - வார்த்தையின் மறைவிலே, அந்த ஆச்ரமத்துக்கும் அதற்கு அடிப்படையான மூல தத்துவங்களுக்கும் அடிப்படையான தத்துவ ஞானம் இன்னதென்றும், ஹரிஜனங்களை ஏற்றுக் கொள்ளா விட்டால் அப்படிப் பட்ட மகத்தான ஒரு கைங்கரியம் நடைபெற முடியாதென்றும் கஸ்தூரிபாவுக்குப் படிப்படியாக அந்த ஏழு நாட்களிலே புலப்படலாயிற்று. ஆச்ரமமாகிற உடலுக்கு உயிர்தான் மகாத்மா. அவர் இல்லாமல் ஆச்ரமம் இயங்காது. தமது கணவர் தம்மிடத்திலே ஒப்படைப்பது, குடும்பமோ, ஆச்ரமமோ, வாழ்க்கையின் ஒரு முக்கிய சித்தாந்தமோ, எதுவாக இருந்தாலும் அதை விடாப் பிடியாகப் பற்றிக்கொள்ளும் இயல்புடையவர் அன்னை கஸ்தூரிபா. இவருக்கு ஸத்யம் புலப்பட்டவுடனே, ஏழாவது நாள், எதிர்ப்பதை விடுத்துக் காந்திஜியின் விருப்பப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டார். இந்தச் சம்பவத்திற்குப் பின், ஹரிஜனங்களோடு உறவாடுவதிலே இவருக்கிருந்த ஸகல 'கூச்சநாச்சங்'களும் வேரற்றுக் கருகிப்போய் விட்டன. இதன்

பிறகு, தமது நாயகர், இந்து ஸமூகத்தின் அழகைக் கெடுத்துப் பழிக்குக் காரணமாக இருக்கும் தீண்டாமைப் பூண்டை வேரோடு கிண்டெறிய எடுத்துக்கொண்ட ஸகல முயற்சிகளுக்கும் முன் நின்று உதவி புரிந்தார்.

சம்பாரன் இயக்கம்

கஸ்தூரிபாவின் உள்ளத்தின் ஆழத்திலே ஏழை எளியவர்களைப் பற்றியும் ஆதரவற்றவர்களைப் பற்றியும் நிலையான அன்பு ஊறிக்கிடந்தது. 1917-ம் வருஷத்தில், அவுரிக் காடுகளின் முதலாளிகளான வெள்ளையர்களிடமிருந்து சம்பாரன் கிராமத்தாரை விடுதலை செய்ய மகாத்மா முயன்றபோது, அந்தக் கிராம வாஸிகளுடைய வீடுகள் தோறும் அறிவு—விளக்கேற்றி வைப்பதற்காக கஸ்தூரிபா காந்தியையும் வேறு சில மாதர்களையும் கூட்டுழைப்பாளிகளாகத் தெரிந்தெடுத்துக் கொண்டார். அந்தக் கிராமங்களில் ஏற்படுத்தின ஆறு பள்ளிக்கூடங்களிலே ஒரு பள்ளிக்கூடத்திற்கு அன்னையும் உபாத்தினியாக வேலை பார்த்து வந்தார். அன்னைக்கு அந்தக் காலத்திலே குஜராத்தி பாஷைகூட அவ்வளவு நன்ருக எழுதப் படிக்கத் தெரியாது. சுத்தம், நல்லொழுக்கம், முறைமை ஒழுங்கு கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடத்தல், முதலியவற்றை இவர் வேலை பார்த்து வந்த பள்ளிக்கூடத்தாருக்குப் போதிக்க வேண்டிய பொறுப்பு அன்னையைச் சார்ந்தது. வீடுதோறும் புகுந்து, அந்தக் கிராமப் பெண்கள் தங்கள் ஆடைகளைத் தோய்த்துச் சுத்தம் பண்ணிக் கட்டிக்கொள்ளாததின் காரணத்தை அறிவதும், துணிகளைச் சலவை பண்ணும் முறையைப் போதிப்பதும் அன்னையின் பிரதம வேலை. "கட்டிக்கொள்ள ஒரே புடவைதான் உண்டு; அதனுலேதான் நாங்கள் அதைத் தோய்த்துக் கட்ட முடியவில்லை" என்ருர்கள் அந்த ஊர்ப் பெண்கள். "மகாத்மாஜியிடம் ஒரு புடவை வாங்கித்தரச் சொல்லுங்களேன்; அப்போது, நான் தினந்தோறும் ஸ்நானம் பண்ணி நாள்தோறும் சுத்தமான உடை கட்டிக்கொள்கிறேன்," என்ருள்

ஒருத்தி. இதையெல்லாம் அன்னை மகாத்மாவிடம் வந்து சொன்னார். அந்தக் கிராமவாஸிகளின் வறுமை கொடியது. அன்னை கஸ்தூரிபா அப்படிப்பட்ட கஷ்டமான ஒரு பள்ளிக்கூடத்திலே தான் தமது தாய்நாட்டின் தரித்திர நிலைமையும், அறிவீனத்தையும் போக்கவும் தேசத் தொண்டாற்றவும் பாடங்களைப் படித்தார்.

1921-ம் வருஷத்து ஒத்துழையாமை இயக்கமும் கஸ்தூரிபாவின் அறிக்கையும்

மகாத்மாஜி 1921-ம் வருஷத்திலே ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கத்திலும், 1930-ம் வருஷத்திலும் 1932-ம் வருஷத்திலும் ஆரம்பித்த சட்டமறுப்பு இயக்கத்திலும் முக்கியமான அம்சங்களிலே பங்கெடுத்துக் கொண்டு பல தடவைகளில் கைதியாகிச் சிறைவாஸம் செய்ய நேரிட்டது.

1922-ம் வருஷம் மகாத்மாஜி கைதியானார். அப்பொழுது அவரைக் கோர்ட்டார் நியாயம் விசாரித்த கதை இந்திய சரித்திரத்திலே என்றைக்கும் ஞாபகமிருக்கும் ஸம்பவங்களில் ஒன்று. அவருக்கு ஆறு வருஷச் சிறைவாஸத் தண்டனை விதித்தார்கள். அப்பொழுது தேசத்தைத் தலைமை வகித்து நடத்த ஒருவரும் இல்லை. அந்த நேரத்தில், கஸ்தூரிபா காந்தி தமது நாயகருடைய ஸ்தானத்திலே இருந்து, பின் வரும் உள்ளக் கொதிப்பான செய்தியை அறிக்கையிட்டார்:—

"என் தேசத்து அன்புள்ள ஸ்திரீ புருஷர்களே!

"என் அன்புமிக்க நாயகருக்கு ஆறு வருஷச் சிறைவாஸம் விதித்திருக்கிறார்கள் நமது சர்க்கார். இவ்வளவு அபாரமான தண்டனையைக் கேட்டதும் நான் மனக் கலக்கம் அடையவில்லை என்று சொல்லமுடியாது. இந்தத் தண்டனை முழுவதையும் அவர் அனுபவித்து முடிப்பதற்குள்ளேயே நாம் எல்லோரும் ஒருமனப்பட்டு முயன்று தண்டனையைக் குறைத்து, அவரைச் சிறையிலிருந்து விடுதலை செய்வது நம்மாலே முடியாத காரியம்

அன்று என்று உணர்கிறேன். அதனாலே ஆறுதல் அடைகிறேன்.

"இந்தியர் தேசம் உறங்கிக் கிடக்காமல் விழித்தெழுந்து, காங்கிரஸ் குறித்திருக்கும் திட்டங்களை நிறைவேற்ற முழுமனதோடு உடன்பட்டு நிற்பார்களானால், நாம் அவரை மட்டுமல்ல, சென்ற 18 மாதங்களாக எந்த மூன்று விஷயங்களுக்காகப் போராடித் துன்பப்பட முற்பட்டு வந்தோமோ, அந்த மூன்று விஷயங்களிலும் சித்தி பெறலாம்.

"ஆகையால் இதற்கெல்லாம் பரிகாரம் நம்மிடத்திலே தான் இருக்கிறது. இந்தப் போராட்டத்திலே தோல்வி பெற்றால், அந்தக் குற்றம் நம்மையே சாரும். ஆகையால், எனக்கு அனுதாபம் காட்டவும், என் நாயகரிடத்திலே மதிப்புடையவர்களாக இருக்கவும், காங்கிரஸ் குறித்திருக்கும் கட்டுப்பாடான திட்டங்களிலே முழுக்கவனத்தையும் செலுத்தி இந்தப் போராட்டத்தை வெற்றிபெற முடிக்கவும் ஸகல ஸ்திரீ புருஷர்களையும் வேண்டிக் கொள்கிறேன்.

"என் நாதர் குறித்திருக்கும் நிகழ்ச்சித் திட்டத்திலே உள்ள பல விஷயங்களில், சர்க்காவையும் கதராடையையுந்தான் அவர் திரும்பத் திரும்ப வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். இவ்விரு விஷயங்களிலேயும் நாம் வெற்றி அடைந்தால், இந்திய ஜனங்கள் சம்பந்தப்பட்ட மட்டிலே ஏற்பட்டிருக்கும் செல்வநிலை ஸம்பந்தமான பிரச்சனைகளுக்கு முடிவான விடுதலை கிடைப்பதோடு, நாம் அடைந்திருக்கும் தேசிய அடிமைத் தனத்திலிருந்தும் விடுதலை அடையமுடியும். அப்படியானால், காந்திஜியின் உறுதியான திட்டங்கள் விஷயமாக இன்று இந்தியா அளிக்க வேண்டிய விடைகள் இவைகளே:

(1) எல்லாஸ்திரீ புருஷர்களும் அன்னிய நாட்டு வஸ்திரங்களைப் பஹிஷ்காரம் பண்ணிக் கதர் கட்டத் தொடங்குவதோடு, மற்றவர்களையும் இப்படியே செய்யத் தூண்டவேண்டும்.

(2) எல்லாப் பெண்களும் நாள்தோறும் சர்க்காவிலே நூல் நூற்பதை மதாசார விரதமாகக் கைக்கொள்வதோடு, மற்றவர்களையும் அப்படியே செய்யத் தூண்டவேண்டும்.

(3) வர்த்தகர்கள் எல்லோரும் அன்னிய நாட்டுத் துணிகளை விற்பனை செய்வதை அடியோடு நிறுத்திவிடவேண்டும்."

இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகக் காந்திஜி உண்ணாவிரதம் இருந்தபோது கஸ்தூரிபாவின் சிந்தனை.

மகாத்மா காந்தி இந்து முஸ்லிம் ஐக்கியத்திற்காக வெகு வாஞ்சையோடு முழுக்கவனத்தையும் செலுத்தி உழைக்கத் தொடங்கியபோது, 1924-ம் வருஷத்திலே டில்லிமா நகரத்தில் 21 நாள் உண்ணாவிரதம் இருந்தார். அந்த நாட்களிலே அன்னை கஸ்தூரிபா எல்லாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, சொல்லமுடியாத மனவேதனையோடு, தமது கணவருக்குத் தொண்டாற்றி வந்த வரலாறு கல் நெஞ்சையும் கரைப்பது. யமன் வாயில் அகப்பட்ட தன் கணவனை மீட்டுவந்த ஸாவித்திரி ஞாபகந்தான் வருகிறது. அன்னை கஸ்தூரிபா தம் இடையறாத பிரார்த்தனைகளினால், தம் நாயகரை அந்த நாட்களிலே யமன் வாயிலிருந்து காப்பாற்றி மீட்டுக்கொண்டு வந்த சரித்திரத்தைக் கேட்கும்போது. நமது அன்னை மகா தியாகியாக மரணம் அடையும் முன்னே தமது நாயகரை யமன் வாயிலிருந்து மீட்டுக்கொண்டு வர இப்படிப்பட்ட அநேக பரிக்ஷைகளுக்கு ஆளாகவேண்டியிருந்தது.

1932-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ம் தேதி, கிரிமினல் திருத்தச் சட்டப்படி ஆறுவாரம் சிறைவாஸம் செய்ய நேர்ந்தது. அந்தச் சிறைவாஸத்தை முடித்து வெளியேறினதும், பார்டோலி மாஜிஸ்டிரேட் இவரைத் திரும்பவும் ஆறுமாதச் சிறையிருப்பிற்கு அனுப்பிவைத்தார். இந்த

விதமாகத் தேசத்திலே எப்பொழுதெல்லாம் தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டுப் போராட்டம் ஏற்பட்டதோ அப்பொழுதெல்லாம் அன்னை சிறைவாஸத்தைக் கோரினர்.

ஸேவாக்ராமம் குடியேறியது

மகாத்மா காந்தி 1933-ல் ஸாபர்மதி ஸத்தியாக்கிரஹ ஆச்ரமத்தைக் கலைத்துவிடநேர்ந்தது. ஆகையால், திரும்பவும், வர்தாவுக்குப் பக்கத்திலே ஸேவாக்கிராமத்திலே ஆச்ரமம் திறந்து அதிலே குடியேறினர். அன்னை கஸ்தூரிபா முன்பு, ஸாபர்மதி ஆச்ரமத் தொண்டர்களைப் பராமரிப்பதிலே எவ்வளவு உத்ஸாகம் கொண்டிருந்தாரோ அதேவிதமாக இந்த ஸேவாக்ராம வாஸிகளை ஆதரிப்பதிலும் ஊக்கம் கொண்டார். அன்னை கஸ்தூரிபாவின் ஆச்ரம ஜீவியத்தைப் பற்றி ஸ்ரீமதி ஈலா ஸேன் பின்வருமாறு எழுதுகிறார்:—

"அன்னையைப் பற்றிக் கேள்விப்படுவது ரொம்பக் கொஞ்சந்தான்: அவரைப்பற்றி எழுதியிருப்பதும் அதைவிட ரொம்பக் கொஞ்சந்தான். என்றாலும் ஸேவாக்கிராம ஜீவிய ஓட்டமெல்லாம் அன்னையைச் சூழ்ந்திருப்பது. அவருடைய தியாக மணமே வீசுகிறது அந்த ஆச்ரமமெங்கும். அவருடைய பொறுமையும் பிறருடைய தேவைகளை அறியும் திறமையுமே அந்த ஆச்ரம வாழ்க்கையை ஆளுகின்றன. இந்தியர் தேசம் மதித்துப் போற்றுகிற குண பூஷணங்களுக்கெல்லாம் பாதுகாப்பிடமான அன்னை மிகப் பெரியவர். அவர் இந்த நாட்டுக்கு அளித்த விலைமதிக்கமுடியாத பரிசு அவருடைய கணவர். மகாத்மாவிடமிருந்து நமக்குக் கிடைத்த ஸகல நலங்களுக்கும் மௌனப் பங்காளி அன்னை கஸ்தூரிபா."

கர்னல் விடல்ஹொர்ட் 'காந்தியும் இந்தியப் பிரச்னைகளும்' என்ற நூலில் எழுதியிருப்பது:

"தூய வெள்ளை ஆடை அணிந்தவராக ஆச்ரம வாஸிகளுக்கும் அங்கே வருபவர்களுக்கும் தேவை அறிந்து

கொடுக்கும் முதல் தாமான இல்லத் தலைவி இந்த மாதரசி. எல்லாரையும் கவரக்கூடியவர். நாம் இந்தியாவிலே இருக்கும்போது, இந்த அம்மையாரைத் தரிசிப்பதைத் தவிர நம்முடைய சிரத்தையைக் கவரக்கூடினதும் ஒப் பற்றதுமான வேறொரு காட்சியை நாம் ஒருபோதும் பார்க்கவே முடியாது."

ராஜ்கோட் இயக்கத்தில் சிறைப்பட்டது

1939-ம் வருஷம் அன்னையின் தேகஸ்திதி ரொம்ப மோசமாக இருந்த போதிலும், அந்த வருஷத்திலே ராஜ்கோட் இயக்கத்தில் இறங்கிவிட்டார். அந்த ஸம ஸ்தான அதிகாரிகள் அவரையும் அவரோடு வேறு சிலரையும் விசாரணையில்லாமலே சிறையில் அடைத்து விட்டார்கள். அன்னையாரின் இந்தத் துரிதமான செய் கையைப் பற்றி மகாத்மா காந்தி 'ஹரிஜன்' என்னும் பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:

"ராஜ்கோட் போராட்டத்தில் என் மனைவியும் கலந்து கொண்ட விஷயமாக நான் எதுவும் சொல்ல உத்தேசித் திருக்கவில்லை. இந்த விஷயத்திலே அவள் தலையிட்டுக் கொண்டதைப்பற்றிச் சிலர் சொல்ல நேர்ந்த கொடூரமான அபிப்பிராயங்களை நான் பார்க்க நேர்ந்ததினாலே, நான் அது விஷயமாக என் கருத்தை வெளியிடவேண்டுமென்ற தூண்டுதல் உண்டாகிறது. சட்ட மறுப்பு இயக்க ஸம் பந்தமாக ஏற்படும் கஷ்டங்களைத் தாங்க முடியாதபடி அவளுக்கு வயதாகிவிட்டது. என் மனைவிக்கு எழுதப் படிக்கத் தெரியாது. என்றாலும், அவளுக்குத் தன் இஷ்டப்படி எதையும் செய்ய உரிமை உண்டு. இப்படி நான் சொல்வது என் மனைவியின் செய்கையைக் குறை கூறினவர்களுக்கு விநோதமாகத் தோன்றலாம். அவள், ஆப்பிரிக்காவிலானாலும் சரி, இந்தியாவிலானாலும் சரி, எங்கேயும் தன் உள்ளத் தூண்டுதலின்படியே எந்தப் போராட்டத்திலும் இறங்கியிருக்கிறாள். அந்தப்படியே இப்போதும் செய்திருக்கிறாள். அவள் மணிபேனைக் கைது செய்ததாகக் கேள்விப் பட்டபோது, அதைச் சகிக்க

மாட்டாமல் நானும் போகிறேன் என்று என்னிடம் சொன்னாள். 'உன் உடம்பு ரொம்ப ரொம்பப் பலவீனமாக இருக்கிறதே' என்றேன். அதற்குக் கொஞ்சம் முந்தித் தான் அவள் டில்லி நகரிலே ஸ்நான அறையில் பிரக்ஞை தப்பி விழுந்தாள். அந்த நேரத்திலே தேவதாஸ் கலவரமடையாமல் அவளுக்குச் செய்ய வேண்டிய வைகளைச் செய்யாதிருந்தால், இறந்தே போயிருப்பாள். நான் தடை சொல்வதையும் பாராட்டாமல், புறப்பட்டாள். இது விஷயமாக நான் ஸர்தாரிடம் யோசனை கேட்டேன். அவரும் அதற்குச் சம்மதிக்கவில்லை.

"ஆனாலும் கடைசியாக அவரும் மனங்கசிந்து விட்டார். ரெஸிடெண்டின் போதனையைக் கேட்டுக்கொண்டு டாகுர் ஸாஹெப் என்னிடத்திலே செய்திருந்த ஒப்பந்தங்களை மீறினதைப்பற்றி எனக்கு ஏற்பட்ட துக்கம் எவ்வளவு என்று ஸர்தாருக்கு நன்றாகத் தெரியும்......கஸ்தூரிபா ராஜ்கோட்டுப் பெண். அந்த ஊராருக்காகப் போராடுவது தனக்குரிய அழைப்பென்று அவள் நினைக்கிறாள். அந்த ஸமஸ்தானத்திலுள்ள ஸ்திரீ புருஷர்களின் சுதந்திரத்திற்காக ராஜ்கோட்டைச் சார்ந்த மற்றப் பெண்கள் எல்லோரும் துன்பப்படும்போது, அவள் சும்மா இருக்க முடியவில்லை.........ராஜ்கோட் போராட்டத்தின் வெற்றி, சுதந்திரப் போரிலே ஒரு படி முன்னேறியதாக இருக்கும். இந்தப் போராட்டத்திலே 'இப்ப'வோ பின்னேயோ எப்பவோ வெற்றி கட்டாயம் உண்டு. அப்படி ஜயம் கிடைக்கும்போது, அந்த ஜயத்திற்குக் கஸ்தூரிபாவும் தன் பங்கைச் செலுத்தியதாக நினைக்க நேரிடும். ஸத்யாக்ரஹப் போரிலே வயது முதிர்ந்தவர்களும் பலவீனமாக இருப்பவர்களும் பங்கு பெறலாம். அவர்களுக்குத் திட நெஞ்சந்தான் இருக்கவேண்டும்."

காந்திஜியின் உண்ணாவிரதம்

மகாத்மா காந்தி ராஜ்கோட்டில் சாகுந்தனையும் உண்ணாவிரதம் என்று ஸங்கல்பம் பண்ணிக்கொண்டபோது, கஸ்தூரிபா சிறைச்சாலையிலே இருந்தார். இந்தச் செய்தி

யைச் சிறைச்சாலையில் அவரிடம் சொன்னபோது அவர் ஆறாத் துயரம் அடைந்து, தமது நாயகர் தம்மைக் கேளாமல் உண்ணாவிரதம் அநுஷ்டிக்கத் தொடங்கின தற்காக அவரை வினயமாகக் கடிந்துகொண்டு, ஒரு கடிதம் எழுதினார். இந்தக் கடிதத்திற்கு மகாத்மா பின் வரும் பதில் எழுதினார் :—

"நீ விணாகக் கவலைப்படுகிறாய். கடவுள், தம்முடைய சித்தப்படி செய்ய எனக்கு ஒரு தருணம் கொடுத்த தற்காக நீ ஸந்தோஷப்பட வேண்டும். அப்படி உண்ணா விரதம் இருக்க நேரிடும் என்று எனக்கே முன்னதாகத் தெரியாமல் இருந்தபோது, நான் உன்னையாவது மற்றவர்களையாவது எப்படி யோசனை கேட்கமுடியும்? கடவுள் உண்ணாவிரதம் தொடங்கச் சமிக்ஞை செய்தார். அவருக்கு உடனே கீழ்ப்படியாமல் நான் வேறென்ன செய்ய முடியும்? என்றைக்காவது வருவது வந்தே தீரும். அப்படி அதிகாரமாக அவர் அழைக்கிற அழைப்பு வரும்போது, நான் போகமாட்டேன் என்று பின் தங்க முடியுமா? அல்லது உன்னையாவது மற்றவர்களையாவது யோசனை கேட்க முடியுமா?"

உண்ணாவிரத நாட்களிலே தம்மோடு இருந்து தமக்கு உதவி செய்வதற்காகத் தாம் ராஜ்கோட் அதிகாரி களிடம் அன்னையை விடுதலை செய்யச் சிபார்சு செய்ய வேண்டுமா என்று அறிந்து வர மகாத்மா சிலரை இவரிடம் அனுப்பினபோது, இவர் சொல்லி அனுப்பின பதில் மிகவும் கவனிக்கத் தகுந்தது "இல்லை. ஒரு போதும் வேண்டாம். அவரைப்பற்றித் தினந்தோறும் எனக்குச் செய்தி கிடைக்கும்படி ஏற்பாடு செய்தால் போதும். இதற்கு முந்தி அவர் கொண்ட உண்ணா விரதங்களிலிருந்து காப்பாற்றின கடவுள் இந்தத் தட வையும் அவரைக் காப்பாற்றுவார். என்றாலும் ஒருவர் அடிக்கடி அபாயகரமான நிலையிலே சிக்கிக்கொள்ள லாகாது." இந்தச் செய்தியை மகாத்மாவிடம் தெரிவித்த போது, அவர் சொன்னதாவது: "ஆமாம்; அப்படியும் நடக்கலாம். ஆத்மிக உத்தேசத்தோடு மேற்கொள்ளுகிற

உண்ணாவிரதத்தின் பலாபலத்தை நிதானிப்பது அதன் முடிவன்று. பகவானுடைய சித்தத்திற்குப் பரிபூரண மாகவும் மறுவார்த்தை சொல்லாமலும் ஸந்தோஷமாக ஒப்புக் கொடுப்பதைக் கொண்டே அதை நிதானிக்க வேண்டும். அப்படி ஒப்படைப்பதே உண்ணாவிரதத்தை மேற்கொள்வதில் க்ரியாம்சமாக இருக்கிறது. மகோன்னதமான கடமையைச் செய்வதிலே மரணம் ஸம்பவித்தாலும் ஸந்தோஷமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.''

மகாத்மா காந்தி இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்த ஒரு மணி நேரத்திற்கெல்லாம் ஸமஸ்தான அதிகாரிகள் கஸ்தூரிபாவையும் அவரோடு சிறைப்பட்டவர்களையும் விடுதலை செய்தார்கள்.

6. தாயின் கடிதங்கள்

அன்னை கஸ்தூரிபாவின் வாழ்க்கையிலே அவருடைய உள்ளத்தை ஆறாத் துயரத்திற்குக் கடலில் ஆழ்கச் செய்த விஷயம் பேத புத்தியும், தப்பு ஒழுக்கமும் உடைய மகன் ஹீராலாலைப் பற்றியதேயாகும். ஹீராலால் காந்தி மகம்மதிய மதத்தைத் தழுவியபோது அன்னை கஸ்தூரிபாவின் உள்ளம் எப்படித் துடித்தது என்பதை அவர் எழுதிய கடிதமே வெளியிடுகிறது.

என் அன்புள்ள மகன் ஹீராலாலுக்கு,

சென்னை நகரத்திலே நடுராத்திரியிலே ஒரு தெருவில் வெட்ட வெளியிடத்திலே குடிவெறியினால் பல தப்பான காரியங்களைச் செய்ததற்காகப் போலிஸார் உன்னைக் கையும் மெய்யுமாகப் பிடித்துப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போனார்கள் என்றும், மறுநாள் உன்னை ஒரு பெஞ்சு மாஜிஸ்டிரேட் குற்றம் விசாரித்து உனக்கு ஒரு ரூபாய் அபராதம் போட்டார் என்றும் கேள்விப் பட்டேன். அவ்வளவு லேசான தண்டனை கொடுத்து உன்னை விட்டு விட்டார்களே. உன் விஷயத்திலே மிகவும் பக்ஷபாதமாகத்தான் இருந்தார்கள் என்று சொல்லுவேன்.

உன தகப்பனாருடைய பெருமையை மதித்துத்தான் அந்த மாஜிஸ்திரேட் உன்னை அவ்வளவு லேசான தண்டனை கொடுத்து விட்டிருக்க வேண்டும். நான் இந்தச் செய்தியைக் கேட்டதிலிருந்து மனவேதனைப் படுகிறேன். அந்த இரவிலே நீ தன்னந்தனிமையாக இருந்தாயோ, அல்லது உன் நண்பர்களிலே சிலர் உன்னோடு இருந்தார்களோ என்ற விஷயம் எனக்குத் தெரியவில்லை. எப்படி இருந்தால் என்ன? நீ ரொம்பத் தவறான காரியந்தான் செய்திருக்கிறாய்!

உன்னிடத்திலே என்ன சொல்லுவதென்று எனக்குத் தெரியவில்லை. இத்தனை வருஷகாலமாகத் தன்னடக்க முள்ளவனாக இருக்க வேண்டுமென்று கண்ணும் கண்ணீருமாக நான் உன்னிடம் சொல்லி வந்திருக்கிறேன். ஆனால் நீயோ வரவரச் சீர்கேடான நிலைமைக்கே இறங்கிச் சென்றாய். இப்பொழுது என்னை உயிரோடிருக்க முடியாதபடி செய்து விடுகிறாய். உன் பெற்றோர்களுக்கு அவர்களுடைய அந்திய காலத்திலே எவ்வளவு கிலேசம் அளிக்கிறாய் என்பதை நீயே சிந்தித்துப் பார்.

உன்னுடைய காலாடித்தனமான வாழ்க்கையிலே ஸமீபத்தில் நீ பெருமை தங்கிய உன் தகப்பனாரைக் குற்றம் குறை கூறிப் பரிகாஸம் பண்ணிக் கொண்டு திரிகிறாய் என்று கேள்விப்பட்டேன். விவேகமுள்ள உனக்குச் சற்றுமே பொருந்தாதது இந்தச் செய்கை. நீ உன் தந்தையைப் பற்றி அவதூறாகப் பேசுகிறதினாலே, நீ உன்னையே அவமானப் படுத்திக் கொள்ளுகிறாய் என்பதைக் கொஞ்சமேனும் உணராதிருக்கிறாயே. அவருக்கோ உன் விஷயமாக அன்பைத் தவிர வேறொன்றுமே இல்லை. ஒழுக்கத் தூய்மைக்கு அவர் வைத்திருக்கிற அளவு கடந்த மதிப்பு எப்படிப் பட்டதென்று உனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் நீயோ அவருடைய புத்தி போதனைகளையெல்லாம் அசட்டை பண்ணி விட்டாய். அப்படி இருந்தும், அவர் உன்னைத் தம்மோடு வைத்துக் கொண்டு உனக்கு அன்ன வஸ்திரம் அளித்து நோயுற்ற காலத்திலே உனக்கு சிச்ருஷைகளும் செய்தாரே.

அவருக்கு இந்த உலகத்திலே எத்தனையோ பொறுப்புக்கள்! அவர் இதுகட்டும் உனக்குச் செய்ததற்கு அதிகமாக ஒன்றும் செய்ய இயலாது. அவர் தமது விதியை நினைத்துத்தான் நொந்து கொள்ள முடியும். கடவுள் அவருக்கு மகத்தான ஆத்ம சக்தியை அளித்திருக்கிறார். அவர் இந்த உலகத்திலே நிறைவேற்ற வந்திருக்கும் கடமைகளையெல்லாம் செய்து முடிக்கக் கடவுள்தான் அவருக்கு நீண்ட ஆயுளும் சரீர பலனும் அளிக்க வேண்டும். ஆனால் நானோ அபலை. நீ பண்ணுகிற அட்டூழியங்களையெல்லாம் என்னாலே தாங்க முடியவில்லை.

உன் கெட்ட நடத்தையைப் பற்றி அநேகர் நாள்தோறும் தகப்பனாருக்குக் கடிதம் எழுதுகிறார்கள். உன்னாலே ஏற்படும் சகல அவமானத்தையும் அவர் சகிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆனால் என்னைத் தான் புகலிடமில்லாமல் பண்ணி விட்டாய். நான் நண்பர்கள் மத்தியிலேயும் அறிமுகமில்லாதவர்கள் மத்தியிலேயும் தலையெடுத்து நடக்க முடியாதபடி செய்து விட்டாய், உன் வெட்கக்கேடான செய்கைகளினாலே. உன் தகப்பனார் உன்னை எப்போதும் மன்னிப்பார்; ஆனால் கடவுள் உன்னை ஒருபோதும் மன்னிக்கமாட்டார்.

சென்னையிலே ஒரு பிரமுகர் வீட்டிலே நீ விருந்தாளியாக இருந்தாயாம். அங்கே தப்பான காரியங்கள் செய்த பிறகு, ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் அவருடைய வீட்டை விட்டு வெளியேறி விட்டாயாம். உன்னுடைய செய்கை அவரைத் திக்குமுக்காடப் பண்ணியிருக்கு மென்றே நினைக்கிறேன்.

நாள்தோறும் தூங்கி எழுந்ததும் தினசரிப் பத்திரிகைகளிலே உன்னைப்பற்றி இன்னும் என்ன என்ன புதிய வெட்கக்கேடான காரியங்களை வெளியிடுவார்களோ என்ற கவலையினால் என் நெஞ்சு திக் திக் என்கிறது. சில வேளைகளிலே நீ எங்கே இருக்கிறாய், எங்கே தூங்குகிறாய், என்ன சாப்பிடுகிறாய் என்றெல்லாம் நினைக்கிறேன். ஒருவேளை,

விலக்கப்பட்ட ஆகாரங்களையும் சாப்பிடத் தொடங்கியிருக்கலாம். இப்படிப்பட்ட எண்ணங்களினாலே இரவெல்லாம் தூக்கமில்லாமல் தவிக்கிறேன். உன்னை நேரிலே சந்தித்துப் பேசவேண்டுமென்று நினைக்கிறேன். ஆனால் உன்னை எங்கே பார்க்கமுடியும் என்றுதான் தெரியவில்லை. நீ என் மூத்த பிள்ளை. உனக்கு 50 வயது ஆகிவிட்டது. உன்னை நேரிலே பார்க்க வந்தால் என்னை அவமரியாதையாக நடத்தி அனுப்பி விடுவாயோ என்று பயமும் ஏற்படுகிறது.

உன்னுடைய முன்னோர்களின் மதத்தை விட்டுப் போனதின் காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. அது உன் விஷயம். ஆனால் நிரபராதிகளான பாமர ஜனங்களை வஞ்சித்து உன்னைப் பின் பற்றச் சொல்லித் திரிகிறாய் என்று கேள்விப்படுகிறேன். உனக்கு லபித்திருக்கும் அளவை நீ ஏன் உணருகிறதில்லை? உனக்கு மதத்தைப் பற்றி என்ன தெரியும்? உனக்கு ஏற்பட்டிருக்கும் மன நிலைமையிலே மற்றவர்களைப்பற்றி நீ என்ன நியாயம் தீர்க்க முடியும்? உன்னுடைய தகப்பனாருடைய மகிமைகளுக்காகச் சிலர் உன்னை நம்பி மோசம் போகலாம். மதத்தைப்பற்றிப் பேச உனக்கு யோக்கியதையே இல்லை. நீ இப்படியே பண்ணிக்கொண்டிருந்தால் வெகு சீக்கிரம் யாவரும் அருவருத்துப் புறக்கணித்துத் தள்ளிவிடும் நிலைமைக்கு வந்துவிடுவாய். கொஞ்சம் நின்று யோசித்துப்பார். உன் தப்பறையான வழிகளை விட்டு மனதைத் திருப்பு. உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நீ மதம் மாறினது எனக்குக் கொஞ்சமேனும் இஷ்டமில்லை. ஆனால் 'நல்வழிப்படுகிறதற்காகவே மதமாற்றினேன்' என்று நீ விளம்பரம் செய்தபோது மதமாறுதல் கூட நல்லதுதான் என்று உள்ளுக்குள்ளே சந்தோஷப்பட்டேன். இனிமேல் நீ நல்லொழுக்கமாக ஜீவியம் செய்வாய் என்று நம்பியிருந்தேன். ஆனால், அந்த நம்பிக்கையும் தவிடு பொடியாகும்படி செய்து விட்டாய்.

உன்னுடைய நடத்தையினுலே உன் பிள்ளை எவ்வளவு துக்கப்படுகிருன் என்று உனக்குத் தெரியுமா? உன்னுடைய நடத்தையினுலே ஏற்படுகிற துக்கச் சுமையை உன்னுடைய பெண்களும், உன் மருமகனும் ரொம்பக் கஷ்டத்தோடு சகித்து வருகிருர்கள்.

...."

இந்தக் கடிதத்திற்கு வியாக்கியானம் தேவையில்லை. ஹரிலால் காந்தியின் ஒழுக்கக்கேடான வாழ்க்கை அன்னை கஸ்தூரிபாவுக்கு அந்திய காலத்திலே ஏற்பட்ட சுகவீனத்திற்கும் ஒரு காரணமாக இருக்கலாம். அன்னை கஸ்தூரிபா ஹரிலாலுடைய மகம்மதிய நண்பர்களுக்குப் பத்திரிகைகள் வாயிலாகப் பின்வரும் கடிதத்தை வெளியிட்டார்:—

"என் மகனுடைய சமீப காலத்து முயற்சிகளுக்கு மிகவும் துணைபுரிந்தவர்களுக்குத்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். உங்களுடைய செய்கையின் மனப்போக்கும் எனக்கு விளங்கவில்லை. ஆழ்ந்து சிந்திக்கவல்ல மகம்மதியப் பெரியோர்களும், எங்கள் வாழ் நாளெல்லாம் எங்களுக்கு நண்பர்களாக இருந்தவர்களும், என்னுடைய மகனின் ஜீவிய சரித்திரத்திலே இந்தப் பகுதியைமட்டும் கொஞ்சங்கூட ஒப்புக் கொள்ளவில்லை என்று எனக்கு நன்ருய்த் தெரியும். அதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

மதமாறுதல் என் மகனைச் சீர் கேடான ஒழுக்கத்திலிருந்து மீட்காமல் இன்னும் அதிக மோசடியான வாழ்க்கைக்கே தாழ்த்தி விட்டது. அதோடு நின்றுவிடவில்லை. உங்கள் மதத்தைச் சார்ந்த சிலர் அவனுக்கு 'மௌல்வி' என்ற பட்டமும் சூட்டத் துணிந்துவிட்டார்கள். இது உங்களுக்கு அடுக்குமா என்று கேட்கிறேன். என் மகனைப்போன்ற சீர்கேடான நிலைமையிலிருப்பவர்களுக்கு 'மௌல்வி' என்ற பட்டம் கொடுக்க உங்கள் மதம் சம்மதிக்கிறதா?

சிங்கக்குட்டி என்று அவன் முதுகைத் தட்டிக் கொடுப்பதிலே நீங்கள் என்ன சந்தோஷத்தைக் கண்டீர்களோ எனக்குத் தெரியவில்லை. இதெல்லாம் அவன் நன்மைக்காகச் செய்வதாகவும் எனக்குப் புலப்படவில்லை. என்னைப் பரிகாசம் பண்ண வேண்டுமென்பதற்காக இப்படியெல்லாம் செய்கிறதாக இருந்தால் மேல்கொண்டு நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. நீங்கள் உங்களுக்கு இஷ்டமானபடி யெல்லாம் கேடுகெட்ட காரியங்கள் செய்யலாம்.

என்றாலும், உங்களிலே சிலருக்காவது மனச்சாட்சி இராதா? துக்கத்தினாலே நொந்து வாடுகிற ஒரு தாயின் துயரக்குரல் அப்படிப்பட்டவர்களுடைய உள்ளத்திலே படாதா? அப்படிப் படும்போது அவர்களாவது என் மகனைத் தப்பான வழிகளிலே நடத்துவதை விட்டு விலக மாட்டார்களா? கடவுளுடைய பார்வையிலே நீதியான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று என் மகனிடம் சொன்னது போலவே உங்களிடத்திலேயும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொள்ளுகிறேன்."

7. கடைசிச் சிறைவாசம்

1942-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 9-ந் தேதி மாலையில் பம்பாய் நகரத்திலே கஸ்தூரிபாவை அரசாங்க அதிகாரிகள் கைது செய்தார்கள். இந்தியாவின் சுதந்திரப் போர்ச் சரித்திரத்திலே அந்த நாள் ஒரு பொழுதும் மறக்க முடியாத சம்பவமாக எழுதப்படும். இந்தியாவின் தற்காப்புச் சட்டப்படி தேசமெங்குமுள்ள காங்கிரஸ் தலைவர்களை அந்த நாள் காலையில் கைது செய்ததோடு, காங்கிரஸ் காரிய நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களையும், மகாத்மா காந்தியையும் அதிகாலையிலே கைதிகளாகக் கொண்டு போய்விட்டார்கள். கஸ்தூரிபா மகாத்மா காந்தியோடு பிர்லா மாளிகையிலே தங்கி யிருந்தார். அன்று சாயங்காலம் சிவாஜி - தோட்டத்திலே மகாத்மா ஒரு பெரிய கூட்டத்திலே பேச ஏற்பாடு செய்

திருந்தது. தமது நாயகர் சிறைப்பட்டுப் போனதால் தாமே அந்தக் கூட்டத்தில் பேச வேண்டுமென்று நிர் மானித்து விட்டார் கஸ்தூரிபா. மர்லேயிலே இரண்டு அதிகாரிகள் பிர்லா மாளிகைக்கு வந்து கஸ்தூரிபா விடம் கூட்டத்திலே பேசத் நிர்மானித்திருப்பது உண்மைதானா என்று விசாரித்தார்கள். அப்படி இவர் நிர்மானித்திருந்தால் இவரைக் கைது செய்துகொண்டு போகத் தங்களுக்குச் சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாகவும் கூறினார்கள். கஸ்தூரிபா அழுத்தமாக 'ஆமாம்' என்றார். உடனே அவரை ஸ்ரீ பியாரிலாலோடும், டாக்டர் ஸுசீலா நாயரோடும் கைது செய்தார்கள்; ஏற்கனவே மகாத்மா காந்தியை அடைத்து வைத்திருந்த பூனாவிலுள்ள ஆகாக் கான் அரண்மனைக்குக் கொண்டு போனார்கள். அது முதல் அவர் கடைசி மூச்சொடுங்குமட்டும் கைதியாகவே இருந்தார்.

சிறைவாசம் இவருக்குப் புதியதன்று. இருப்புக் கிராதிகளுக்குள்ளே அடைபட்டுக் கிடக்கும் பயம் சற்றுமே இல்லாதவர். ஆனால், இந்த முறை இவருடைய சிறைச்சாலை உண்மையிலே ஒரு அரண்மனை. இந்தப் 'பொன் கூண்டி'லே அடைபட்டுக் கிடந்ததை அவரால் தாங்க முடியவில்லை. இந்தச் சிறைவாசத்தினால் இவருடைய மனமும் உடலும் நலியத் தொடங்கின என்றாலும், தமது நாயகருக்கருகாமையிலே சிறையிலும் இருக்கும் பாக்கியம் கிடைத்தது தான் பெரிய ஆறுதலாக இருந்தது அன்னை கஸ்தூரிபாவுக்கு. இந்தச் சிறைச்சாலையில் காந்தி தம்பதிகளுக்கு நேர்ந்த துக்ககரமான முதலாவது சம்பவம் மஹாதேவ தேஸாயியின் மரணந்தான். இவர்கள் இருவரும் மஹாதேவ தேஸாயியைத் தங்கள் சொந்தப் பிள்ளையாக நேசித்து வந்தார்கள். இந்தத் துயரம் ஆறுவதற்கு முன்னே மகாத்மா காந்தி உண்ணாவிரதம் அனுஷ்டிக்கத் தொடங்கிவிட்டார். அந்த 21 விரத நாட்களிலேயும் அன்னைக்கு ஏற்பட்ட கவலையையும், மனவேதனையையும் யாராலே சொல்லமுடியும்? தமது பர்த்தா என்றதனாலே அவர் அப்படித் துயரப்படவில்லை. தம்

முடைய தேசத்திலே கோடிக்கணக்கான ஜனங்கள் அன்பு பாராட்டும் அருமையான பொக்கிஷம் மகாத்மா காந்தி என்று நன்ருய் உணர்ந்திருந்தபடியால் அன்னை அப்படித் துக்கப்பட நேர்ந்தது. அப்பொழுது மகாத்மா காந்திக்கு வயது 74. அப்படிப்பட்ட வயதிலே எந்த மனிதனாலும் செய்யமுடியாத ஸாஹஸமான செய்கை அந்த உண்ணாவிரதம். ஆந்திரமாக எழுந்த ஒரு தெய்விக அழைப்பிற்கு இசைந்தவராக அந்த உண்ணாவிரதத்தை மகாத்மா மேற்கொண்டார் என்று அன்னை கஸ்தூரிபா நன்ருக உணர்ந்திருந்தார். ஆகையால் தேசத்திற்கும், உலக மக்களுக்கும் அவர் செலுத்தவேண்டிய கடமையைப் பூரணமாகச் செலுத்துமட்டும் தீர்க்காயுசை அருள வேண்டுமென்று கடவுளிடத்திலே பிரார்த்திப்பதைத் தவிரத் தம்மாலே வேருென்றும் செய்வதற்கில்லை யென்று நினைத்தார். அவர் நாள்தோறும் மகாத்மாவின் பக்கத்திலேயிருந்து தாய்போலச் சகல சிசுருஷைகளையும் மௌனமாகச் செய்து வந்தார். கருணைக் கடலான கடவுளும் கோடிக்கணக்கான மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி அந்த உண்ணாவிரதத்திலிருந்து காந்திஜியை மீட்டருளினர். உண்ணாவிரதத்தின் கடைசி நாளிலே முதல் முதலாகக் கிச்சிலிப்பழ ரஸம் கொடுக்கும் பாக்கியம் கஸ்தூரிபாவுக்குத்தான் கிடைத்தது. இதற்கு முந்தியும் மகாத்மா காந்தி உண்ணாவிரதம் அனுஷ்டித்த போதெல்லாம் முதல் தட்வை கிச்சிலிப் பழரஸம் கொடுக்கும் பாக்கியம் அன்னை கஸ்தூரிபாவுக்கே ஏற்பட்டிருந்தது.

சென்ற வருஷம் மகாத்மா காந்தி அனுஷ்டித்த உண்ணாவிரதம் சரீரப் பிரகாரமாகவும் மானஸிகப் பிரகாரமாகவும் அன்னைக்கு மிகுந்த சிரமமாகவே இருந்தது. பண்டித ஜவஹர்லால் நேருவின் கடைசித் தங்கை ஸ்ரீமதி கிருஷ்ணு ஹாத்தீ ஸிங் இதைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிருர் :—

“சரித்திர சம்பவமான உண்ணாவிரதத்தைப் பாப்பு ஆரம்பித்தபொழுது, இந்தச் சுத்திகரணச் சடங்கினுலே

என்ன விளையுமோ என்ற பயத்தோடும் மனச் சஞ்சலத்தோடும் பாப்புவின் படுக்கையைச் சுற்றிச் சுற்றி உலாவி வந்தார் அன்னை. அதற்குமுன் ஒரு பொழுதும் இவர் அவ்வளவு முதியவராகவும், சோர்வடைந்தவராகவும் காணப்பட்டதே யில்லை. அப்பொழுது அவருடைய முகத்திலே தோன்றிய நிராசையையும் மௌனமாகச் சகித்த மனோவியாகுலத்தையும் இதற்கு முன் எக்காலத்திலும் எவருமே பார்த்திருக்க மாட்டார்கள். இப்படியெல்லாம் இருந்தாலும் வெளிப்பார்வைக்குக் கலங்காதவர் போல அமைதியாகப் புன்னகை பூத்த முகத்தோடு தமக்குரிய காரியங்களைச் செய்து வந்தார். இவரை நன்றாய் அறிந்தவர்களுக்குத்தான் இவருக்குள்ளே இருந்த மனோ வேதனை மஹா பயங்கரமானது என்று தெரிந்திருந்தது. கவலைக்கிடமான அந்த வாரங்களிலே அன்னை கஸ்தூரிபா அவருடைய படுக்கையை விட்டகலாதிருந்தார். சளைக்காமல் அவருக்கு உபசரணைகள் செய்துவந்தார். பாப்புவும் பிழைத்தார். பாரத தேசத்துக்கும் மூச்சு வந்தது. என்றாலும் அந்த நாட்களில் ஏற்பட்ட கவலையும், மனக்கலக்கமும் அன்னையைத் தகர்த்து விட்டன. அதுமுதல் அன்னை அடிக்கடி நோய்க்காளாக நேர்ந்தது.'

மகாத்மா காந்தியின் உண்ணாவிரதத்திற்குப் பிறகு அன்னையைப் பற்றிய முதல் செய்தி 1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் 19-ம் தேதி - பம்பாய் அரசாங்க அறிக்கையொன்று, இவர் வியாதியாக இருப்பதாகத் தெரிவித்தது. ஒரு வாரத்திற்குள் இரண்டுமுறை இருதய நோய்க்கு இவர் ஆளானதாகவும் அந்த அறிக்கை வெளியிட்டது. முதிர்ந்த வயதிலே சிறைவாசத்தில் ஒருவர் எம்மட்டும் சௌக்யம் அடையலாமோ அம்மட்டும் சௌக்யம் அடைந்ததாகச் செய்தி வந்தது. அதோடு டாக்டர், கில்டரும், லெப்டினன்ட் கர்னல் பி. து. ஷாவும் இவருக்குச் சிகித்ஸை செய்து வருவதாகவும் அந்த அறிக்கையிலிருந்து தெரிய வந்தது.

இவருடைய சுகத்தைப் பற்றிய இரண்டாவது செய்தி டிஸம்பர் மாதம் 4-ந் தேதி கிடைத்தது. அந்த

அறிக்கையிலே இவருக்குத் திரும்பவும் இரண்டு முறை ஹிருதய நோய் கண்டதாகவும், அதிலிருந்து ஒருவாறு சுகமடைந்த போதிலும் மிகவும் பலவீனமாக இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தது. இவர் வேண்டிக் கொண்டதன் பேரில் இவருடைய பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் ஆகாகான் அரண்மனையில் இவரைப் 'பார்க்கலாம் என்று' இந்திய அரசாங்கத்தார் அனுமதி கொடுத்தார்கள்.

நாட்கள் செல்லச் செல்ல அன்னை கஸ்தூரிபாவின் தேகஸ்திதி கேவலமாகிக் கொண்டே வந்தது என்ற செய்தி சிறைச்சாலை மதில்களைக் கடந்து வெளியே பரவலாயிற்று. அப்பொழுது மஹாத்மாவின் பக்தர்கள் அன்னையைச் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யச் சர்க்காருக்கு மனு அனுப்பினார்கள்.

இந்த விஷயத்தைப் பற்றி பார்லிமெண்டிலே பிரபு ஸபையில் டிஸம்பர் மாதம் 15-ந் தேதி விவாதம் நடந்தது. ஸ்ரீமதி காந்தியை விடுதலை செய்வது இந்திய ஸர்க்காரின் எண்ணமாவென்று ஸ்ட்ராபோல்கி பிரபு கேள்வி கேட்டார். அதற்கு இந்தியாவின் உபகாரியதரிசியான மன்ஸ்டர் பிரபு, "தேகஸ்திதியை உத்தேசித்து ஸ்ரீமதி காந்தியை விடுதலை செய்யலாமா என்று இந்திய ஸர்க்கார் யோசித்ததுண்டு. ஆனால், இப்பொழுது இருக்கிற ஸ்ரீமதி இடத்திலேயே காந்தி இருப்பதுதான் நல்லது என்று இவருடைய நன்மையை உத்தேசித்தே இந்திய ஸர்க்கார் அபிப்பிராயப்படுகிறார்கள். அதே அபிப்பிராயந்தான் இன்று மட்டும் இருந்து வருகிறது. இவர் இருக்கிற இடத்திலேயே, இந்தியாவிலுள்ள மற்ற எந்த வைத்தியர்களையும் விட ஹிருதய நோயைக் குணப்படுத்தவல்ல கைதேர்ந்த வைத்தியர் இருக்கிறார். அவர் எந்த நேரத்திலேயும் ஸ்ரீமதி காந்திக்கு வைத்தியம் செய்ய முடியும் என்பதே இந்திய ஸர்க்காரின் அபிப்பிராயம்" என்று பதில் சொன்னார்.

மறுநாள் பொதுஜன ஸபையில் ஸ்ரீமதி காந்தியின் சுகவீனத்தைக் காரணமாகக் கொண்டு அவரை விடுதலை

செய்யப் போகிறார்களா என்று மிஸ்டர் ஸோரென்ஸன் கேட்டபொழுது, இந்தியக் காரியதரிசியான ஏமெரி பிரபு ஸபையில் மன்ஸ்டர் பிரபு சொன்ன அதே வார்த்தையைத் திரும்பப் படித்துப் பதிலளித்தார். அப்பொழுது மிஸ்டர் ஸோரென்ஸன் 'ஸ்ரீமதி காந்திக்கு இஷ்டமிருந்தால் இவர் சிறைச்சாலையை விட்டுப் போக உரிமையும், வசதியும் இருக்கின்றனவா என்று கேட்கிறேன்' என்றார்.

மிஸ்டர் ஏமெரி:—அவரை வெளியே விடுகிறதைப் பற்றி யோசித்தார்கள், அவருடைய உறவினர்கள் வந்து பார்க்க அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால், வைத்தியர்களுடைய ஆலோசனையின் பேரில் அவர் இப்பொழுது இருக்கும் இடமே மிகவும் க்ஷேமகரமானதென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

மிஸ்டர் ஸோரென்ஸென்:—ஸ்ரீமதி காந்திக்காக இதுமட்டும் செய்தவைகளையெல்லாம் மிகவும் மதித்துப் போற்றுகிறேன்; என்றாலும் வைத்தியர்களாவது அவராவது சிறைச்சாலையை விட்டுப் போகவேண்டுமென்று விரும்பினால் அப்படிச் செய்ய அவருக்கு அனுமதி கிடைக்கும் என்று நான் நம்பலாமா?

மிஸ்டர் ஏமெரி:—அந்த விஷயத்தைப் பற்றித் தீர்மானம் செய்ய இந்திய ஸர்க்காருக்கே விட்டுவிட வேண்டும். டிஸம்பர் மாதம் 20-ந் தேதி பம்பாய் அரசாங்க அறிக்கையொன்று வெளியாயிற்று. "திரும்பவும் ஹிருதய் நோய் கண்டது...அவருடைய முதிர்ந்த வயதினாலும் நொய்ய தேக இயல்பினாலும் கவலைக்கிடமாகவே இருந்து கொண்டிருக்கிறது" என்று கஸ்தூரிபாவின் தேகஸ்திதியைப் பற்றிக் குறிப்பிட்டது. 1943-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 24-ந் தேதி இந்திய ஸர்க்கார் பத்திரிகை மூலமாகத் தெரிவித்ததாவது:—ஸ்ரீமதி காந்தியின் தற்சமய தேக ஸ்திதியை உத்தேசித்து அவர்களை வெளியே விடாததைப் பற்றிப் பத்திரிகைள் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயங்களை அரசாங்கத்தார் கவனித்தார்கள்.

அவரை வெளியே விடுவதாயிருந்தால் வியாதியாய் இருக்கும் இந்நேரத்தில் நமது கணவரை விட்டுப் பிரிக்க இடமாகும்" என்று குறிப்பிட்டிருந்தது. இப்போது அவரிருக்குமிடத்திலேயே வைத்திய முறைப்படி நன்றாய்க் கவனிக்கப் படுவதோடு மேலும் வைத்திய சகாயம் அளிப்பதற்குச் சௌகரியமாக இருக்கிறது. அவருடைய உறவினர்களைப் பார்க்க எவ்விதத் தடையும் இல்லை. ஆகையால், அவரை ஆகாகான் அரண்மனையிலிருந்து வெளியேற்றுவது அவருக்காவது அவருடைய குடும்பத்தாருக்காவது தயவு புரிந்ததாக இராதென்று ஸர்க்கார் தீர்மானம் செய்ய நேர்ந்தது.

1944-ம் வருஷம் ஜனவரி மாதம் 4-ந் தேதி அன்னை கஸ்தூரிபாவின் மகனார் தேவதாஸ் காந்தி தமது தாயைப் பார்த்து வந்த பிறகு தென் அப்பிரிக்காவில் டர்பன் நகரிலிருந்த தமது சகோதரர் ஸ்ரீ மணிலாலுக்கு அடித்த தந்திச் செய்தி:—"ஸ்ரீமதி காந்தியின் தேக ஸ்திதி நிச்சயமற்றதாக இருக்கிறது. வைத்திய வசதிகளுக்கு அவ்வளவாக இடமில்லை."

1944-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 1-ந் தேதி பம்பாய் அரசாங்க அறிக்கை கஸ்தூரிபாவுக்குத் திரும்பவும் ஹிருதய நோய் கண்டதென்றும், அவருடைய நிலைமை மிகவும் பலவீனமாகவே இருக்கிறதென்றும் தெரிவித்தது.

அன்னை கஸ்தூரிபாவின் வியாதியைப் பற்றி அரசாங்க அதிகாரிகளின் மூலமாகக் கிடைத்த செய்திகளைச் சொன்னோம். இவ்விஷயமாக நமக்கு உண்மையான நிலைமையைப் பற்றிச் சரியான செய்தி தெரிவிக்கக் கூடியவரான ஸ்ரீ தேவதாஸ் காந்தி பிப்ரவரி மாதம் 28-ந் தேதி வெளியிட்ட அறிக்கையைப் பார்ப்போம்:—

"*1942*-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் டிடேன்ஷன் காம்பில் அந்த வியாதி ஆரம்பித்தது. ஹிருதயக் கோளாறுகளை முதல் முதலில் அப்பொழுதுதான்

கவனித்தார்கள். சென்ற நாலு, ஐந்து வருஷங்களாக அவருடைய தேக ஸ்திதி அவ்வளவு சரியாக இருக்க வில்லை. என்றாலும் இதற்கு முன் ஒருபொழுதும் ஹிருதய நோய் கண்டதில்லை. 1942-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்திலே முதல் தட்வை வியாதியான பிறகு அவருடைய தேக ஸ்திதி பழைய நிலைமை அடைய வில்லை.''

அவர் இதற்குமுன் பலமுறை சிறைவாசம் செய்திருக்கிறார். அவற்றுள் ராஜ்கோட்டு ஜில்லாவிலே ஒரு குக்கிராமத்தில் தன்னந்தனிமையாக அவரைச் சிறை வைத்தது விசேஷமாகக் குறிப்பிடத் தகுந்தது. அப்பொழுது அவர் வியாதியானர். அதிலிருந்து அவர் உயிர் தப்பினது ஆச்சரியமே. ஆனால், இந்தக் கடைசிச் சிறைவாசம் அவருக்குத் தாங்க முடியாத ஒரு பரிக்ஷையாகவே யிருந்தது. அதைத் தாங்க முடியாமல் அவருடைய மனமும் உடலும் ஏக காலத்தில் நலிந்து விட்டன. இதற்கு முன் அவருக்குப் பழக்கமாக இருந்த சூழ்நிலைகளுக்கு முற்றிலும் எதிரிடையாக இருந்தன ஆகாகான் மாளிகையும் அதன் தோற்றமும். இரும்பு முள்வேலியோடு, துப்பாக்கியும் கையுமாக நின்ற காவலாளிகள் அந்தப் பயங்கரக் காட்சியைப் பூர்த்தி செய்தன. ஸேவாக்ராமத்தில் தாழ்ந்த கூரையிட்ட குடிசைகள் என்று அவர் தாமே சென்ற வருஷம் வர்ணித்துக் காட்டின அந்த இடத்திற்குத் திரும்பிப் போய்விடவேண்டுமென்று அவர் ஏங்கித் தவித்தாரென்று தேசத்தாருக்கு நான் சொல்லுவதினாலே, என் அன்பார்ந்த அன்னையின் ஞாபகத்திற்குத் தீங்கொன்றும் செய்யவில்லை. காலவரையறையில்லாத சிறைவாசம் அவருக்குப் பெரிதும் மன வேதனையாக இருந்தது. இந்த உலகத்திலுள்ள வசதிகளெல்லாம் கிடைத்தாலும் அவருடைய மனத்திற்கும், ஆத்மாவுக்கும் சாந்தியளித்திருக்க முடியாது. ஆயிரக் கணக்கிலே பலர், விசேஷமாகத்தாம் நெருங்கிப் பழகிய பலர், தம்மைப்போலவே இப்படிப்பட்ட சிறைவாசத்திற்

காளாகி வருந்துவதை அவரால் சகிக்க முடியவில்லை. சென்ற ஒன்றரை வருஷமாக, அவருடைய மௌன ஜபத்திலே, மற்றவர்கள் விடுதலை அடைவதானல் தாமும் தமது பாப்புவும் கடைசிமட்டும் சிறையிலிருக்கத் தயாரா யிருப்பதாகப் பிரார்த்தனை நடந்து வந்தது.

"அவரைச் சிறையிலிருந்து வெளியே விட்டிருந்தால், அந்த விடுதலை கடைசியாக அவருக்கு நேரிட்ட வியாதி யிலே கடைசி விபத்திலிருந்து தப்ப ஒருவேளை உதவி செய்திருக்காதா? அவருக்கு இஷ்டமான போதெல் லாம் சிறைவாசத்திற்குத் திரும்பி வரலாம் என்ற சுதந் திரத்தோடு அவரை விடுதலை செய்திருந்தால் அது அவருக்குப் பெரிதும் உதவியாகவே யிருந்திருக்கும். அப்படிச் செய்வது, 'தயை புரிதல்' என்பதற்கே ஒரு புதிய அர்த்தம் கொடுப்பதாகத் தான் இருக்கும். கடைசி நேரத்தில் கடவுளின் இரக்கத்தினல் கிடைத்த விடுதலையைத் தவிர, சரீர சௌகரியமாக ஒரு விடுதலை பெற அவருக்கு வசதியில்லாமல் போய்விட்டது என்ற உண்மை என்றைக்கும் நிலைத்திருக்கும்."

கஸ்தூரிபாவை விடுதலை செய்ய ஸர்க்காரைத் தூண்டு வதற்காகத் திரும்பவும் பிப்ருவரி மாதம் 8-ம் தேதி ஒரு முயற்சி நடந்தது. மத்ய சட்ட ஸபையிலே ஸ்ரீ கோவிந்த் தேச முகர்ஜி இவ்விஷயமாக ஒரு கேள்வி கேட்ட தற்குப் பதிலாக ஹோம் மெம்பர் 1943-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 24-ந் தேதி ஸர்க்கார் வெளியிட்ட பிரசுர அறிக் கையை அப்பட்டமாகக் கூறி விட்டார். சிறையில் அடைபட்டவர்கள் மிகவும் வியாதியாயிருக்கும்போது கூட அவர்களை விடுதலை செய்யலாகாது என்பது ஸர்க் காரின் எண்ணமா வென்று ஹோம் மெம்பரைக் கேள்வி கேட்டார்கள். அதற்கு ஹோம் மெம்பர் தேகஸ்திதியை உத்தேசித்து விடுதலையடைந்த ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடுவைக் குறிப்பிட்டார்.

"பத்தொன்பது நாட்களுக்குப் பிறகு பிப்ரவரி மாதம் இருபதாம் தேதி பம்பாய் மாகாண அறிக்கை தெரிவித்ததாவது :—

ஸ்ரீமதி காந்தியின் தேகஸ்திதி சென்ற சில நாட்களாக க்ஷீண கதியை அடைந்து இப்போழுது மிகவும் கவலைக்கிடமாகி விட்டது.'' மறுநாள் அவருடைய தேகஸ்திதி அப்படியே யிருப்பதாகவும், இந்திய ஸர்க்கார் கல்கத்தாவிலிருந்து பூனுவுக்கு விமான மார்க்கமாக 'பெனிஸிலின்' என்னும் மருந்தை அனுப்ப ஏற்பாடு செய்திருப்பதாகவும், மாகாண - ஸர்க்கார் - அறிக்கை கூறியது.

8. கடைசி நேரங்கள்

கஸ்தூரிபாவின் கடைசி நேரங்களைப்பற்றி தேவதாஸ் காந்தி பிப்ரவரி மாதம் இருபத்தெட்டாம் தேதி வெளியிட்ட அறிக்கையிலே வெகு விளக்கமாக விவரித்திருக்கிறார் :—

“கடைசி நேரமட்டும் என் தாயாருக்கு ஒருமுறையாவது பிரக்ஞை திரும்பவில்லை. பிப்ரவரி மாதம் 20-ந் தேதி அவருடைய தேக நிலைமை மிகவும் மோசமாய் இருப்பதாக ஸர்க்கார் அறிக்கை செய்தபோதுகூட எப்படியாவது தமது வியாதியின் கடைசி நிலைமையிலிருந்து நீங்கி உயிர் தப்பிவிடாலாம் என்ற நம்பிக்கைதான் அவருக்கிருந்தது. ஹிருதயத்தின் பலக்குறைவான இயக்கத்தினலே சிறுநீர்ப் பைகள் வேலை செய்யத் தவறிவிட்டன. அனலில்லாத ந்யுமோனியா ஜுரமும் கண்டுவிட்டது. ரத்த வேகமும் 75/62-க்கு இறங்கி விட்டது. வைத்தியர்களும் கையை விரித்துவிட்டார்கள். நான் திங்கட் கிழமை ஸாயங்காலம் போய்ச் சேர்ந்தேன். அப்பொழுது அவர் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். நண்பர்களும் உறவினர்களும் செய்த பணிவிடைகளினலே ஓரளவு குணமடைந்தவர் போல காணப்பட்டார். அன்றிரவு டாக்டர்கள் எதிர் பார்த்ததற்கு மாருக உயிரோடிருந்தார். அவர் இந்த உலகத்தில் உயிரோடிருந்த கடைசி இரவு அதுதான். அந்த இரவிலே அவருடைய சினேகிதர்களும், துணைவர்களும், காந்திஜியும் அளித்த சிச்ருஷைகளைப் பெற்றுக் கொண்டே யிருந்தார். பிறர் கேட்ட கேள்வி

களுக்கெல்லாம் பாதி நினைவிலே ஒரு வார்த்தையில் பதில் சொல்லுவார். பதில் சொல்ல முடியாவிட்டால் மெது வாகத் தலையை அசைப்பார். ஒருமுறை காந்திஜி அவர் பக்கத்திலே வந்தபோது அவர் கைகளை உயர்த்தி 'அது யார்?' என்று கேட்டார். அப்பொழுது அவர் அரைமணி நேரமாக 'பா'வுக்கு அருகே இருந்து சிசுருஷைகள் செய்ததினால் மிகுந்த ஆறுதல் அடைந்தார். 'பா'வுக்குப் பக்கத்திலே இருந்த காந்திஜி வயதிலே பல வருஷங்கள் குறைந்தவராகக் காணப்பட்டார். ஆனால் அவருடைய கைகள்மட்டும் நடுங்கிக் கொண்டிருந்தன. அந்தக் காட்சி முப்பத்திரண்டு வருஷங்களுக்குமுன் தென் அப்பிரிக்காவில் நிகழ்ந்த ஒரு ஸம்பவத்தை எனக்கு நினைப்பூட்டியது. என் தாயார் மூன்று மாதச் சிறை வாஸம் செய்து வெளிவந்த சமயம். முற்றிலும் சரீர சுக மிழந்தவராக வெளிப்பட்டார். என் பெற்றோருக்கு அறிமுகமான ஒரு ஐரோப்பியர் இவர்களை ரயில்வே ஸ்டேஷனில் சந்தித்தபோது, 'மிஸ்டர் காந்தி, இது தங்கள் தாயாரா?' என்று கேட்டார்.

"பொழுது விடிந்தது. தாயாருடைய தேக நிலைமை முன்னிலும் மோசமாகவே இருந்தது. என்றாலும் அமைதி யாகவே இருந்தார். திங்கட்கிழமையன்று அவர் 'பிழைப் போம்' என்று உறுதியாக நம்பிக்கொண்டிருந்தார். செவ் வாய்க்கிழமையன்று 'ஈச்வரன் விட்ட வழி' யென்று ஒப்புக் கொடுத்து விட்டார். சிறுநீர் கட்டிவிட்டதினாலே நோய் உச்சநிலை அடைந்தது. ஆனாலும் அவருடைய மனம் சாந்தமாக இருந்தது. திங்கட்கிழமையிலிருந்து மருந்து வேண்டாம் என்று மறுத்தார். தண்ணீரையும் மறுத் தார். ஆனால், செவ்வாய்க்கிழமை யன்று மத்தியானம் கங்கா தீர்த்தத்தில் ஒரு துளி விடுவதற்காக வாயைத் திறந்து காட்டினார். அதனால் சிறிது ஆறுதல் ஏற்பட்டது. பிற்பகல் மூன்றுமணிக்கு என்னை அழைத்து வர ஆள் அனுப்பினார். நான் போனவுடனே என்னை அருகில் அழைத்து, 'நான் போகிறேன்'; என்றைக்காவது ஒரு நாள் போகத்தானே வேண்டும்; இன்றைக்கே என்

போகக்கூடாது?' என்று பரிந்து கேட்டார். அவர் பெற்ற பிள்ளைகளிலே கடைக்குட்டி நான். நான்தான் அவரைப் போகவிடாதபடி தடுப்பது போல இருந்தது. மற்றவர்கள் முன்னிலையிலே இப்படிச் சொல்லிவிட்டு, வேறு பல கனிந்த மொழிகள் சொல்லி என் அணைப்பிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டார். அதற்கு முன் ஒருபொழுதும் அவருடைய குரல் அப்படிஒலித்ததுமில்லை; அதற்கு முன் ஒருபொழுதும் அவருடைய சொற்கள் அவ்வளவு ஸ்பஷ்டமாக இருந்ததும் இல்லை என்று எனக்குத் தோன்றியது. இப்படிப் பேசி முடிந்ததோ இல்லையோ, வெகு சீக்கிரம் யாருடைய உதவியுமில்லாமல் எழுந்து உட்கார்ந்தார். இரு கைகளையும் கூப்பித் தலை வணங்கித் தம்மாலியன்ற அளவு உரத்த குரலிலே சில நிமிஷங்கள் மட்டும் பிரார்த்தனை செய்தார். அவருடைய பிரார்த்தனையிலே திரும்பத் திரும்பப் பல்லவிபோல எழுந்த வார்த்தைகளை நான் இப்படித்தான் மொழி பெயர்க்க வேண்டும்:—

பகவான் என் அடைக்கலம்:
உன் கிருபைக்காக மன்றுடுகிறேன்!

"நான் என் கண்ணீரைத் துடைத்துக் கொள்வதற்காக அந்த அறையை விட்டு வெளியே வந்தேன். ஆகா கான் அரண்மனைத் திண்ணைக்கு அப்போதுதான் 'பெனிஸிலின்' மருந்து வந்து சேர்ந்தது. அதை உபயோகிக்க டாக்டர்களுக்கு விருப்பமில்லை. அதனால் பயன் ஏற்படாதென்று அவர்கள் கருதினார்கள். வேலை செய்யத் தவறின சிறு நீர்ப் பைகளைப் 'பெனிஸிலின்' திரும்பவும் உயிர்ப்பிக்காது. மேலும் காலம் மிகவும் பிந்தி விட்டது. என்றாலும் ந்யுமோனியா வியாதியைச் சொஸ்தப் படுத்தவல்ல இந்த அற்புத மருந்தைக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் நடந்தது. சுமார் ஐந்து மணிக்கு நான் என் தாயாரைப் பார்க்கத் தைரியம் கொண்டேன். அவர் என்னைப் பார்த்ததும் புன்னகை செய்தார். அந்தப் புன்னகை தான் இந்த 43 வருஷங்களாக என்னைக் கெடுத்தது! என்றாலும், தம் மகனை உத்ஸாகப்

படுக்[illegible]மரணத் தறுவாயில் தாய் அளித்த கடைசிப் புன்னகை அது. என் தாயார் மனுஷ்யப் பிரகிருதியின் வடிவம். அவர் என் விஷயத்திலே அதிக அன்பு பாராட்டினார். அவரிடத்திலே காணப்பட்ட இந்தப் பக்ஷபாதத்திற்காக அவரை மன்னிக்க வேண்டும் என்று அவருக்குத் தெரிந்த யாவரிடத்திலும் அவர் பொருட்டாகக் கேட்டுக் கொள்கிறேன். கடவுள் தம்முடைய சிருஷ்டியிலே மற்றெந்த விஷயத்திலும் சோபையாக விளங்கின ஓர் ஆத்மாவின் சிறு குறைகளை யெல்லாம் நிச்சயமாகவே மன்னிக்கிறவர். என் தாயாரின் புன்னகை 'பெனிஸிலின்' மருந்திலே எனக்கு அபார நம்பிக்கை ஏற்படச் செய்து விட்டது. ஆகையால், நான் இது விஷயமாக டாக்டர்களோடு பேசினேன். அவர்கள் அதனால் பயன் ஏற்படும் என்று நம்பவில்லை. என்றாலும் எனக்காக அதைப் பரிக்ஷித்துப் பார்த்துவிட உடன் பட்டார்கள்.

"தாய்க்கு வேதனை செய்யும் ஊசி குத்துதலுக்கு நான் உடன்பட்டுவிட்டதாக என் தகப்பனாருக்குத் தெரிய வந்ததும். மாலைதோறும் தோட்டத்திலே உலாவப் போகும் வழக்கத்தை விட்டு, என்னோடு இவ்விஷயமாகப் பேசத் தீர்மானித்துவிட்டார். 'நீ எவ்வளவு அற்புதமான மருந்தைத் தேடிவந்து கொடுத்தாலும் உன் தாயாரைச் சொஸ்தப்படுத்த முடியாது. நீ கட்டாயப் படுத்துவதனால் உடன்படுகிறேன். என்றாலும் நீ செய்வது முற்றிலும் தவறு. இரண்டு நாட்களாக அவள் மருந்தையும் விலக்கிவிட்டாள்; தண்ணீரும் குடிக்கமாட்டேன் என்கிறாள். இப்பொழுது அவள் ஈச்வரன் கையிலே இருக்கிறாள். உனக்கு இஷ்டமானால் நீ குறுக்கிடலாம்; ஆனாலும் நீ போகும் வழி சரியில்லை என்று உன்னை எச்சரிக்கிறேன். சாகப் போகிற தாய்க்கு நாலு மணி நேரத்திற்கு ஒரு தடவை அல்லது ஆறு மணி நேரத்துக்கு ஒரு தடவை ஊசி குத்திச், சிர வேதனை உண்டுபண்ணும் வழியைத் தான் தேடுகிறாய் என்பதை மறந்து போகாதே, என்றார்.

"அவரோடு வழக்காடுவது எனக்கு உசிதமன்று. ஊசி குத்தும் முயற்சியை நான் விட்டுவிட்டேன் என்று வைத்தியர்கள் அறிந்ததும் அவர்களும் அந்த வேலையிலிருந்து விடுதலையானார்கள்.

"நானும் என் தகப்பனாரும் இந்தமாதிரி ஒருபோதும் இவ்வளவு இனிமையாக வழக்காடினதே யில்லை. இது முடிந்தவுடனே தாயார் அப்பாவை அழைப்பதாகச் செய்தி வந்தது. அவர் உடனே சென்று தாயாரை ஏந்தி அணைத்துக்கொண்டிருந்தவர்களிடமிருந்து தாமே வாங்கிக்கொண்டு தமது மார்பிலே சாய்த்து அணைத்துக் கொண்டார். தம்மால் இயன்ற ஆறுதலெல்லாம் அளித்தார். அங்கே என் தாயாரைப் பார்த்துக்கொண்டிருந்த பத்துப் பேர்களோடு நானும் என் அம்மாவைப் பார்த்துக் கொண்டு நின்றேன். அப்பொழுது, அவருடைய முகத்திலே தோன்றிய இருள் வரவர ஆழ்ந்து தோன்றலாயிற்று. அவர் பேசினார். இன்னும் கொஞ்சம் சௌகரியமாக்கிக் கொள்ளச் சற்று அசைந்தார்" என்று தேவதாஸ் காந்தி எழுதியிருக்கிறார்.

"அந்த அறையிலே மகாத்மா காந்தியைத் தவிர, அவருடைய இரண்டு பிள்ளைகளும், ஹீராலால் காந்தியும் இருந்தார்கள். டாக்டர் ஸுசீலா நாயர், ஸ்ரீ பியாரேலால் ஸ்ரீமதி பிரபாவதி தேவி, (இவர் ஜயப்பிரகாச நாராயண் என்பவரது மனைவி), டாக்டர் கில்டர், ஸ்ரீ கனு காந்தி, சுவாமி ஆனந்தா என்பவர்கள் இருந்தார்கள். மகாத்மாவின் சில உறவினர்களும் இருந்தார்கள். மரண நேரத்திற்குச் சற்று முந்தி வெகு பரபரப்போடு உள்ளே புகுந்தவர் கஸ்தூரிபாவின் ஒரே சகோதரரான மாதவதாஸ் கோகுல்தாஸ்.

அன்னை கஸ்தூரிபாவின் மண்ணுலக வாழ்க்கையின் முடிவை இவருடைய மகனார் தேவதாஸ் காந்தி பின்வருமாறு காட்டுகிறார் :—

"இமைப் பொழுதிலே முடிவு வந்தது. காந்திஜி தம்முடைய கண்ணீர்ப் பெருக்கை அடக்கிக் கொண்டார்.

மற்றவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது. அன்றைக்கு அங்கே இருந்தவர்கள் எல்லோரும் அவரோடு சேர்ந்து வழக்கமாகப் பாடுவதும், தாயாருக்கு மிகவும் இஷ்டமானதுமான பிரார்த்தனை கீதத்தை அர்த்தசந்திராகாரமாகச் சூழ்ந்து நின்று கொண்டு பாடினார்கள். இரண்டு நிமிஷத்தில் எல்லாம் முடிந்தது. அகாக்கான் மாளிகைக் கைதிகளில் ஒருவர் பின்பு என்னிடம், 'உங்கள் சாப்பாடு முடிகிறதற்காகத் தான் காத்துக்கொண்டிருந்தார் என்று தோன்றுகிறது' என்றார். அந்த அரண்மனைச் சிறை யிருப்பிலே மாலைச் சாப்பாடு 6 மணிக்கு முடிந்துவிடும். என் தாயார் 7-35-க்கு தேகவியோகமானார்."

அன்றிரவு சிவராத்திரி புண்ணியகாலம். பிப்ரவரி மாதம் 22-ம் தேதி இரவில் பம்பாய் ஸர்க்கார் இந்தத் துக்ககரமான செய்தியைப் பின் கண்டபடி சுருங்கக்கூறி விளங்க வைத்தார்கள் :—

"பூனாவிலே, அகாக்கான் அரண்மனையிலே, இன்றைக்குப் பிற்பகல் 7-35-க்கு ஸ்ரீமதி காந்தி தேகவியோகமானார் என்று மிக்வும் துக்கத்தோடு பம்பாய் மாகாண ஸர்க்கார் அறிக்கை செய்கிறது."

10. தகனம்

22-ம் தேதி மாலை சிறைச்சாலை இன்ஸ்பெக்டர் ஜெனரல் கர்னல் பண்டாரி, அகாக்கான் அரண்மனைக்கு வந்திருந்தார். அவர் திரும்பவும் 7-30-க்கு வந்து 11-மணி மட்டும் அங்கேயே தங்கியிருந்தார். ப்ரேமலீலா டாக்கர்ஸேயும் ஸ்ரீ சாந்திகுமார் மொரார்ஜியும் அரண்மனையிலேயே 11-மணி மட்டும் தங்க அனுமதி பெற்றார்கள்.

23-ம் தேதி 10-40-க்கு கஸ்தூரிபாவின் உடலைத் தகனம் செய்தார்கள். அன்னையாருக்குச் செய்

வேண்டிய கடைசி ஈமக்கடன்களை அவருடைய கடைசிப் புதல்வர் தேவதாஸ் காந்தி செய்தார். அப்பொழுது அங்கே உறவினர்களும், நண்பர்களும் காந்தி - குடும்பத்தினருமாகக் கூடியிருந்தவர்களின் தொகை நூறுபேருக்கு அதிகமாகவே இருந்தது.

அன்னைக்கு வெண்மையான கதர் ஆடை உடுத்தி நெற்றிக்குக் குங்குமப் பொட்டிட்டு, மேலே கிச்சிலி வர்ணக் கதரால் போர்த்து மூடியிருந்ததைப் பார்த்த போது அவர் உறங்குவதாகவே தோன்றியது. மலர்களால் அலங்கரிக்கப் பெற்ற சடலத்தை அவருடைய பிள்ளைகளும் உறவினர்களும் அரண்மனையிலிருந்து 100-கஜ தூரத்திலே இருந்த தஹன ஸ்தலத்திற்குக் கொண்டு போனார்கள்.

இதற்குமுன் மகாதேவ தேஸாய்க்கு ஈமக்கடன்கள் செய்வதற்கு உதவி புரிந்த அதே புரோகிதர்தான் இந்தத் தட்வை அன்னை கஸ்தூரிபாவுக்கு ஈமக்கடன்கள் ஆற்ற உதவி புரிந்தார். சகல ஸம்ஸ்காரங்களும் ஸங்கிரஹமாகவும் அழகாகவும் நடைபெற்றன. அப்போது அங்கேயிருந்த ஸ்வாமி ஆனந்த், ஸ்ரீ கனுகாந்தி,—(மகாத்மா காந்தியின் சகோதரருக்குப் பேரன்)— ஸ்ரீ சாந்திகுமார் மோரார்ஜி, ஸ்ரீ கமலநயன பஜாஜ் மற்றும் பல நண்பர்கள் சிதையை அடுக்கிவைத்தார்கள். பாடையிலிருந்து சரீரத்தைச் சிதையில் எடுத்து வைத்தபோது, மகாத்மா காந்தி முதல் எல்லாரும் அழுதுவிட்டார்கள். அவர் தம்முடைய சால்வையால் முகத்தை மூடிக்கொண்டு அழுதார். இந்த ஒரு நேரத்தைத் தவிர மற்றெப்பொழுதும் அமைதியாகவே இருந்தார். அவர் துக்கத்தையோ மனக் கலக்கத்தையோ வெளியே காட்டிக்கொள்ளவில்லை. வந்தவர்களிடம் வழக்கப்படி பேசிக்கொண்டிருந்தார்.

முதலிலே செய்யவேண்டிய சடங்குகள் செய்தானதும், உடலைச் சிதையில் வைத்தவுடனே, மகாத்மா காந்தி, தாம் ஒரு ஆராதனை நடத்தப் போவதாகப் புரோகிதருக்கு ஸமிக்ஞை செய்தார். குர் - ஆன், பகவத் கீதை,

விவிலியம் முதலிய சில வேதங்களிலுள்ள பாகங்களை 'வேதகோஷம்' செய்தனர். ஆச்ரம அங்கத்தினர்களிலே சிலர், சில பாடல்களைப் பாடி பஜனை பண்ணினார்கள். டாக்டர் எம். டி. டி. கில்டர் ஜொராஸ்தர் வேதத்திலிருந்து சில சுலோகங்களைப் பாடினார். மிராபேன் விவிலியத்திலிருந்து ஒரு கீதம் பாடினார்.

இந்த ஆராதனை முடிந்ததும், மேற்கொண்டு ஆக வேண்டிய சடங்குகளை நடத்தும்படி புரோகிதருக்குச் சைகை செய்தார் மகாத்மா காந்தி. அப்பொழுது காந்திஜி ஒரு கோலை ஊன்றிச் சார்ந்து நின்று கொண்டு அன்னை உடலின்மேல் சந்தனக் கட்டைக் துவித்து நெய் பெய்தார்கள். தேவதாஸ் காந்தி கையிலே நெருப்புச் சட்டி எடுத்துக்கொண்டு மும்முறை சிதையை வலம் வந்தார்; 'கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா!' என்று ஆர்ப்பரித்துக் கொண்டே சிதைக்குத் தீ வைத்தார்கள்.

11. ஸஞ்சயனம்

கஸ்தூரிபா காந்தியின் சடலத்தை எரித்த சாம்பலைக் கரைக்கும் சடங்கு—ஸஞ்சயனம்—ஆகாகான் அரண்மனையிலே பிப்ரவரி மாதம் 25-ம் தேதி காலையில் நடைபெற்றது. அந்த நேரத்தில் காந்திஜி, அவருடைய புத்திரர்களான ஹிரா லால், ராமதாஸ், தேவதாஸ் என்பவர்களும், அரண்மனையில் உள்ள மற்றவர்களும் அங்கே இருந்தார்கள். இந்த ஸஞ்சயனச் சடங்கைப்பற்றி தேவதாஸ் காந்தி பின்வருமாறு எழுதுகிறார்:—

"திங்கட்கிழமையன்று கங்கா நதியிலே கரைப்பதற்காகக் கொண்டுபோகிற என் தாயாரின் சாம்பலோடு அலஹாபாத்துக்குப் பிரயாணம் பண்ணிக் கொண்டே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். இங்கே என் பக்கத்திலே இருக்கிறது என் தாயாரின் சிற்றெலும்புகள். வெள்ளிக்கிழமை யன்று தகுந்த சடங்குகள் முடிந்ததும், அரண்மனைவாசிகள், சிதையில் எரிந்து கிடந்த சாம்பல்

குவியலிலிருந்து பொறுக்கியெடுத்த எலும்புத் துண்டுகள் இவை. இந்த எலும்புகளை ஒரு வாழை இலையிலே முதலில் குவித்து வைத்தார்கள். பின்பு அதன்மேல் புஷ்பம், பூ மாலைகளிட்டு, குங்குமம் தூவித் தூபங் காட்டிச் செய்ய வேண்டிய சகல சடங்குகளும் செய்த பின்பு கடைசிப் பிரதிஷ்டைச் சடங்கும் நடந்தேறியது. முடிவிலே அதைக் கங்கைக்குக் கொண்டு போக ஆயத்தம் பண்ணினார்கள். நான் இன்றைக்குக் கடைசியாக என் தாயாரோடு பிரயாணம் பண்ணுகிறேன். இன்னும் ஒரு நாள் சென்று விட்டால், இனிமேல் ஒருபோதும் என் அன்னையோடு பிரயாணம் பண்ணமாட்டேன். இரு பெரு நதிகளின் ஸங்கமத்திலே சாம்பல் கரைக்க வேண்டுமென்பது மகாத்மா காந்தியின் தீர்மானம். 'புண்ணியமென்று கோடிக் கணக்கான இந்துக்கள் செய்வது தான் உன் தாயாருக்கும் திருப்தியாக இருக்கும்' என்று என் தந்தையார் எனக்குச் சொல்லியிருக்கிறார். இந்த விஷயத்தைப் பற்றி என் தந்தையார் கொண்ட அபிப்பிராயத்தைப் பண்டித மாளவியாஜியின் தந்தியும் உறுதி செய்து விட்டது. சாம்பலிலே பெரும் பகுதியை பூனாவுக்குப் பக்கத்திலே உள்ள இந்திராணி நதியிலே கரைத்து விட்டோம். வெள்ளிக்கிழமை காலையிலே இந்திராணி நதியிலே 'சாம்பல் கரைத்தல் சடங்கு' எனக்கும் என்னோடு அங்கே இருந்த மற்றவர்களுக்கும் மிகுந்த பக்தியையும் மனக் கிளர்ச்சியையும் விளைத்தது. தகனத்திற்குப் பின் இரண்டாவது நாள் ஆகாக்கான் அரண்மனையில் எரிந்த சிதையிலிருந்து சேகரித்த கொஞ்சம் சாம்பலோடு எவ்விதச் சேதமுமின்றிக் கிடந்த ஐந்து கண்ணாடி வளையல்களும் அகப்பட்டன. இப்பொழுது நான் கொண்டு போகிற சாம்பலோடு அந்தக் கண்ணாடி வளையல்களும் இருக்கின்றன."

"மகாத்மா காந்தி இந்தப் பரிசை முழுவதிலேயும் எப்படி நடந்துகொண்டார் என்பதைப் பற்றி நான் இரண்டொரு வார்த்தை சொல்லவேண்டும். அவர் மிகவும் களைத்தவராகக் காணப்பட்டார். தம்முடைய

வாழ்க்கையிலே நேரிட்ட துயரக் களஞ்சியமான இந்தப் பிரிவை நினைத்து மிகவும் துக்கப்படுகிறார். இன்றைக்கு அவர் அடைந்திருக்கிற சகல மகிமைக்கும் காரணம் அவருடைய பத்னிதான். அவர் வேதாந்தி; இந்திய வேதாந்திகளின் இயல்பிலே சாந்தத்தோடு துக்கத்தை அடக்கிக்கொண்டிருக்கிறார். அந்த நாட்களிலே அவரைச் சூழ இருந்த அயல்—சார்புகள் எல்லாம், சோகமந்தாரத்திற்கு இடங்கொடாத துக்கக் கோலமாகவே இருந்தது. வெள்ளிக்கிழமை காலையில் நானும் என் சகோதரர்களும் அவரிடம் விடை பெற்றுக்கொண்டபோது, அவர் தமது வழக்கப்படி, கண்ணீரை மறைக்க நகைச்சுவையான பேச்சுடன் கலகலவென்று சிரித்துக்கொண்டே வழியனுப்பி வைத்தார். அவருடைய தேகஸ்திதி சரியானபடி இருக்கிறது என்று நானும் நம்பிக்கொண்டு பிரயாணம் பண்ணுகிறேன்.

அநுபந்தம்

ஆச்ரமத்தில் அன்னை கஸ்தூரிபா

ஸாபர்மதி ஆச்ரமத்தில் அன்னை கஸ்தூரிபாவின் வாழ்க்கையைக் குறித்துப் "பழைய ஆச்ரமவாஸி" ஒருவர் 'தினமணி' பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார் :—

இரும்புக்கு ஒப்பான காந்திஜியின் மனேதிடம் யாவரும் அறிந்த விஷயமே யாகும். அவர் ரொம்ப சாந்த சுபாவம் உள்ளவர். ஆனால், அசைக்க முடியாதவர். ஒருவர் காந்திஜிக்கு எவ்வளவுக் கெவ்வளவு வேண்டியவராக இருக்கிருரோ அவ்வளவுக் கவ்வளவு ரொம்ப கண்டிப்பான கட்டுப்பாட்டை காந்திஜி அவருக்கு ஏற்படுத்துவார். காந்திஜீ தன் விஷயமாகக் கொஞ்சங்கூடப் பச்சாத்தாபமின்றிக் கடுமையான கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வது இதனல் தானே என்னவோ? இதனல் அவர் எதையும் சகித்துக் கொண்டு போகாதவர் என்றும் எண்ணுவதற்கு இல்லை. எதிர்ப்பு அவருக்குப் பிடிக்கும். மனப்பூர்வமான எதிர்ப்பை அவரே உத்ஸாகமாக ஊக்கப்படுத்துவார். அப்படி யிருந்தும் கூட ஜனங்கள் அவரை எதிர்ப்பதில்லை. ஏனெனில் அவர்களுக்குத் தங்களிடமுள்ள நம்பிக்கையை விட காந்திஜியிடம் அதிக நம்பிக்கை உண்டாகிறது. ஆனல், ஸாபர்மதியில் இருந்த ஸத்யாக்ரஹ ஆச்ரமத்திலே விதி விலக்கான ஒருவர் இருந்தார். அவர் தான் காந்திஜியின் ஹிருதய கமலத்தில் இருப்பவரும், அவருடைய தர்ம பத்தினியுமாகிய ஸ்ரீமதி கஸ்தூரிபா.

கண்டிப்பான அன்னை

ஸத்யாக்ரஹ ஆச்ரமத்திலே அவரை நாங்கள் எல்லோரும் "பா" என்று அழைப்போம். "பா" என்ருல்

அம்மா (தாயார்) என்று அர்த்தம். அதிகார தோரணையைக் காட்டும் உருவம்; குறு குறுவென்று ஒளி வீசும் கண்கள்; கண்டிப்புத் தொனிக்கும் குரல். உறுதியைக் காட்டும் இறுக மூடிய உதடுகள். இஷ்டப்பட்டால் அவர் இனிமையாகப் பேசுவார், பழகுவார். அதே சமயத்தில் வளைந்து கொடுக்காதவராகவும், வைராக்யத்துடனும் இருப்பார். கார்த்திஜியின் குடிசையில் சமையல் அறை உள்பட ஒரு பகுதி அவர் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. ஆயினும், அந்த அன்பான தாய்க்கு எவ்வளவு வேலை இருக்கும் தெரியுமா? தம் கணவர், பேரன்கள், ஆச்ரமத்தில் உள்ள 20 பேர்கள் ஆகிய அத்தனை பேருக்கும் அவர் உணவு சமைத்துப் பரிமாறவேண்டும்.

ஆச்ரமத்தில் 200 பேர் உண்டு. அவர்களில் 20 பேர் அன்னை கஸ்தூரிபாவின் பராமரிப்பில் விடப்பட்டிருந்தனர்.

தன் இலாகாவில், அதாவது சமையலறையில், 'அன்னை கஸ்தூரிபா சும்மா மேலாக மேற்பார்வை பார்த்து விட்டு' போகமாட்டார். அவர்தான் பிரதான சமையற்காரர். அவருக்கு உதவி செய்ய இதரர்களும் இருப்பார்கள். ஆனல், பெரும்பாலான சுமை அவர் மீது தான் விழும். அவர் அதிசயமான சுறுசுறுப்பு உள்ளவர். அவர் சுபாவமும் சில சமயம் அப்படித்தான். கண்டிப்பாக் வேலை வாங்கும் யஜமானி. கடைசி நிமிஷம் வரை தவறுமல் வேலை செய்வார். அவ்வண்ணமே அவர் பிறரையும் வேலை வாங்குவார். சோம்பேறி அல்லது அசிரத்தையானவர் அவருடன் சமையலறையில் இருந்து காலம் தள்ளுவது கஷ்டம். அந்தச் சமையலறைக்குச் சென்ற பல இளைஞர்கள் ஒவ்வொருவராக வந்து விட்டனர். ஒருவர் உழைப்பாளியாக இருந்தால் அங்கு அவருக்கு எவ்வித் தொந்தரவும் ஏற்படாது.

சமையல் அறையை கார்த்திஜி எப்போதும் கவனிப்பார். இந்திய அரசியலில் இருக்கும் சிரமங்களைப் போலச் "சமையலறைக்" கஷ்டங்களையும் நன்கு உணர்ந்தவர் கார்த்திஜி.

ஒரு சமயம்...!

அந்த இன்பகரமான பழைய நாட்களில் நடந்த ஒரு ஸம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. காந்திஜியுடன் அவர் வாதாடும் ஸம்பவம் அது. அன்னையின் கக்ஷியில் தான் நியாயம் இருக்கும். அந்த மாதிரிச் சமயங்களில் காந்திஜியே கொஞ்சம் பயப்படுவார். அன்று ஸாபர்மதி ஆச்ரமம் இந்திய அரசியலின் தலைநகரமாக விளங்கி வந்தது. ஆகவே, எதிர்பாராத விதமாக விருந்தாளிகள் வந்து கொண்டேயிருப்பார்கள். ஆச்ரமத்தில் உள்ள பல சமையலறைகளுக்கு இவர்கள் பிரித்து அனுப்பப் படுவார்கள். ஆயினும், அன்னை கஸ்தூரிபா பங்குக்கு மட்டும் எல்லோரையும் விட அதிகப் பங்கு விருந்தாளிகள் ஒதுக்கப்பட்டிருப்பார்கள். சொல்லாமலும், எதிர்பாராத வகையிலும் விருந்தாளிகள் வந்து விடும் போதுதான் அன்னைக்கு கொஞ்சம் கோபம் வரும். காந்திஜியிடம் சென்று தம் மனத்தில் உள்ளதைக் கொட்டி விடுவார். அப்போது காந்திஜி மிகவும் பணிந்து பேசுவார். சாதுர்யமாக நிலைமையைச் சமாளிப்பார். அந்தமாதிரிச் சமயங்களில் அன்னையைக் கண்டு அவர் சற்றுப் பயப்படுவார்.

ஒரு நாள் இந்த மாதிரி நேர்ந்துவிட்டது. அன்னையும் இதரர்களும் சமையலறையை அலம்பி விட்டுக் கதவைச் சாத்தி விட்டனர். நாளெல்லாம் வேலை செய்த அன்று அன்னைக்குக் களைப்பாக இருந்தது. யாருக்குத்தான் இருக் காது? அன்று அவருக்கு உடம்பும் சற்று அசௌக்ய மாக இருந்தது. தமது அறைக்குச் சென்று படுத்துக் கொண்டார்.

பச்சைக் குழந்தை மாதிரி...!

அந்தச் சமயத்தில் காந்திஜி அடிமேல் அடி வைத்து மெதுவாக வந்தார், தன் ஸகா ஒருவரைச் சைகை காட்டி அருகே அழைத்தார். பக்கத்து அறையில் இருக்கும் ஸ்ரீமதி கஸ்தூரிபாவைத் தொந்தரவு செய்யக்கூடாதென்பதற் காக காந்திஜி "குசு குசு" வென்று பேசினார். காலஞ்

சென்று ஸ்ரீ மோதிலால் நேரு உட்படப் பல பிரமுகர்கள் இன்னும் ஒரு மணி நேரத்தில் வருவார்களென்றும், அவர்களுக்கு உணவு தயாராயிருக்க வேண்டுமென்றும் கூறினர். அன்னை சயனித்துக் கொண்டிருக்கும் அறையை பார்த்து, 'சத்தம் போடாதீர்கள்' என்பதற்கு அறிகுறியாக உதட்டின் மேல் விரலை வைத்துச் சைகை காட்டிவிட்டு "அவரைத் தொந்தரவு செய்யவேண்டாம். நீங்களே அடுப்பு மூட்டி, கறி நறுக்கி எல்லாக் காரியங் களையும் செய்யுங்கள். அவசியமாயிருந்தால் மட்டும் அவரை அழையுங்கள். ஆமாம். இந்த மாதிரியாக அவர் கோபிக்க இடமில்லாமல் சந்தடியில்லாமல் நீங்கள் காரியம் செய்ய வேண்டும். அவர் என்னிடம் வந்து விடாதபடி நீங்கள் காரியம் செய்தீர்களோ, உங்களுக் கெல்லாம் நான் பரிசு தருவேன்" என்று கூறினர். ஒரு பாவமும் அறியாத பச்சைக் குழந்தை சதி செய்தால் எப்படி யிருக்குமோ, அந்த மாதிரி இருந்தது அவர் பார்வையும் பேச்சும்.

கஷ்ட காலம்...!

உடனே இதரர்கள் சமையலறைக்குள் புகுந்து காரியம் செய்யத் தொடங்கினர்கள். ஒருவர் அடுப்பு மூட்டினர். இன்னொருவர் கறிகாய் நறுக்கினர். மற் றொருவர் மாவு பிசைந்தார். கஷ்டகாலம், பாருங்கள்! ஒரு பிள்ளையாண்டான் பித்தளைத் தட்டு ஒன்றைத் தடா லென்று கீழே போட்டுவிட்டான்.

அன்னை விழித்துக்கொண்டார். அங்கே, பூனை ஒன்று உண்டு. அது அடிக்கடி வந்து சமையலறையில் உள்ள சாமான்களைத் தள்ளிவிட்டுப் போகும். பூனைதான் வந்து எதையோ தள்ளிவிட்டுப் போகிறதாக்கும் என்று எண்ணிச் சமையலறைக்குள் வந்தார் அன்னை; அங்கு நடக்கும் காரியங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டவராய் வாசற்படியில் நின்றார். "இதென்ன இது?" என்று கேட்டார். விஷயத்தைக் கூறியவுடன் புன்முறுவல்பூத்து

'எல்லாம் அவர் வேலை என்பது எனக்குத் தெரியும்' என்பதுபோல விரலை ஆட்டினார்.

"என்னைக் கூப்பிடுவதுதானே! நீங்கள் நினைப்பது போல அவ்வளவு களைத்துப் போய் நான் விழுந்துவிட வில்லையே" என்றார்.

காந்திஜியே பயப்படுவார்

இரவு வந்தது; பிரார்த்தனை முடிந்தது; எல்லா விருந்தாளிகளும் போன பிறகு அன்னை காந்திஜியிடம் சென்றார். இடுப்பில் இரு கைகளையும் வைத்துக் கொண்டார். விஷமச் சிரிப்புடன் காந்திஜியை நோக்கினார்.

"விருந்தாளிகள் வரும் விஷயத்தை என்னிடம் சொல்லி என்னைச் சமைக்கச் சொல்கிறதுதானே! நான் என்ன சோம்பேறிப் பிண்டம் என்று நினைத்துக்கொண் டீர்களா?" என்று கேட்டார்.

காந்திஜியும் சிரித்துக்கொண்டே "இந்தமாதிரிச் சமயங்களில் உன்னிடம் எனக்குப் பயம் உண்டு என்பது தான் உனக்குத் தெரியுமே!" என்றார்.

அதை நம்ப மறுப்பவர்போல, அன்னை கலகல வென்று சிரித்தார். "ஒஹோ, அழகு! என்னைக் கண்டு நீங்களா பயப்படுகிறவர்?" என்று சொல்வதுபோல இருந்தது அந்தச் சிரிப்பு. ஆனால் காந்திஜி சொன்னதென்னவோ வாஸ்தவம்தான். உலகத்தில் யாரிடமும் காந்திஜிக்குப் பயம் கிடையாது. அவருக்கு யாரிடமாவது பயம் உண்டென்றால் அன்னை கஸ்தூரிபாவிடம்தான் கொஞ்சம் பயம் உண்டு.

Printed at the Indian Express Press, Mount Road, Madras.

தினமணி வெளியீடு—2

ரவீந்திரநாத டாகுர்

வாழ்க்கையும் கவிதையும்

ஆசிரியரைக் குறித்தும் நூலைக் குறித்தும் ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி தமது முன்னுரையில் பின் வருமாறு கூறியுள்ளார்:

"ரவீந்திரநாத டாகுரின் மெய்ம்மறந்த காதலர்—பக்தர்... மூன்று இலக்கியத்தில்—ஸம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம்—தம் வழியிலே ஊறிப் பிறவியிலே ஸங்கீதத்தில் லயித்த மனோநிலை உள்ள ரஸிகர்...கதை போல் ரஸமாக, போற்றத்தக்க முறையில், ஸ்ரீ கி. சந்திரசேகரன் எழுதி யிருக்கிறார்."

"ரவீந்திரருடைய வாழ்க்கை பெரிது; கவிதை உன்னதமானது. இந்த இரண்டையும் கலைக் கண்களோடு பார்த்து இதன் ஆசிரியர் எழுதி யிருக்கிருர்."

"கலைமகள்"

"இதைப் படிக்கும்போது ரவீந்திர நாதரின் ஒப்பற்ற கவிதைகளைப் படிப்பது போலவே ஒரு உணர்ச்சி உண்டாகின்றது. நாம் வாழும் இந்த உலகை மறந்து கவிகள் வசிக்கும் கற்பனை - உலகில் சஞ்சரிக்கத் தொடங்கி விடுகிறோம். டாகுர் எழுதியுள்ள பலவேறு நூல்களின் ஸாராம்சங்களை ஆசிரியர் சந்திரசேகரன் வெகு சுருக்கமாகவும் அழகாகவும் இப்புஸ்தகத்தில் எடுத்துக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. டாகுரைப்பற்றி இவ்வளவு சிறந்த விமர்சனம் இது வரையில் தமிழில் வெளிவந்ததில்லை என்றே நினைக்கிறேன்."

"ஆனந்த விகடன்"

96 பக்கங்கள் விலை அணா 8

தினமணி வெளியீடு

பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ.

புதிய புதிய தமிழ்ப் புஸ்தகங்களை விதம் விதமான அழகு வாய்ந்த பதிப்புக்களாக வெளியிட்டு, தமிழின் மறுமலர்ச்சிக்குப் பணிசெய்ய வேண்டுமென்பது இந்த வெளியீடுகளின் பொதுவான நோக்கம்.

வெளிவந்த நூல்கள்

1. மகாத்மா காந்தி — நினைவு மாலை
எஸ். அம்புஜம்மாள்

2. ரவீந்திரநாத டாகுர் — வாழ்க்கையும் கவிதையும்
கி. சந்திரசேகரன் எம். ஏ., பி. எல்.

3. கைலாஸம் — மானஸரோவர்
உள்ளது உள்ளபடியே வர்ணிக்கும் யாத்திரைப் புஸ்தகம்
எஸ். வேதாந்தம்

பக்கம் 96 ஒவ்வொன்றும் விலை அணு 8
தபால் செலவுடன் விலை அணு 10

4. போலந்து — பின்லந்து
த. கிருஷ்ணமூர்த்தி
மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் முன்னுரையுடன்
பக்கம் 124 விலை அணு 12
தபால் செலவுடன் விலை அணு 14

5. சிறு கதை மஞ்சரி
எஸ். வையாபுரிப் பிள்ளை பி. ஏ., பி. எல். முன்னுரையுடன்
பக்கம் 136 விலை ரூ. 1
தபால் செலவுடன் விலை ரூ. 1-2-0

6. ஹாஸ்ய நாடகங்கள், கட்டுரைகள்
ஸ்ரீ. வி. ஸி. கோபாலரத்தினம், பி. ஏ. பி. எல்.
எஸ். ஒய். கிருஷ்ணஸ்வாமி, ஐ. ஸி. எஸ். முன்னுரையுடன்
பக்கம் 274 விலை ரூ. 2
தபால் செலவுடன் விலை ரூ. 2-2-0

7. திலக் கோவிந்தன்
ஸ்ரீ அ. மாதவையா
மொழிபெயர்த்தவர்: வே. நாராயணன் எம். ஏ., எல். எல்.
பக்கம் 132 விலை ரூ. 1
தபால் செலவுடன் விலை ரூ. 1-2-0